1. பெரிய திருமொழி – பாடபேத அட்டவணை

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
1.	வாடினேன் (1 – 1 – 1)	பெரும்பதம்**தெரிந்து**	பெரும்பதம்**திரிந்து**
2.	(1 – 2 – 1 முதல் 1 – 2 – 10 வரை) பாடபேதங்கள் 10	**பிருதி**	**பிரிதி**
3.	மறங்கொள் (1 – 2 – 4)	பிற**ங்குமா**மணி	பிற**ங்கல்**மாமணி
4.	கரைசெய்மாக்கடல் (1 – 2 – 5)	அமர்ந்தநலிமய**த்து**ள்	அமர்ந்தநலிம**யத்து**
5.	பணங்கள்ஆயிர முடை (1 – 2 – 6)	இருந்தநலிமயத்**துள்**	இருந்தநலிம**யத்து**
6.	கலங்கமாக்கடல் (1 – 2 – 2)	இருந்தநலிமய**த்துள்**	இருந்தநலிம**யத்து**
7.	துடிகொள் (1 – 2 – 3)	இருந்தநலிமய**த்துள்**	இருந்தநலிம**யத்து**
8.	இரவு கூர்ந்திருள் (1 – 2 – 8)	அருவரைஇமய**த்துள்**	அருவரைஇம**யத்து**
9.	ஓதியாயிர (1 – 2 – 9)	இருந்த நலிம**யத்துள்**	இருந்த நலிம**யத்து**
10.	தோணங்கல்குல் (1 – 4 – 6)	கடும்புனல்**கயத்த**	கடும்புனல் **தகைத்த**
11.	தாயாய்வந்த (1 – 5 – 6)	தயிரும்**இழு**தும்	தயிரும்**விழுதும்**
12.	ஊனிடை (1 – 6 – 9)	ஊ**னிடைச்**சுவர்	ஊ**னுடைச்**சுவர்

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
13.	(1 – 7 – 1 முதல் 1 – 7 – 9 வரை)	சிங்க**வேள்**குன்றமே	சிங்க**வேழ்**குன்றமே
14.	எவ்வம்வெவ்வேல் (1 – 7 – 4)	**எவ்வம்**வெவ்வேல்	**எவ்வும்**வெவ்வேல்
15.	மென்றபேழ்வாய் (1 – 7 – 5)	நீள்விசும்**பூடிரிய**	நீள்விசும்**பூடெரிய**
16.	நல்லைநெஞ்சே (1 – 7 – 9)	**நல்லை**நெஞ்சே	**நல்ல** நெஞ்சே
17.	செங்கணாளி (1 – 7 – 10)	சிங்க**வேள்**குன்றுடைய	சிங்க**வேழ்**குன்றுடைய
18.	பாருநீரெரி (1 – 8 – 7)	சோருமாமுகில்**தோய்**தர	சேருமாமுகில்**தேய்**தர
19.	தாயே தந்தை (1 – 9 – 1)	நோயேபட்டொழிந்தேன் **நுன்னைக்**காண்பதோர்	நோயேபட்டொழிந்தேன் **உன்னைக்**காண்பதோர்
20.	குலந்தான் (1 – 9 – 4)	நிலம் தோய்**நீள்**முகில் சேர்	நிலம் தோய் **நீர்** முகில் சேர்
21.	இலங்கைப்பதி (1 – 10 – 2)	இலங்கைப்பதிக்கு **அன்று** இறையாய	இலங்கைப்பதிக் **கென்றி**றையாய
22.	பாவியாது(2 – 1 – 4)	**கோவி** நாயகன்	**கோவல்**நாயகன்
23.	சேயன்(2 – 1 – 8)	**ஆயர்**நாயகற்கு	**ஆய**நாயகற்கு
24.	கூடியாடி(2 – 1 – 9)	பணிந்தேத்திக் காண்**கிலர்**	பணிந்தேத்திக் காண்**கிலா**
25.	இன்துணை (2 – 3 – 5)	தூது சென்றியங்கும் **என்** துணை	தூது சென்றியங்கும் **இன்**துணை
26.	அந்தகன் சிறுவன் (2 – 3 – 6)	சந்**தமல்**குழலாள்	சந்தமர்குழலாள்

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
27.	அலமன்னுமடல் (2 – 4 – 3)	சுரிசங்க**மெடுத்து**	சுரிசங்கமடுத்து
28.	மாலும்கடலார (2 – 4 – 5)	நீலமுகில்**வண்ணனெ** மக்கிறைவற்கு இடம்	நீலமுகில்**வண்ணரெ** மக்கிறைவர்க்கிடம்
29.	பூண்டவத்தம் (2 – 5 – 2)	**நீண்டவத்தை**க்கரு முகிலை **எம்மான்** தன்னை	**நீண்டஅத்தக்**கரு முகிலை**அம்மா**ன் தன்னை
30.	படநாகணை (2 – 5 – 10)	தலை**வன்** தன்னை	**தலைவர் தம்மை**
31.	எனத்தின் (2 – 6 – 3)	மகிழ்ந்தேத்தி**வலங்** கொள்ள	மகிழ்ந்தேத்தி**வரங்** கொள்ள
32.	செழுநீர்மலர்க் கமலம் (2 – 6 – 8)	திரை**யுந்து**வன்பகட்டால்	திரை**யுந்த**வன்பகட்டால்
33.	ஊழியின் (2 – 7 – 4)	ஊழி**யின்**பெரிதால்	ஊழி**யில்**பெரிதால்
34.	பொன்குலாம் (2 – 7 – 9)	**இவ்வண**ங்கினுக்கு	**என்ன**ணங்கினுக்கு
35.	மஞ்சுயர்மாமணி (2 – 8 – 4)	அதன் மருப்**பன்று** வாங்கும்	அதன் மருப்**பொன்று** வாங்கும்
36.	சொல்லுவன் (2 – 9 – 1)	நல்லரன்**நான்முகன் நாரணனுக்கு**	நல்லரன்**நாரணன் நான்முகனுக்கு**
37.	தூம்புடை (2 – 9 – 5)	தென்னவனைத்**திசைப்ப**	தென்னவனைத் **திகைப்ப**
38.	திண்படை (2 – 9 – 6)	செங்கோல் நடப்ப **விடை** வெல்கொடி	1. செங்கோல் நடப்பவிட வெல் கொடி 2. செங்கோல் **நடப்பவிறல்**வெல்கொடி
39.	இருந்தண் மாநிலம் (3 – 1 – 1)	வளைமருப்பினில் அகத்**தொடுக்**கி	வளைமருப்பினில் அகத்**தடக்கி**

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
40.	விரைகமழ் (3 – 1 – 8)	**அடல்**மழைக்கு	**அடர்**மழைக்கு
41.	பேய்மகள் (3 – 3 – 2)	**புலங்கெ**ழு கோவியர்பாடி	**பொலன்**கெழு கோவியர்பாடி
42.	பண்டுஇவன் (3 – 3 – 3)	ஆய்ச்சியர் கூடி **இழிப்ப**	ஆய்ச்சியர் கூடி **அழைப்ப**
43.	எய்யச்சிதைந்தது (3 – 3 – 6)	வையத்**தெவரும்** வணங்க	வையத்**தவரும்** வணங்க
44.	எய்யச்சிதைந்த (3 – 3 – 6)	வையத்**தெவரும்** வணங்க	வையத்**தேவரும்** வணங்க
45.	தேனமர்பூம்பொழில் (3 – 3 – 10)	மங்கையர்கோன் **மருவார்**	மங்கையர்கோன் **மருவார்தம்**
46.	தேனமர்பூம்பொழில் (3 – 3 – 10)	சாராதீவினை**தானே**	சாரகில்லா வினை **தாமே**
47.	நான்முகன் (3 – 4 – 2)	நான்முகன் நாள் **மிகைத்**தருக்கை	நான்முகன் நாள் **மிகத்**தருக்கை
48.	நான்முகன் (3 – 4 – 2)	உரோமசனால்**நவிற்றி**	உரோமசனால்**நவிற்று**
49.	பொருவில் வலம்புரி (3 – 4 – 7)	திரை**நீர்த்**தெள்கி	திரை**நீத்தெ**ள்கி
50.	செங்கமலத்து (3 – 4 – 10)	காழிச்சீராமவிண்ணகர் **என்செங்**கண்மாலை	காழிச்சீராமவிண்**ணாரின்** செங்கண்மாலை
51.	நென்னல் போய் (3 – 5 – 3)	**இம்மைக்** கென்றிருந்தேன்	**இன்மைக்கு** என்றிருந்தேன்
52.	நென்னல் போய் (3 – 5 – 3)	அரிவார்முகத் **தெழு**வாளை போய்	அரிவார்முகத் **தெழவாளை** போய்
53.	கள் வன் கொல் (3 – 7 – 1)	பெற்ற தாய**ரைவிட்ட** கன்று	பெற்ற தாய**ரையிட்ட** கன்று

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
54.	தாய் எனையென்று (3 – 7 – 5)	என்னை அகன்ற **இவள்**	என்னை அகன்ற **வன்பின்**
55.	இந்திரனும் (4 – 1 – 4)	எழில**மைந்த**	எழில**மர்ந்த**
56.	இந்திரனும் (4 – 1 – 4)	எமக்**கருளென**	எமக்க**ருளென்ன**
57.	ஓடாதவாளரி (4 – 1 – 7)	சேடேறுபொழில் **தழு**வு	சேடேறுமலர்ப் **பொழில்சூழ்**
58.	பல்லவம் (4 – 2 – 2)	ஒல்லைவ**ந்திறப்**பாய்ந்து	ஒல்லை**வந்துறப்** பாய்ந்து
59.	பருங்கை யானை (4 – 2 – 4)	கரும்பி**னூடு**யர்	கரும்**பினோ**டுயர்
60.	வசையறுகுறளாய் (4 – 3 – 4)	மாவலி **வேள்வி**	மாவலி**வேள்வியில்**
61.	ஏழுலகும் தாழ் வரையும் (4 – 4 – 9)	எங்கும் **மூடி**	எங்கு**மோடி**
62.	தூம்புடை (4 – 5 – 1)	**பனைக்**கை வேழம்	**பணைக்கை** வேழம்
63.	தூம்புடை (4 – 5 – 1)	பொன்னி **முற்றும்** புகுந்து	பொன்னி **முற்றம்** புகுந்து
64.	கவ்வைவாளெயிற்று (4 – 5 – 2)	வவ்வியஇடும்பை**கூ**ர	வவ்வியஇடும்பை**தீர**
65.	அரக்கராவிமாள (4 – 8 – 5)	நின்மலன்தா**னென்று**	நின்மல**னென்றென்று**
66.	சொல்லாதொழிய கில்லேன் (4 – 9 – 6)	**நும்**மடியார்	**உம்** அடியார்
67.	சொல்லாதொழிய கில்லேன் (4 – 9 – 6)	இவ்வுல**கத்தில்**	இவ்வுல**கத்து**

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
68.	எந்தை தந்தை தம்மான் (4 – 9 – 9)	தம்மா**னென்றென்று** எமரேழளவும்	தம்மா**னென்றெ** மரேழளவும்
69.	காற்றிடை (4 – 10 – 6)	காற்றிடைப்பூளை கரந்**தென**	காற்றிடைப்பூளை கரந்**தன**
70.	ஒள்ளிய கருமம் (4 – 10 – 7)	செய்வனென்று**ணர்ந்த**	செய்வனென்**றுணர்ந்து**
71.	முடியுடை அமரர் (4 – 10 – 8)	**மார்வை**முன் கீண்ட	**மார்வம்** முன் கீண்ட
72.	அறிவதறியான் (5 – 1 – 1)	குறியமாணு**ருவாய**	குறியமாணு**ருவாகிய**
73.	கற்றாமறித்து (5 – 1 – 10)	நில்லாதுயர்**தாமே**	நில்லா துயர் **தானே**
74.	கஞ்சன் நெஞ்சும் (5 – 4 – 7)	**வாழிட**மென்பரால்	**வாழுமிட**மென்பரால்
75.	கலையுடுத்த (5 – 4 – 6)	**வாழிட**மென்பரால்	**வாழுமிட**மென்பாரல்
76.	கஞ்சன் நெஞ்சும் (5 – 4 – 7)	**மாமறை**யோர்	**மறை**யோர்
77.	சேயன் என்றும் (5 – 4 – 9)	**மாயை**யாரும்	**மாயையை**யாரும்
78.	பந்தோடு கழல் (5 – 5 – 9)	**அந்தோ வந்து என்** மகளை	**அந்தோ வென் பொன்** மகளை
79.	வளர்ந்தவனை (5 – 6 – 4)	தளர்ந்**ததிர**	தளர்ந்**துதிர**
80.	சிந்தனையை (5 – 6 – 7)	வந்து**என்**மனத்து	வந்து **எனது**மனத்து
81.	ஆமருவிநிரை மேய்த்த (5 – 6 – 10)	சாராதீவினை**தானே**	சாரா தீவினை **தாமே**

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
82.	வேதவாய் மொழி (5 – 8 – 8)	**கடியதோர்** தெய்வம்	**கடிய**தெய்வம்
83.	மாடமாளிகை (5 – 8 – 10)	**நும்மிடைப்** பாவம் நில்லாவே	**நும்முடைப்** பாவம் நில்லாவே
84.	கையிலங்காழி சங்கன்(5 – 9 – 1)	கையிலங்காழி**சங்கன்**	கையிலங்காழி**சங்கம்**
85.	ஒருவனைஉந்திப்பூ மேல் (5 – 9 – 3)	கருவரைவண்ணன் **தென்**பேர்	கருவரைவண்ணன் **தன்**பேர்
86.	தீதறுநிலத்தொடு (5 – 10 – 1)	தாய் **செற**உளைந்து	தாய் **சிற**வுளைந்து (சீற– சிற)
87.	நிலவொடு வெயில் (6 – 1 – 4)	உலகமும்**உயிர்களு**ம்	உலகமும்**உயிரும்**
88.	பொறுத்தேன் (6– 2 – 1)	ஆர்வச்செற்றம வை**தம்மை**	ஆர்வச்செற்றம வை**தன்னை**
89.	மானேய்நோக்கியர் (6 – 2 – 3)	ஊ**னேயாக்கை**	ஊ**னேராக்கை**
90.	பிறிந்தேன் பெற்ற மக்கள் (6 – 2 – 4)	செறிந்தேன் **நின்னடிக்கே**	செறிந்தேன் **நின்னடைந்தேன்**
91.	தீவாய்வல்வினையார் (6 – 2 – 8)	வெந்நரகத்து**இடவு**ற்று விரைந்து வந்தார்.	வெந்நரகத்து**இடருற்று** விரைந்து வந்தார்.
92.	சொல்லாய்திரு மார்பா (6 – 3 – 9)	மல்லா**குடமாடீ**	மல்லார்**குடமாடீ**
93.	கொங்கார்குழலார் (6 – 4 – 3)	செங்கோல் **வல**வன்	செங்கோல் **வள**வன்
94.	தாராளன்தண்ணரங் கவாளன் (6 – 6 – 9)	**இவரி**வரென்று	**அவரி**வரென்று
95.	முனியாய் வந்து (6 – 7 – 2)	நனிசேர்கமலம் முகம் காட்டும்	நனிசேர்வயலுள் முத்தலைக்கும்

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
96.	பைவிரியும்வரி யரவில் (7 – 4 – 7)	**திருவடி**வைச் சிந்தித்தேற்கு	**திருவடியை**ச் சிந்தித்தேற்கு
97.	உண்ணாதுவெங் கூற்றம் (7 – 4 – 8)	**ஒவாத**பாவங்கள் சேரா	**ஒவாது**பாவங்கள் சேரா.
98.	உண்ணாதுவெங் கூற்றம் (7 – 4 – 8)	கண்ணாரக்**கண்டுரு**கி	கண்ணாரக் **கண்டிறைஞ்**சி
99.	கள்ளத்தேன் (7 – 4 – 9)	**போதொரு**கால் கவலை யென்னும்	**போதருகால்** கவலை யென்னும்
100.	தந்தை காலில் (7 – 5 – 1)	முந்திவானம் மழை **பொழியும்**	முந்திவானம் மழை **பொழிய**
101.	நிலையாளாக (7 – 6 – 8)	**அலையார்**கடல் போல் முழங்கும் **தென்னழு**ந்தையில்	அ**லையாரும்** கடல் போல் **முழங்க**ழுந்தையுள்
102.	திருவுக்கும்திரு வாகிய (7 – 7 – 1)	ஒருவற்காற்றியுய்யும் வ**கையின்றால்**	ஒருவற்காற்றியுய்யும் வ**கையென்றால்**
103.	சிலம்பு முதல் கலனணீந்தோர் (7 – 8 – 4)	**செங்கண் கு**ன்றம்	**செங்கற்** குன்றம்
104.	சினமேவும்அடலரி (7 – 8 – 5)	கோவை **யேய்**வாய் மரகதம் போல்	கோவை **ஏய்**வாய் மரகதம் போல்
105.	பந்தணைந்த மெல்விரலாள்சீதைக் காகி (7 – 8 – 7)	தி**சை முகனை** யனையவர்கள்	திசை **முகனே** யனையவர்கள்
106.	அடித்தலமும் தாமரையே (8 – 1 – 5)	என் நெஞ்சத்துள்ள கலா**தென்கி**ன்றாளால்	என் நெஞ்சத்துள் அக**லாவென்** கின்றாளால்
107.	பேராயிரமுடைய பேராளன் (8 –1 – 6)	காரார்**வயலமரும்**	காரார்**வயல் மருவும்**

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
108.	கண்ணனூர் கண்ணபுரம் (8 – 2 – 5)	**பெண்மையும்**தன்னுடை	**பெண்மை யென்**தன்னுடை
109.	வண்டமரும்மலர்ப் புன்னை (8 – 3 – 7)	எண் திசையும் **எழுசுடரும்**	எண்திசையும் **எழுகடலும்**
110.	தொண்டீர்உய்யும் வகை (8 – 6 – 1)	மடந்தை **மான் நோக்**கம்	மடந்தை **மாநோக்**கம்
111.	ஆமையாகி (8 – 6 – 5)	ஓமமாகிஊ**ழியாகி**	ஓமமாகிஊ**ழியாய்**
112.	ஆமையாகி (8 – 6 – 5)	**உலகு**சூழ்ந்த நெடும் புணரி	**உவரி**சூழ்ந்த நெடும் புணரி
113.	வியமுடைவிடை யினம் (8 – 7 – 1)	**குயமிடை**தடவரை	**குயமுடை**தடவரை
114.	வியமுடைவிடை யினம் (8 – 7 – 1)	நய**முடை**நடையனம்	நய**மட**நடையனம்
115.	படிபுல்கும் அடியிணை (8 – 7 – 8)	படைசெல**அடி**மலர்	படை செல**வடி**மலர்
116.	இலங்கு முத்தும் (9 – 3 – 10)	கலியனொலி**மாலை**	கலியனொலி**மாலைகள்**
117.	பொன்னலரும் (9 – 4 – 10)	**வானாடுமுன்னுவரே**	1. **வானாளும் முன்னுவரே** 2. **வானாள**முன்னுவரே
118.	கருமணி பூண்டு (9 – 5 – 4)	பேரருளாளன் பெருமை **பேசி**	பேரருளாளன் பெருமை **பேச**
119.	சோத்தென நின்று (9 – 5 – 9)	இன்று **காறும்**	இன்று **தாறும்**
120.	சிரமுனைந்து மைந்தும் (9 – 6 – 4)	**உர**வோனூர் போலும்	**ஒருவனூர்** போலும்

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
121.	சிரமுனைந்து மைந்தும் (9 – 6 – 4)	ஈன்தேன்**முரல**	ஈன்தேன்**முரலும்**
122.	கவ்வைக்களிற்று (9 – 6 – 5)	கலி**மான்** தேர்	கலி**மாந்**தேர்
123.	கவ்வைக்களிற்று (9 – 6 – 5)	அமரில்**உய்த்தான்**	அமரில்**உற்றான்**
124.	மஞ்சு தோய் (9 – 7 – 5)	**மைந்தனார்**வல்லவாழ்	**மஞ்சனார்**வல்லவாழ்
125.	தேனுகனாவிபோயுக (9 – 8 – 7)	கல்லதர் **நிறைந்து**	கல்லதர் 1. **நுழைந்து** 2. நிரந்து
126.	தானவன் வேள்வி (9 – 9 – 5)	**வானமும்**மண்ணகமும்	**வானகமும்** மண்ணகமும்
127.	எவ்வநோய்தவிர்ப்பான் (9 – 10 – 2)	மல்லிகை மாலையோடு **மணந்து**	மல்லிகை மாலை யோடு**மணைந்த**
128.	ஏறுமேறி இலங்கு (9 – 10 – 4)	மலர் **புல்கி**	மலர் **புல்லி**
129.	பெற்ற மாளியை (10 – 1 – 10)	பெற்ற **மாளியை**	பெற்ற **மாளிகை**
130.	புரங்கள்மூன்றும் (10 – 2 – 9)	வெங்க**திரோன்சிறு**வா	வெங்க**திரோன்** **தன் சிறுவா**
131.	தாயர்மனங்கள் (10 – 5 – 2)	அடிகள் அரவிந்த வாயவனே	அடிகளரவிந்த **மா**யவனே
132.	தாயர்மனங்கள் (10 – 5 – 2)	**மால் வண்**ணனே	**மாலவனே**
133.	தாமோருருட்டி (10 – 5 – 3)	தா**மோதரக்** கையால்	தா**மோதிரக்**கையால்
134.	கேவலமன்று (10 – 5 – 6)	நான் **அவலப்பம்** தருவன்	நான் **வலவப்பம்** தருவன்

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
135.	மண்மகள் கேள்வன் (10 – 7 – 6)	**அல்லில்**தான் வந்த பின்னை	**அல்லுத் தான்** வந்த பின்னை
136.	ஆயிரங்கண்ணுடை (10 – 7 – 7)	இந்திரனா**ருக்கென்**று	இந்திரனாரு**க்கன்று**
137.	ஈடும்வலியுமுடைய (10 – 7 – 9)	**யமுனை**நீராடப் போனேன்	**எமுனை** நீராடப் போனேன்
138.	அஞ்சுவன் சொல்லியழைத்திட (10 – 7 – 10)	பிள்ளைகளு**ண்கின்**று	பிள்ளைகளு**ண்கின்ற**
139.	அங்ஙனம் தீமைகள் (10 – 7 – 11)	**அங்ஙனம்** தீமைகள்	**அங்ஙனும்**தீமைகள்
140.	கருளக்கொடி (10 – 8 – 3)	**உறக்கில்**நிமிர்த்தீர்	**உறுக்கி**நிமிர்த்தீர்
141.	வைத்தார் அடியார் (11 – 3 – 6)	இன்பம் **உற்றார்** ஒளி விசும்பில்ஓரடிவைத்து	இன்பம் **உய்த்**தார் ஒளி விசும்பில்ஓரடிவைத்து
142.	வைத்தார் அடியார் (11 – 3 – 6)	இமையோர் தொ**ழுதிறைஞ்சி**	இமையோர் **தொழுதேத்தி**
143.	முன்னுலகங் களேழும் (11 – 4 – 8)	**பின்னும்** வானவர்க்கும்	**பின்னையும்** வானவர்க்கும்
144.	குன்றமெடுத்து (11 – 8 – 10)	**மன்றில் புகழ்** மங்கை மன்கலிகன்றி சொல்	**மன்றில்மலி புகழ்** மங்கை மன் கலிகன்றி சொல்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திவ்வியப்பிரபந்தபாடபேதங்கள்– குறிப்புகள்

பெரிய திருமொழி–முதற் பத்து

1. பாசுரம் எண். 1 – 1 – 1:–

பெரும்பதம் தெரிந்து–பெரும்பதம் திரிந்து

என இருபாடங்கள். ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான நூலில் மூலபாடத்தில் **தெரிந்து** என்றுள்ளது. (ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பதிப்பு 1999) (பெரிய திருமொழி 1–1–1) வியாக்கியானப் பகுதியில் **திரிந்து** என்று இடம் பெற்றுள்ளது "தெரிந்து என்று பாடமாகில் ஜ்ஞாநம் பிறந்தவாறே எல்லாம் இருந்தபடியே தெரிந்தது. ஆகையாலே முன்பெல்லாம் மிருட்சியாய்ப் போந்தமை தோற்றுகிறது."

திரிந்து:–

விஷயங்கள் தான் ஸாவதியாகையாலே (அழிவுள்ளதாகையாலே, சிறிய தாகையாலே) அவற்றிலநுபவிக்கலாவது ஒன்று மில்லையென்று முட்டி மீண்டேன்" என்று அருளியுள்ளார். காஞ்சி ஸ்வாமி இரண்டு பாடங்களையும் காட்டியுள்ளார். இரண்டு பாடங்களும் பூர்வர்கள் ஏற்றவையே.

2.பாசுரம் எண்:– 1 – 2 – 1

பிருதி, பிரிதி

எனஇரண்டு பாடங்கள் இவற்றுள் (1–2–1 முதல் 1–2–10) முதலாவது பாடம் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஏற்ற பாடம், அவர் தம் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் இடம்பெறும்

பொருப் பிருதிக்குங் கிடந்தாற் போற்றுணித்து வீழ்த்தான்
திருப் பிருதிக் கென்னெஞ்சே செல்

என்ற பாடற் பகுதி நோக்கத்தக்கது (பார்வை: காஞ்சி பி.ப.அ. ஸ்வாமி திவ்யார்த்ததீபிகை). வடமொழியில் ப்ருது [2]த்வம் என்ற சொல்லுக்குப் பெரிது என்னும் பொருள் அமையும். நம் நாட்டு மலைகளுள் பெரிய மலையில்

அமைந்த திவ்யதேசம்; ஆகவே ப்ருது என்ற பாடம் பொருந்தும். நன்னூலார்,ஏழாமுயிரிய்யுமிருவும் என்று (நூற்பா 147) வடமொழியாக்கப் பகுதியில் கூறியுள்ளார். ஆழ்வார் ப்ருதுவைப் பிரிதிஎன்றுத் தம் பாசுரத்தில் வடமொழியாக்கம் செய்து காட்டியுள்ளமையைப் பின்பற்றி இந்த நூற்பாவை நன்னூலார் அமைத்தார் எனலாம் ஆகவே திருப்பிருது திருப்பிரிதி ஆகிய இருபாடங்களும் ஏற்கத்தக்கன. காஞ்சீஸ்வாமி **பிரிதி**என்ற பாடத்தை யேற்றுள்ளார்.

குறிப்பு: வடமொழியில்ஏழாமுயிர் 'ரு' ஆகும்.

3. பாசுரம் எண்:– 1 – 2 – 4:–

பிறங்கு, பிறங்கல்

என இருபாடங்கள். இவற்றுள் **பிறங்கு**என்னும் பாடம் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யான நூல் மூலபாடத்தில் உள்ளது. பிறங்கு = விளங்காநின்ற என்பது பொருள்

பிறங்கல் = மலை (திவாகர நிகண்டு நூற்பா – 856)

குன்று (திவாகர நிகண்டு நூற்பா – 860)

பெருமை (திவாகர நிகண்டு நூற்பா – 1363)

மிகுதி (திவாகர நிகண்டு நூற்பா – 1368)

உயர்ச்சி (திவாகர நிகண்டு நூற்பா – 1369)

உயர்வு, பெருமை, மலை (திவாகர நிகண்டு நூற்பா = 2081)

"பிறங்குமாமணி" என்னும் பகுதிக்கு உரை வரையும் பொழுது "அவை தான் ஒரு பாறை மாத்ரமாயிருக்கையன்றிக்கே **ஒரு மலை போலேயாயிற்றுக்** கிடப்பது. **பெருத்து: ச்லாக்யமாயிருந்துள்ள** மாணிக்கங்களானவை என்றருளியுள்ளார். 'பிறங்கல்' என்ற சொல்லுக்கு இணையான பொருள்களை அமைத்து உரையருளியுள்ளமையால்பிறங்கல் என்ற பாட பேதம் வந்தமைந்தது எனலாம். மலையில் அருவிகள்மாணிக்கக் கற்களை மலைகளைப்பேர்த்தாற் போல உருட்டிக் கொண்டு வரும் நிகழ்வு,நரசிம்மப் பெருமான் இரணியன் மார்பைப் பிளந்து அவன் குடலை மாலையாக அணிந்து விளங்கிய போது அவன் உடலினின்று வந்த உதிர வெள்ளத்துடன் ஒப்பிடப்

பெறுகிறது. காஞ்சீ ஸ்வாமி பிறங்கு என்னும் பாடத்தைத் தம் நூலில் காட்டியுள்ளார். பிறங்கல் என்னும் பாடம் அவர் நூலில் இடம் பெறவில்லை.

4. பாசுரம் எண்:— 1 — 2 — 5

அமர்ந்த நலிமயத்துள்; அமர்ந்த நலிமயத்து

என இருபாடங்கள். வியாக்யான நூலின் மூல பாடத்தில் **அமர்ந்த நல்லிமயத்து** என்றுள்ளது. வியாக்கியானத்தில் விலக்ஷணமான ஹிமவானில் என்றுள்ளது. நல்லிமயத்துள் என்பதால் பொருள் வேறுபாடு இல்லை. நல்லிமயம் – நலிமயம் (கெடுதல் விகாரம்).

5. பாசுரம் எண்:— 1 — 2 —6

இருந்த நலிமயத்துள், இருந்த நலிமயத்து

என இருபாடங்கள். **நல்லிமயத்து** என்று மூலபாடத்தில் உள்ளது. 'நல்லிமயத்து' என்ற பகுதிக்குப் "பரத்வத்தில் வணங்காதாருமெல்லாம் சீலம், கண்டு வணங்கும்படியாகவிருக்கிற தேசமாயிற்று" என்றருளியுள்ளார். நல் என்னும் அடைமொழிக்கு முன் பாட்டில் விலக்ஷணமான என்றருளி இப்பாட்டில் மற்றொரு விளக்கம் தந்துள்ளமை காணத்தக்கது.

6. பாசுரம் எண்:— 1 — 2 — 2:—

இருந்த நலிமயத்துள், இருந்தநலிமயத்து

என இருபாடங்கள். **நல்லிமயத்து** என்று மூலபாடத்தில் உள்ளது. இவ்விடத்தில் 'நல்' என்னும் பகுதிக்கு, "விரோதி நிரஸநம் (அழித்தல்) பண்ணின ச்ரமம்மாறுகைக்கு இருந்த இடந்தானேநங்கார்யம் செய்கைக்குடலாகிவிட்டது" என்று விளக்கும் பாங்கு காணத்தக்கது.

7. பாசுரம் எண் :— 1 — 2 — 3

இருந்தநலிமயத்துள், இருந்தநலிமயத்து

என இருபாடங்கள். **நல்லிமயத்து என்று** மூலபாடத்திலுள்ளது இவ்விடத்தில் 'நல்' என்னும் பகுதிக்கு "நப்பின்னைப் பிராட்டிக்கு உதவினாற் போலவே ஆச்ரிதர்க்கெல்லாம் உதவுகைக்காக வந்திருக்கிற தேசம் ஆயிற்று" என்றருளியுள்ளார்.

8. பாசுரம் எண் :— 1 — 2 — 8

அருவரைஇமயத்துள். அருவரைஇமயத்து

என இருபாடங்கள். **அருவரைஇமயத்து** என்று மூலபாடத்திலுள்ளது. அருவரைஇமயத்து = ஏற அரிதான தாழ்வரையுடைய இமயமலையின் கண் என்னும் பொருள் அமையும்.

9 பாசுரம் எண் :— 1 — 2 — 9

இருந்த நலிமயத்துள், இருந்த நலிமயத்து

என இருபாடங்கள். **நல்லிமயத்து** என்று மூலபாடத்திலுள்ளது. "ஆச்ரயிப்பார்க்கு ஒரு வருத்தமும் வாராதபடியிருக்கிற மஹாப்ரபாவன் வந்து வர்த்திக்கிற விலக்ஷணமான ஹிமவானில் என்றருளியுள்ளார். வியாக்யான நூலில் இப்பதிகத்தில் (திருமொழியில் (1 – 2) பாடல்கள் 1, 4, 7 ஆகிய மூன்று பாடல்களில் இமயத்துள் என்ற பாடம் உள்ளது. ஆகவே இரண்டு பாடங்களும் ஏற்கத்தக்கவையே. காஞ்சீ ஸ்வாமியும் தம் திவ்யார்த்த தீபிகை வியாக்யானத்தில் மேற் கூறிய முறையில் (1, 4, 7 இமயத்துள்) (2, 3, 5, 6, 8, 9 இமயத்து) தந்துள்ளார்.

10. பாசுரம் எண் :— 1 — 4 — 6

கடும்புனல் கயத்த, கடும்புனல் தகைத்த

என இருபாடங்கள் இடம் பெற்றுள்ளன. **கடும்புனல் கயத்த** என்று மூலபாடத்திலுள்ளது. காஞ்சீபுரம் ஸ்வாமி, "**தகைந்த** என்ற பொருள் ஏற்கத் தக்ககன்று" என்றருளியுள்ளார். தகைத்த என்னும் பாடம் வந்தமைக்குக் காரணம் வியாக்யான புஸ்தகத்தில் "புனல் கயத்த = ஜலத்தைத் தகைந்த" என்று பதப்பொருள் காட்டப் பெற்றுள்ளது ஆகும். காஞ்சீ ஸ்வாமி "கயத்த என்றது கயத்தையுடைய என்றபடி; கயமானது தண்ணீர் தேங்கும் பள்ளம்" என்றருளியுள்ளார்.

திவாகர நிகண்டு 895.

அலந்தை, பண்ணை, கோட்டகம். கிடங்கோடு

இலஞ்சி,மலங்கல், சுனை. ஏல்வை. ஓடை,

வட்டம், தடாகம், மடு, குளம், வலயம்,

குட்டம், குண்டம், பட்டம், குழி,

பொய்கை, கேணி, ஆவி, தடம், படுகர்

ஏரி, கயம், அயம்,உவளகம்வாவி (கயம் என்பது நீர் நிலையைக் குறிக்கும்சொல்லாகும்).

கங்கை வேகமாகப் பெருகிப் பல பள்ளங்களை உடைய மலையில் வந்து நிறைந்த செய்தி குறிக்கப்பெறுகிறது. இதனால் காஞ்சீ ஸ்வாமி போற்றும் முதற் பாடம் ஏற்கத்தக்கதாகிறது.

11. பாசுரம் எண்:– 1 – 5 – 6

தயிரும்இழுதும், தயிரும்விழுதும்

என இரண்டு பாடங்கள் இடம் பெற்றுள்ளன. **தயிரும்விழுதும்** என்ற பாடம் மூலபாடத்திலுள்ளது.

விழுதும் = வெண்ணெயையும்என்று பொருள் தரப்பெற்றுள்ளது.

இழுது = நிணம் (திவாகர நிகண்டு 531)

இழுது = நெய் (திவாகரநிகண்டு 1117)

நூற்பா:–

1. நெய்யும் இழுதும், விழுக்கும், நிணப்பெயரே. (531)

2. இழுதும் கிருதமும் துப்பும் நெய்யே

ஆச்சியம் என்றும் அதன் பெயர் ஆகும். (1117).

இழுது என்ற சொல் நெய்யைக்குக்குறிக்கிறது. இந்த இடத்தில் இரண்டு பாடங்களும்ஏற்கத்தக்கன. 'நெய்', 'வெண்ணெய்' என்னும் இரண்டு பொருள்களும். கண்ணபிரான் உகப்பவை. 'ஆ நெயுண்டி' (திருச்சந்தவிருத்தம் (40) என்னும் தொடர் கண்ணன் நெய்யுண்ட வரலாற்றினைக் குறிக்கிறது. 'நெய்தொடுவுண்டு ஏசும்படியன்ன செய்யும் எம்மீசர்' என்னும் தொடர் (திருவிருத்தம் 54) பெருமான் நெய்பால் கொண்ட

விருப்பத்தைக் காட்டுகிறது. காஞ்சீஸ்வாமி **தயிரும்விழுதும்** என்ற பாடத்தை ஏற்றுள்ளார். (விழுது வெண்ணெய்)

12. பாசுரம் எண்:– [1 – 6 – 9]

ஊனிடைச்சுவர், ஊனுடைச்சுவர்

என்னும் இரண்டு பாடங்கள். வியாக்கியான நூல் மூலபாடம். ஊனிடைச்சுவர்; "மாம்ஸத்தை இடையிடையே சுவராக வைத்து" என்று பொருள் தரப்பெற்றுள்ளது.

மற்றொருபொருள்:– "அன்றிக்கேமாம்ஸப்ரசுரமான சரீரத்தைச் சுவராக வைத்து" (மாம்ஸப்ரசுரம் – ஊன்நிறைவு) காஞ்சீ ஸ்வாமி **ஊனிடைச்சுவர்** என்ற பாடத்தை ஏற்றார். ஊனுடைச்சுவர் – இப்பாடம்எதுகைக்குப் பொருத்தமாக உள்ளது. ஊனுடை, தானுடை, தேனுடை, நானுடை. (ஊனையுடைய சுவர்) எலும்பு தூண் ரோமம் வேயப்பெறும் பொருள் என்று பாசுரம் அமைந்துள்ளது. ஆகவே இருபாடங்களும் ஏற்கத்தக்கன.

13. பாசுரம் எண்:– 1 – 7 – 1

சிங்கவேள்குன்றமே, சிங்கவேழ்குன்றமே

என இரண்டு பாடங்கள். வியாக்கியான நூலில் மூலபாடத்தில் "சிங்கவேழ்குன்றமே" என்றுள்ளது (1 – 7 – 1 முதல் 1 – 7 – 9 வரை) வியாக்யான பாகத்தில் எந்த விளக்கமும் பாடபேதம் குறித்து இல்லை. காஞ்சி ஸ்வாமி **"சிங்க வேள் குன்றம்"** என்ற பாடத்தை மூலபாடத்தில் காட்டியுள்ளார்.

"சிங்கம் – நரஸிம்ஹஸ்வரூபியாய்

வேள் – யாவராலும்விரும்பப்படுகின்ற கட்டழகு உடையவரான பெருமாள் எழுந்தருளியுள்ள.

குன்றம் – திருமலை," எனப் பொருளுரைத்துள்ளார்.

"சிங்கவேழ் குன்றம்" என்னும் பாடத்திற்கேற்ப நரஸிம்ஹ மூர்த்தி எழுந்தருளியிருக்கின்ற ஏழு குன்றங்களையுடைய தலம் எனவும் பொருள்படுமாறு காண்க" என்றருளியிருள்ளார். அஹோபில க்ஷேத்ரம்

திருவேங்கடமலை போல் ஏழுகுன்றங்களை உடையது என்னும் கருத்தில் இரண்டாம் பாடம் அமைந்தது எனலாம்.

14. பாசுரம் எண்:— 1 — 7 — 4

எவ்வம்வெவ்வேல், எவ்வும்வெவ்வேல்

என இரண்டு பாடங்கள். **எவ்வும்வெவ்வேல்** என்னும் பாடம் வியாக்யான நூலில் மூலபாடமாக உள்ளது. 'எவ்வும்' என்றும் 'எவ்வம்' என்றும் பாடபேதம் என்று காஞ்சீ ஸ்வாமி இரண்டு பாடங்களையும் காட்டியுள்ளார். அது (வேல்) உடம்பிலே தைத்தால் பிறக்கும் துக்கமெல்லாம் பிறக்கும்படியிருக்கை எவ்வத்தைப் பண்ணாநின்றுள்ள வெவ்விய வேலையுடைய என்று ஹிரண்யன் வேலைப் பெரியவாச்சான் பிள்ளை உரையில் தந்துள்ளார்.

'எவ்வம்' என்னும் சொல் 'துன்பம்' என்னும் பொருளுடையது என்று திவாகர நிகண்டு குறிக்கிறது. (நூற்பா 1487) எவ்வம் என்பது பெயர்ச்சொல். எவ்வும் என்பது துன்பத்தைத்தரும் என்னும் பொருளுடைய வினைச்சொல். இரண்டு பாடங்களும் பொருந்தும். காஞ்சீ ஸ்வாமி, "எவ்வும் என்றும் எவ்வம் என்றும் பாடபேதம்" என்றருளியுள்ளார்.

15. பாசுரம் எண்:— [1 — 7 — 5]

நீள்விசும்பூடிரிய, நீள்விசும்பூடெரிய

என இரண்டு பாடங்கள். வியாக்யான மூலபாடம் முதற்பாடம்,

விசும் பூடு + **இரிய** = **சிதற ஓட** (ஆகாயத்தில் தீ)

விசும் பூடு + **எரிய** = **ஆகாயத்தில் தீஎரிய**

"'எரிய' என்று பாடமாகில் ஆகாசந்தானே இந்தளமாக (நெருப்பாக) எரிய என்றபடி" என்று பெரியவாச்சான் பிள்ளை இரண்டு பாடங்களையும் வியாக்கியானத்தில் தந்துள்ளார். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்று உரைதந்துள்ளார். 'நீள்விசும் பூடு எரிய' என்னும் பாடத்தைக் காட்டியுள்ளார்.

16. பாசுரம் எண்:— 1 — 7 — 9:—

நல்லைநெஞ்சே, நல்லநெஞ்சே

என இருபாடங்கள். **நல்லைநெஞ்சே** என்னும் பாடம் வியாக்யான மூலபாடத்திலுள்ளது உரையிலும் "நல்லைநெஞ்சே எனக்குப் பாங்கான

நெஞ்சே" என்று பெரியவாச்சான் பிள்ளை உரையில் அருளியுள்ளார். **நல்ல நெஞ்சே** என்னும் பாடம் காஞ்சீ ஸ்வாமி உரையில் சுட்டப் பெற்று உள்ளது. பொருள் மாறுபாடு இல்லை.

மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்ஆறங்கம் கூற அவதரித்தார் என்பதற்கு எடுத்துக்காட்டாக இப்பகுதிஅமைகிறது. நம்மாழ்வார் தம் திருவாய் மொழியில் (1 – 10 – 4) ஆம் பாசுரம் இங்கு நோக்கத்தக்கது.

"நெஞ்சமே ! நல்லைநல்லை உன்னைப்பெற்றால்" என்றருளியுள்ளார் திருமங்கையாழ்வார், நல்லைநெஞ்சே! என்றருளியுள்ளார்.

17. பாசுரம் எண் :– 1 – 7 – 10

சிங்கவேள்குன்றுடைய, சிங்கவேழ்குன்றுடைய

என இருபாடங்கள். பாடபேதம் பதின்மூன்றாம் எண்ணில் உள்ள கருத்துக்கள் இப்பாடத்துக்கும் பொருந்தும் "சிங்கவேழ்குன்றுகளுடைய" என்று உரைநடையில் அமையும். ஒருமை – பன்மை மயக்கம் எனலாம். பத்துப்பாடல்களிலும் "சிங்கவேழ் குன்றம்" என்னும் பாடபேதம் இடம் பெற்றுள்ளமை காணலாம்.

பத்தாம்பாட்டின்உரையில் "சிங்கவேழ் குன்றம்" தனக்கு வாசஸ் தானமாகவுடையவன் என்றருளியுள்ளார். ஆகவே பெரியவாச்சான் பிள்ளை ஏற்ற பாடம் சிங்கவேழ்குன்றமாகும் எனலாம்.

18. பாசுரம் எண் :– 1 – 8 – 7

சோருமாமுகில்தோய்தர, சேருமாமுகில்தேய்தர

என இரண்டு பாடங்கள். **சோருமாமுகில்தோய்தர** என்பது வியாக்யான மூலபாடம் "மேகங்களும் மிக்க பனியும் பெரிய ஆகாசத்தினிடையில் சொரிவதாய், பெரிய மேகங்கள் படியும்படி," என்று உரை உள்ளது. வியாக்யாதா மேலும், சேரும் என்று பாடமானபோது, சேருகிற ஸ்பர்சிக்கும்படி, சேருகிற – கிட்டுகிற. என்று பொருள் தந்துள்ளார். காஞ்சீ ஸ்வாமி "சோருமாமுகில் தோய்தர" என்னும் பாடத்தைத் தம் நூலில்ஆண்டுள்ளார். அவர் பாடபேதம் சுட்ட வில்லை.

19. பாசுரம் எண்:– 1 – 9 – 1

நோயேபட்டொழிந்தேன்நுன்னைக்காண்பதோர், நோயேபட்டொழிந்தேன்உன்னைக்காண்பதோர்

என்பனபாடங்கள். **நோயேபட்டொழிந்தேனுன்னைக் காண்பதோர்** என்ற மூலபாடம் வியாக்யானத்தில் உள்ளது. இஃது இரண்டாம் பாடத்தை அநுஸரித்த பாடம். 'நும்' 'நுன்' முன்னிலையில் பயன் கொள்ளும் மரபு உண்டு, 'உம்', 'உன்', அவற்றிற்கு இணையானவை. ஆகவே இருபாடங்களிலும் பொருள் மாற்றம் இல்லை பிந்தைய பாடம் மட்டுமே வியாக்யானத்தில் உள்ளது. காஞ்சீஸ்வாமி இரண்டாம் பாடத்தை ஏற்றுள்ளார்.

20. பாசுரம் எண்:– 1 – 9 – 4:–

நிலம் தோய் நீள்முகில்சேர், நிலம் தோய் நீர்முகில் சேர்

என்பனபாடங்கள். வியாக்யான பாடம் **நிலம் தோய் நீள்முகில் சேர்** "நிலம் தோய்ந்த மஹாமேகங்களானவை போன அடிப்பாடு (அடிச்சுவடு) ஆர்ந்திருக்குமாயிற்று" என்று உரை உள்ளது. "(நீள்முகில் – மஹா மேகங்கள்) கழுத்தேகட்டளையாக **நீரைப்பருகி முகந்த நீர்க்கனத்தாலே** கால் வாங்கிப் போகமாட்டாதே நகர்ந்து நகர்ந்துதுளித்துத்துளித்துக் கொண்டு ஸஞ்சரிக்கிற மேகங்கள்" என்னும் பகுதி தொடர்ந்து உரையில் வருகிறது. இப்பகுதிநீர்முகில் என்னும் பாடம் அமையக் காரணமாக இருக்கலாம். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்றுள்ளார். பாடபேதக் குறிப்புகள் உரைகளில் இல்லை.

21. பாசுரம் எண்:– 1 – 10 – 2

இலங்கைப்பதிக்கு அன்று இறையாய, இலங்கைப்பதிக்கென்றுஇறையாய

என இரு பாடங்கள். வியாச்கியான மூலபாடம் இரண்டாவது பாடம் ஆகும். 'என்று' என்னும் சொல் எக்காலத்திலும் என்று பொருள் தரும். 'அன்று' என்னும் சொல் முற்காலத்திலும் என்று பொருள் தரும். இராவணனுக்கு முன்பே மாலி என்னும் அரக்கன் இலங்கையில் அழிக்கப்பட்டான் என்று முற்கால வரலாறு கூறியுள்ளார் காஞ்சீ ஸ்வாமி. முதல்

பாடத்தை மூலபாடமாகக் காட்டி இரண்டாம் பாடமும் பொருந்தும் என்றருளியுள்ளார். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்றுள்ளார்.

பெரிய திருமொழி – இரண்டாம் பத்து

22. பாசுரம் எண்:– 2 – 1 – 4

கோவிநாயகன், கோவல் நாயகன்

என இருபாடங்கள். **கோவிநாயகன்** என்னும் பாடம் வியாக்யானத்திலுள்ளது. "கோபிமாருடன் கலக்குமாபோலே ஆச்ரிதரோடு பரிமாறுபவன்" என்றுள்ளது. கோபியர் = கோவியர், பகர – வகர மாற்றம் (மார்பு – மார்வு போல) கோவல் நாயகன் என்னும் பாடம் வியாக்யானத்தில் இடம் பெறவில்லை. 'கோபால' என்னும் வடசொல் 'கோவல்' எனத்திரிந்தது. திருக்கோவலூர் ஆயனார் எழுந்தருளி அருள் புரியும் திருத்தலம் ஆகையால் அதற்குத் திருக்கோவலூர் என்று திருநாமமாயிற்று என்று காஞ்சி ஸ்வாமி திவ்யார்த்ததீபிகை (திருமொழி 2 – 10) அவதாரிகையில் அருளியுள்ளார். பரிபாடலில் "குடவல" "கோவல" "காவல" எனத் திருமால் போற்றப்பெறுகிறார். இவ்விடத்தில் கண்ணன் பற்றிய செய்தி வந்திருப்பதால் கோவல் நாயகன் என்ற பாடம் வந்திருக்க வேண்டும். காஞ்சி ஸ்வாமி **கோவிநாயகன்** என்னும் பாடத்தை ஏற்றுள்ளார்.

23. பாசுரம் எண்:– 2 – 1 – 8

ஆயநாயகற்கு, ஆயர் நாயகற்கு

என இருபாடங்கள் உள்ளன. **ஆயர் நாயகற்கு** என்னும் பாடம் வியாக்யானத்தில் உள்ளது. "தன்னேராயிரம் பிள்ளைகளுக்குத் தலைவனானவனுக்கு. இளவாயர் தலைவன் என்னக்கடவதிரே" என்று உரையிட்டுள்ளார். காஞ்சீபுரம் ஸ்வாமி "கிருஷ்ணாவதாரம் செய்தருளின பெருமானும் திருவேங்கடமுடையானும் ஒரே வ்யக்திதான் என்பது தோன்ற ஆயநாயகற்கு என்றார்" என்று அருளிச்செய்துள்ளார் காஞ்சீ ஸ்வாமி. இரண்டாம் பாடத்தை ஏற்று விளக்க மளித்துள்ளார்.

24. பாசுரம் எண்:— 2 — 1 — 9

பணிந்தேத்திக்காண்கிலர், பணிந்தேத்திக்காண்கிலா

என இருபாடங்கள். **பணிந்தேத்திக்காண்கிலார்** என்று வியாக்யான மூலபாடத்திலுள்ளது. **காண்கிலாஎன்றுமாம்** என்று வியாக்யான உரையில் உள்ளது. `காண்கிலா` என்ற பாடத்தைக் காஞ்சீ ஸ்வாமி தம் உரை மூலபாடத்தில் தந்துள்ளார். மேலும், இரண்டாமடியின் முடிவில் "காண்கிலா என்றும், `காண்கிலார்` என்றும் பாடபேதமுண்டு; காண்கிலாவென்பதைத் திருவேங்கடமுடையானுக்கு விசேஷணமாக்கி உரைத்தல் ஒரு யோஜனை; தாமரையோனுக்கும் ஈசனுக்கும் அமரர் கோனுக்கும் விசேஷணமாக்கி உரைத்தல் மற்றொரு யோஜனை" என்றருளியுள்ளார். காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தை மூலபாடமாக ஏற்றுள்ளார். காண்கிலர் என்னும் பாடம் உரைகளில் இடம் பெறவில்லை.

25. பாசுரம் எண்:— 2 — 3 — 5

தூது சென்றியங்கும்என்துணை,
தூது சென்றியங்கும்இன்துணை

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடத்தில் உள்ளது. "தானே துணையென்னுமிடத்தை எனக்கறிவித்தவன் எனக்கு ஸ்வாமியாய் என்குலத்துக்குநாதனானவன்" என்று உரையிட்டுள்ளார்.

காஞ்சீஸ்வாமியும், "எனக்குத் துணையானவனும் என்குலநாதனுமான பெருமானை" என்று உரையிட்டுள்ளார். பாடல் முதலில் 'இன்துணை' என்று பிராட்டிக்கு விசேஷணமிடப்பட்டது. பிராட்டி பெருமாளுக்கு இனிய துணையாக இருப்பது போலவே பெருமாளும் தமக்கு இனிய துணையாக இருக்கிறான் என்பதை ஆழ்வார் திருவுள்ளமாகக்கொண்டால் இரண்டாம் பாடமும் பொருந்தும்.கீதையில் "ஹேக்ருஷ்ண! ஹேயாதவ! ஹேஸகே! (இதி)" ஸகா – துணைவன். (ஸ்ரீ கீதை 11 – 41) என்றுள்ளமை நோக்கத்தக்கது.

26. பாசுரம் எண்:– 2 – 3 – 6:–

சந்தமல்குழலாள், சந்தமர்குழலாள்

என இருபாடங்கள். வியாக்யான மூலபாடத்தில் முதல் பாடம் இடம் பெற்றுள்ளது. வியாக்கியானத்தில் இரண்டு பாடங்களும் இடம் பெற்றுள்ளன.

சந்தம் + அல் + குழலாள். சந்தம் என்று நிறம் அல் என்கிற வித்தாலே இருளை லக்ஷித்து நிறமிருண்ட குழலையுடைய வளென்னுதல்.

அன்றிக்கே

சந்து + அமர் + குழலாள் = "சந்தனப்பூ மாறாத குழலையுடைய வளென்னுதல்" என உரையில் கூறப்பெற்றுள்ளமை காணலாம். திவாகர நிகண்டு நூற்பா 629 இல்

சாந்தம் மலயம் சந்திர திலகம்

(ஏய்ந்த) ஆரம் சந்து இவை சந்தனம்

சந்து என்னும் சொல் சந்தனத்தைக் குறிப்பதைக் காணலாம். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்றுள்ளார்.

27. பாசுரம் எண்:– 2 – 4 – 3 :–

சுரிசங்கமெடுத்து, சுரிசங்கமடுத்து

என இருபாடங்கள். வியாக்யான மூலபாடத்தில் முதல்பாடம் இடம் பெற்றுள்ளது. 'எடுத்து' என்ற சொல்லுக்குத் தரித்து என்று பொருள் தரப்பெற்றுள்ளது. சுரிசங்கம் + அடுத்து என்று பிரித்து (இரண்டாம் பாடம்) 'அடுத்து' என்று பாடமாகில். "அழகிய வடிவோடே திருவாழியோடே மற்றை திவ்யாயுதங்களையும் சேர்த்து" என்று அருளியுள்ளார். இருபாடங்களும் உரையில் இடம் பெற்றுள்ளன. நாச்சியார்திருமொழியில் (9–9) மடுத்தூதிய சங்கொலியும் என்னும் பாசுரப் பகுதியில் மடுத்து என்ற சொல் இடம் பெற்றுள்ளமை காணத்தக்கது (இரண்டாம் பாடத்தில் இடம் பெற்றுள்ள மடுத்து). காஞ்சீ ஸ்வாமி சுரிசங்கமெடுத்து என்னும் பாடத்தை ஏற்றுள்ளார்.

28. பாசுரம் எண்:– 2 – 4 – 5:–

நீலமுகில்வண்ணனெமக்கிறைவற்கு,
நீலமுகில்வண்ணரெமக்கிறைவற்கு

என இரு பாடங்கள். முதல் பாடம் வியாக்யானத்திலுள்ளது. பதிகத்தில், 'நின்றான்', 'இருந்தான்'. 'கிடந்தான்', நடந்தான் (பா.1), நிமிர்ந்தவன் (பாடல் 2), உலகாண்டவன் (3), நிறைகாத்தவன் (4), நீல முகில் வண்ணன் (5), நெடுமாலவன் (6), நெஞ்சிடந்தானவன் (7), சென்றடையாதவன் (9), நெடுமாலவன் (10), என ஒருமையிலேயே ஒன்பது பாடல்களில் பெருமான் கூறப்பெறுகிறான். எட்டாம் பாட்டில் அருள் செய்யுமவற்குஎன்றுள்ளது. அதையும் செய்யுமவன் + கு என்று தான் கொள்ள வேண்டும். ஆகவே முதல் பாடம் ஏற்கத்தக்கது. இரண்டாம் பாடம் காஞ்சீ ஸ்வாமி உரையிலும் இல்லை. பொருள் மாறுபாடு இல்லை.

29. பாசுரம் எண்:– 2 – 5 – 2 :–

நீண்டவத்தைக்கருமுகிலைஎம்மான் தன்னை,
நீண்ட அத்தக்கருமுகிலை அம்மான் தன்னை

என இருபாடங்கள். முதலாம் பாடம் வியாக்யானத்தில் மூலத்தில் உள்ளது. 'அபரிச்சேத்யனான (ஒருவகையிலும் அளவிட முடியாதவன்). அந்த வஸ்துவை' என்று பொருள் வரையப் பெற்றுள்ளது.

அன்றிக்கே 'நீண்டவத்தக்கருமுகிலை என்றால் நீண்ட ஹஸ்தத்தை (ஹஸ்தம் – அத்தம்) (மாஸம் – மாதம் போல) யுடையவனென்னுதல்' என்று இரண்டாம் பாடப் பொருள் காட்டப்பெற்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் இரண்டு பாடங்களையும் உரையில் தந்துள்ளார். இரண்டு உரைகளிலும் 'எம்மான் தன்னை' என்று காணப்படுகிறது. 'அம்மான்' என்ற சொல்லையுடைய இரண்டாம் பாடம் இடம் பெறவில்லை.

30. பாசுரம் எண்:– 2 – 5 – 10

தலைவன்தன்னை,தலைவர் தம்மை

என இருபாடங்கள். வியாக்கியான மூலபாடத்தில் **தலைவர் தம்மை** (இரண்டாம் பாடம்) என்றுள்ளது. உரையில், 'துயிலமர்ந்த தலைவர் தம்மை

என்னும் ப்ரதீகத்துக்கு. "கண் வளர்ந்தவனையா பிற்றுக் கவிபாடிற்று" என்று உரையருளியுள்ளார். உரையில் இடம் பெறும். கண் **வளர்ந்தவனை** என்பதற்கேற்ப தலைவன் தன்னை என்னும் பாடம் வந்திருக்கலாம் **(உரைக்கேற்ப பாடம் வந்தமைதலுக்கு எடுத்துக் காட்டாகஇதைக் கொள்ளலாம்).** காஞ்சீ ஸ்வாமியும் மூலபாடத்தில் 'தலைவர்தம்மை' என்றுரைத்து உரையில் 'பள்ளி கொண்டிருப்பவன்' என்றும் உரைத்துள்ளார்.

31. பாசுரம் எண்:— 2 – 6 – 3

மகிழ்ந்தேத்திவலங்கொள்ள, மகிழ்ந்தேத்திவரங்கொள்ள

என இருபாடங்கள். **மகிழ்ந்தேத்தி வலங்கொள்ள** என்னும் பாடம் வியாக்யான மூலபாடம் ஆகும். 'வலங் கொள்ள – அநுகூலவ்ருத்திகளைப் பண்ணும்படி.' இரண்டாம் பாடம் காஞ்சீ ஸ்வாமி உரையில் உள்ளது. மூலத்தில் வலங்கொள்ளஎன்றுள்ளது. இரண்டாமடியினிறுதியில் வரங்கொள்ள என்று பாடமாகில் தங்களுக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு என்று பொருளாகும்" என்றும் அருளியுள்ளார்.

32. பாசுரம் எண்:— 2 – 6 – 8 :—

திரையுந்துவன்பகட்டால், திரையுந்தவன்பகட்டால்

என இருபாடங்கள். முதல் பாடம் உரை மூலத்திலுள்ளது. காஞ்சீ ஸ்வாமி "திரையுந்தி என்ற பாடம் வியாக்கியானத்துக்கு மிகவும் இணங்கும்" என்றருளியுள்ளார். உந்துதல் என்றால் தள்ளுதல் என்று பொருள். இரண்டாம் பாடம் உரைகளில் இல்லை. பகடு – எருது.

33. பாசுரம் எண்:— 2 – 7 – 4:—

ஊழியின்பெரிதால், ஊழியிற்பெரிதால்

என இருபாடங்கள். 'ஊழியின்பெரிதால்' என்ற பாடத்தில் 'இன்' என்னும் வேற்றுமை உருபும், இரண்டாம் பாடத்தில் 'இல்' என்னும் வேற்றுமை உருபும் இடம் பெற்றுள்ளன. ஒப்புப்பொருளில்வந்துள்ளன

ஐந்தாவதனுருபுஇல் லும் இன்னும்

நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப்பொருளே

என்பது நன்னூல் (299). மூலபாடத்திலும்வியாக்யானத்திலும் **ஊழியில்** என்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமி பதப்பொருள் தரும் பகுதியில் 'ஊழியின்' என்று காட்டியுள்ளார் மூலபாடத்தில் ஊழியில் என்றே உள்ளது. பொருள் வேறுபாடு இல்லை. இரண்டும் ஏற்கத்தக்கன.

34. பாசுரம் எண்:— 2 — 7 — 9:—

இவ்வணங்கினுக்கு, என்னணங்கினுக்கு

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்கியானமூலபாடம் ஆகும். உரையிலும் இவளுக்கு என்றே உள்ளது. காஞ்சீ ஸ்வாமி பாடமும்இதுவேயாக உள்ளது. மூன்றாமடி. 'அன்பினாலுன் மேலாதரம் பெரிதிவ்வணங்கினுக் குற்ற நோயறியேன்' என்றுள்ளது.

'உன்மேலாதரம்' என்பதற்கு இணையாக என் அணங்கு என்று அமையுமாயின் முரண் தொடை அமையும் நயம் கருதி இந்தப் பாட பேதம் வந்திருக்கலாம். (உன்Xஎன்) உரை நூல்களில் இந்தப் பாடபேதம் இல்லை.

35. பாசுரம் எண்:— 2 — 8 — 4 :—

அதன் மருப்பன்று வாங்கும்,
அதன்மருப்பொன்று வாங்கும்

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யான மூலபாடத்திலும் உரையிலும் உள்ளது. காஞ்சீ ஸ்வாமி, அதன் மருப்பன்று வாங்கும் என்னும் பாடத்தை மூலபாடத்திலும் உரையிலும் காட்டியுள்ளார். ஒன்று என்று எண்ணிக்கையைக்காட்டுவது (இரண்டாம் பாடம்). அன்று என்று கம்ஸன் காலத்தில் என்று பொருள் தருவது.

36. பாசுரம் எண்:— 2 — 9 — 1

நல்லான் நான்முகன் நாரணனுக்கு,
நல்லான் நாரணன் நான்முகனுக்கு

எனஇருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடமாகவும் வியாக்யான விஷயமாகவும் உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் வியாக்யானத்தைப் பின்பற்றியுள்ளார். வியாக்யானநூலில் முதல் பாடம் பாடபேதமாகக் காட்டப்பட்டுள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் முதல் பாடத்தைப் பாடபேதமாகக்

காட்டியுள்ளார். அரனுக்கும் நான்முகனுக்கும் அந்தர்யாமியான நாராயணன் என்று உரை அருளியுள்ளார். வியாக்யானப்படி. அரனுக்கு அந்தர்யாமியாகவும் தானே நாராயணனாகவும் பிரம்மாவுக்கு அந்தர்யாமியாகவும் இருக்கும் ஸர்வேசுவரன் என்பது பொருளாகும்.

37. பாசுரம் எண்:– 2 – 9 – 5 :–

தென்னவனைத்திசைப்ப, தென்னவனைத்திகைப்ப

என இருபாடங்கள். வியாக்கியான மூலபாடம் **திசைப்ப** ஆகும். 'திசைப்ப = அறிவு கெடும்படியாக' என்று உரையில் உள்ளது. காஞ்சீ ஸ்வாமி காட்டும் மூலபாடமும் 'திசைப்ப' ஆகும். அவர் காட்டும் பொருள் = திசைப்ப = அறிவு கலங்கும்படி. வேறு பாட பேதம் இடம் பெறவில்லை.

'திசைத்தல்' என்றால் மயங்குதல். 'திசைக்கின்றதே' என்கையாலே (திருவாய்மொழி ஈ.டு. 4 – 6 – 2 உரை). 'திகைத்தல்' என்றாலும் மயங்குதல். "சேர்வழியறியாதேதிகைத்து அலமருகின்றேன்." (ஆறாயிரப்படி 3 – 2 – 9 திருவாய்மொழி உரை) ஆகவே, ஒரே பொருள் தரும் இரு பாடங்கள். அறிவு கெடுதல் என்றாலும் மயங்குதலே ஆகும். இருபாடங்களும் ஏற்கத்தக்கன.

38. பாசுரம் எண்:– 2 – 9 – 6:–

செங்கோல் நடப்ப விடை வெல்கொடி,
செங்கோல் நடப்ப விட வெல்கொடி,
செங்கோல் நடப்பவிறல்வெல்கொடி

என மூன்று பாடங்கள். முதல் பாடம் வியாச்யான மூலபாடத்திலுள்ளது. உரையில் மூன்று பாடங்களும்தரப் பெற்றுள்ளன. 'விடை' விடை என்ற போது இளம் பாம்பு ஆகிறது. 'விடம்' என்ற போதுவிஷத்தை என்றாய் ஸர்ப்பமென்றபடி; 'விறல்' என்ற போதுமிடுக்கையுடையத்தாய் வெற்றிக்குப் பரிகரமான கொடியையும். என மூன்று பாடங்களையும்உரையில் தந்து விளக்கியுள்ளார். **வியாக்கியானத்திற்கு ஏற்ப அமைந்த பாடபேதங்களுக்கு இவை எடுத்துக் காட்டுகளாகின்றன.**

காஞ்சீ ஸ்வாமி மேற்கூறியவற்றை உரையில் காட்டியுள்ளார். 'விடை' என்ற சொல்லுக்கு இளம் பாம்பு என்று பெரியவாச்சான் பிள்ளை காட்டும் பொருளைக் கூறிப்பல்லவன் பாம்பைக் கொடியில் எழுதிப் பயன்படுத்திய

செய்தியையும், 'விடை' என்றால் 'இடபம்' என்றும் பல்லவர்கள் இடபத்தைக் கொடியில் எழுதிப் பயன்படுத்தியமையையும் சுட்டியுள்ளார்.

பெரிய திருமொழி — மூன்றாம் பத்து

39. பாசுரம் எண்:— 3 — 1 — 1 :—

"வளைமருப்பினில்அகத்தொடுக்கி", "வளைமருப்பினில்அகத்தடக்கி"

என இருபாடங்கள் வியாக்யான மூலபாடத்தில் முதல் பாடம் இடம் பெற்றுள்ளது. வியாக்யானப் பகுதியில், "வளைந்த கொம்பிலகவாயில் ஏக தேசத்திலேயடக்கினான்" என்றுள்ளது. **ஒடுக்கி என்ற சொல்லுக்கு அடக்கி என்று பொருள் தரப் பெற்றுள்ளது.** காஞ்சீ ஸ்வாமியும் ஒடுக்கி என்ற சொல்லுக்கு அடக்கி என்ற பொருளைத் தந்துள்ளார். பாடபேதமாகக் காட்டப் பெறவில்லை. **வியாக்கியானத்தின்படி அமைந்த பாட பேதத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக்க இரண்டாம் பாடத்தைக் கொள்ளலாம்.**

"சாம்புதல், ஒடுக்கம், கூம்புதல் ஆகும்" (திவாகர நிகண்டு 1485).

பூமியைக் கூம்புதல் செய்து இருமருப்புகளுக்கு இடையே அடக்கின செய்தியாகக் கொள்ளலாம்.

40. பாசுரம் எண்:— 3 — 1 — 8:—

"அடல்மழைக்கு", "அடர் மழைக்கு"

என இரு பாடங்கள். வியாக்கியான மூலபாடமாக முதல் பாடமுள்ளது. "போர்க்களத்து என்னுமா போலேயுத்தோந்முகமான வர்ஷத்துக்கு" என்று உரையில் பொருள் தரப்பெற்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் 'அடல்மழைக்கு' என்ற பாடத்தை மூலத்திலும் உரையிலும் மேற்கொண்டுள்ளார். இரண்டு நூல்களிலும் பாடபேதம் தரப் பெறவில்லை. அடர்த்தல் என்னும் சொல் தாக்குதல் என்னும் பொருள் தரும். போர் செய்தல் என்றும் பொருள் தரும். அடல் அடர் ஆகிய இரண்டும் போர் செய்தல் என்ற பொருள் தருவதால் இரண்டாம் பாடம் வந்திருக்க வேண்டும். **"இங்ஙனேயிருந்துள்ள விரோதிகள் ஆச்ரிதர்க்கு அடர்த்து வரில் செய்வதென்"** என்னும் பெரிய திருமொழி (6 – 8 – 4) ஆம் பாசுர உரைப்பகுதி காணத்தக்கது. (அடல் – போரிடுதல், அடர்தல் – போர் செய்தல்) (கோனார் தமிழ்க் கையகராதி பக்கம்8)

41. பாசுரம் எண்:-- 3 — 3 — 2 :—

"புலங்கெழுகோவியர்பாடி", "பொலன்கெழுகோவியர்பாடி"

என இருபாடங்கள் மூலபாடத்தில் முதல் பாடம் உள்ளது. "கண்டாருடைய இந்திரியங்களைப் (புலன்களை) பிணிக்கும் வடிவுடைய இடைப் பெண்கள் பாடி," என்று உரை உள்ளது. இரண்டாம் பாடமும் உரையில் இடம் பெற்றுள்ளது. "பொலன் கெழுகோவியர் என்று பொன்னாலே செய்த ஆபரணத்தையுடைய கோவியரென்னவுமாம்" என்று உரையுள்ளது. இரண்டு பாடங்களையும் பெரியவாச்சான் பிள்ளை தந்துள்ளார். காஞ்சீ ஸ்வாமியும் மேற்கூறியபடி இரண்டு பாடங்களையும் உரையில் தந்துள்ளார்.

42. பாசுரம் எண்:-- 3 — 3 — 3:—

"ஆய்ச்சியர் கூடி இழிப்ப", "ஆய்ச்சியர் கூடி அழைப்ப"

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூல பாடத்திலுள்ளது. 'இடைப் பெண்கள் கூடியேச' என்று உரை உள்ளது.

'அழைக்கை' கூப்பிடுகையாய், பலித்தவர்த்தம் 'ஏச' என்றது. "அழைப்ப என்று அரும்பதத்துக்குப் பாடம்" என்றுள்ளது. **அரும்பதத்துக்கு ஏற்ப அமைந்த பாடம் இரண்டாவது பாடம் ஆகும். அரும்பதத்துக்கேற்ப, பாடபேதம் அமையும் என்பதற்கு இந்தப் பாடபேதம் எடுத்துக் காட்டாக அமையும்.** காஞ்சீ ஸ்வாமி உரையில் முதல்பாடம் மட்டும் உள்ளது. வியாக்யானத்தில் அடிக்குறிப்பில் 'இழிப்ப' என்பதே ப்ராசீந பாடம் என்றுமுள்ளது.

43, பாசுரம் எண்:-- 3 — 3 — 6:—

"வையத்தெவரும் வணங்க" "வையத்தவரும் வணங்க"

என இருபாடங்கள். முதல் பாடம் உரையின் மூலபாடமாக உள்ளது. "பூமியிலுள்ளாரெல்லாரும் வணங்க" என்று உரை உள்ளது. "வையத்தவரும்" என்னும் பாடபேதம் இரண்டு உரைகளிலும் சுட்டப் பெறவில்லை. பொருள் மாறுபடாது. (வையத்தவர் – வையத்ததெவர் என இரண்டும்). இருப்பினும் வையத்தெவர் சிறந்த பாடமாகும்.

44. பாசுரம் எண்:— 3 — 3 — 6:—

"வையத்தெவரும் வணங்க", "வையத்தேவரும் வணங்க"

என இரண்டு பாடங்கள். வையத்தேவரும் என்பது அரும்பதம் கூறும் பாடம். வையத்தேவர் என்கிற பதத்தாலே பூஸுரர்களைச் சொல்லிற்றாகிலும் ஸத்வ ப்ரசுரரானதைவப்ராக்ருதிகளெல்லாரையும் சொல்லுமென்று திருவுள்ளம் என அரும்பதப் பகுதியிலுள்ளது. **அரும்பதத்திற்கேற்ப அமைந்த பாடம்.** மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த ஆழ்வார்,

சிந்தையினால் சொல்லினால் செய்கையால் நிலத் தேவர் குழு வணங்கும் சிந்தை மகிழ் திருவாறன் விளையுறை தீர்த்தனுக்கற்ற பின்னே" (திருவாய்மொழி 7–10–10)

என்னும் பாடலுக்கேற்ப அருளினார் என்பது அரும்பத உரைகாரர் திருவுள்ளம் ஆகலாம். ஆனால், காஞ்சீ ஸ்வாமி **மூன்றாமடியில் வையத்தெ வரும் என்றே பாடம். "அரும்பத வுரைகாரர் வையத்தேவர் என்று பாடங் கொண்டு நிலத்தேவர்களான பிராமணர்களெனப் பொருளுரைத்தது பெரியவாச்சான் பிள்ளை திருவுள்ளத்துக்கும் பொருந்தாது ஓசையின்பமும் சிதையும்" என்றருளியுள்ளார்.**

45. பாசுரம் எண்:— 3 — 3 — 10:—

"மங்கையர்கோன்மருவார்",

"மங்கையர்கோன்மருவார்தம்"

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடமாகும் உரையில் மருவார் = பகைவர். மருவார் = (பன்மை). அவர்களுடைய ஊன் என்பதைக் குறிக்க, **தம்** என்னும் சொல் வந்து இரண்டாம் பாடம் அமைந்தது எனலாம். முதலடியில் 16 எழுத்துகளும் (ஒற்று நிக்கி) இரண்டாம் அடியில் தம் சேர்த்தால் 16 எழுத்துகளும் (ஒற்று நீக்கி) அமைகின்றன. அதனால் இந்தப் பாடம் வந்ததோ என்றெண்ணலாம். காஞ்சீ ஸ்வாமி முதல்பாடத்தைத் தந்துள்ளார். இரண்டாம் பாடம் பற்றிய குறிப்பு இல்லை.

46. பாசுரம் எண்:- 3 – 3 – 10:-

"சாராதீவினை தானே", "சாரகில்லாவினைதாமே"

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்கியான மூலபாடமாக உள்ளது. "அவர்கள் பண்ணின பாபம் பலாநுபவத்துக்காகச்சாரா" இரண்டாம் பாடம் பற்றிய குறிப்பு வியாக்யானத்திலில்லை. காஞ்சீ ஸ்வாமி உரையிலும் இல்லை.

47. பாசுரம் எண்:- 3 – 4 – 2:-

"நான்முகன் நாள் மிகைத்தருக்கை", "நான்முகன் நாள் மிகத்தருக்கை"

என இருபாடங்கள். பிந்தைய பாடம் வியாக்கியான மூலபாடத்தில் உள்ளது. காஞ்சீ ஸ்வாமி, 'மிகத்தருக்கை' என்று பலர் பாடமோதுவரேனும் அது ஒவ்வாது. மிகைத்தருக்கை என்றே ஒதுக. (இரண்டாம் பாடம்) இவர் இவ்வாறு அருளியதற்குக் காரணம் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்யானப் பகுதியாகும். அது வருமாறு: சதுர் முகனுடைய ஆயுஸ்ஸின் மிகுதியிலுண்டான என்றுள்ளது. மிகை = மிகுதி என்று பொருள்.

48. பாசுரம் எண்:- 3 – 4 – 2:-

"உரோமசனால்நவிற்றி", "உரோமசனால்நவிற்று"

என இருபாடங்கள். பிந்தைய பாடம் வியாக்கியான மூலபாடம் ஆகும். நவிற்று என்ற சொல்லுக்குத் 'தவிர்த்து' என்னும் பொருள் உரையில் உள்ளது. பதவுரைப் பகுதியில் போக்குவித்து என்ற பொருள் தரப்பெற்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமியின் மூலபாடத்தில் முந்தைய பாடம் இடம் பெற்றுள்ளது.

நவிற்றி = போக்கடித்த, என்றுள்ளது. "நவிற்றி என்னும் வினையெச்சத்திற்குப் போக்கடித்து என்று பொருள் கொள்ளப் பட்டதற்குக் காரணம் நவிழ்த்தி என்பது நவிற்றியென மருவியிருப்பதாகக் கொள்ளலாம் என்றருளியுள்ளார். அவர் மேலும் 'உரோமசனாலவித்து' என்று மற்றொரு பாடமிருந்திருக்கும் என்பர் சிலர்" என்றருளியுள்ளார். (நவிற்றுதல் என்றால் சொல்லுதல் என்றொரு பொருள் உண்டு. நவிழ்த்தல் = அவித்தல், போக்குதல் என்பதால் நவிழ்த்தி = நவிற்றியின் மருவு என்று அருளியுள்ளார் எனலாம்.

49. பாசுரம் எண்:— 3 — 4 — 7:—

"திரைநீர்த்தெள்கி", "திரை நீத்தெள்கி"

என இரு பாடங்கள். வியாக்கியான மூலபாடம் முதலாவதாகும். வியாக்யானத்தில், "கல்நீரிலே தேங்கிப் போந்தேறின வென்னுதல் (அரும்பதத்தில் தெள்கி) என்று தேங்குதலாய்" என்றுள்ளது.

அன்றிக்கே: திரை நீத்து விட்டு, கடலை விட்டு என்றும் அருளி இரண்டாம் பாடத்தையும் காட்டியுள்ளார். காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தையே மூலபாடத்தில் தந்துள்ளார். திரைநீத்து + எள்கி என்று பிரித்துப் பதப் பொருள் தந்துள்ளார். எள்கி – இகழ்ந்து என்று பொருள் தந்துள்ளார்.

50. பாசுரம் எண்:— 3 — 4 — 10:—

"காழிச்சீராம விண்ணகர் என் செங்கண் மாலை", "காழிச்சீராமவிண்ணகரின் செங்கண் மாலை"

என இருபாடங்கள். வியாக்யான மூலபாடமாக முதல் பாடம் உள்ளது. பதவுரையிலே "**என்னுடைய புண்டரீகாக்ஷன்** விஷயமாக" என்றுள்ளது. உரையின் உள்ளே, சீராமவிண்ணகரிலே நித்ய வாஸம் பண்ணுகிற புண்டரீகாக்ஷனைக் கவிபாடி என்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தைத் தம் நூலில் மேற்கொண்டுள்ளார். இருபாடங்களும் உரையில் உள்ளன. **உரை தழுவிய பாடபேதத்துக்கு எடுத்துக்காட்டு.**

51. பாசுரம் எண்:— 3 — 5 — 3:—

"இம்மைக்கென்றிருந்தேன்", "இன்மைக்கென்றிருந்தேன்"

என இரு பாடங்கள் **இம்மைக் கென்றிருந்தேன்** என்பது வியாக்யான மூலபாடம் வியாக்யானப் பகுதியில் 'இம்மை' என்ற போது இஹலோகத்திலே யென்றாகிறது. 'இன்மை' என்ற போது இனிமை என்றாகிறது என்று இரண்டாம் பாடத்திற்கும் பொருள் தந்துள்ளார். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மட்டும் காட்டியுள்ளார். 'இந்த ஜன்மம் முழுமைக்குமாமென்று துணிந்திருந்தேன்' என்றருளியுள்ளார்.

52. பாசுரம் எண்:– 3 – 5 – 3:–

"அரிவார்முகத்தெழுவாளை போய்", "அரிவார்முகத்தெழவாளை போய்"

எனஇருபாடங்கள். வியாக்கியான மூலபாடமாக முதல் பாடம் உள்ளது. "அவர்கள் (அரிவார்கள்) சேரப்பிடித்த பிடியிலேயகப் பட்டவாளைகளானவை அவர்கள் **முகத்திலேயெழப் பாய்ந்து**" என்று உரை உள்ளது. எழுகின்ற வாளை போய் என்று கூறாமல் **'எழப் பாய்ந்து'** என்று உரையிலுள்ளதால் இரண்டாம் பாடம் வந்திருக்க வேண்டும் **உரையைப் பின்பற்றி வந்தமைந்த பாடம் எனலாம்.** காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்றுள்ளார். பாடபேதங்கள் இடம் பெறவில்லை.

53. பாசுரம் எண்:– 3 – 7 – 1 :–

"பெற்ற தாயரைவிட்டகன்று", "பெற்ற தாயரையிட்டகன்று"

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்கியான மூலபாடம் "இட்டு – பொகட்டுப் போகா நின்றாலும் பொகட்டோமென்னும் அநுதாபமும் நெஞ்சிலே கிடக்கவுமாமிறே; சில அசேதநங்களைப் பொகட்டுப் போமாபோலே பொகட்டு" என்று இரண்டாம் பாடத்துக்கேற்ப உரை அருளியுள்ளார். முதல் பாடம் இரண்டு உரைகளிலுமில்லை. முதல் பாடத்தில், வெள்ளி வளைக்கை **பற்றப்** பெற்ற தாயரை **விட்ட** கன்று என்னும் அடியில் முரண் தொடை அமையும் நயம் உள்ளது. முதல் பாடத்திலுள்ள தாயரை விட்ட கன்று என்பதில் (விட்டு + அகன்று) என்று பிரித்து 'அகன்று' என்ற சொல்லை எடுத்துக் கொண்டு இத்திருமொழியின் ஐந்தாம் பாட்டு ப்ரதீகத்தில் உள்ள 'என்னை அகன்ற' 'இவள்' என்ற பகுதியுடன் ஒப்பு நோக்க முதல் பாடமும் பொருந்தும். எனினும் பெரியோர் காட்டிய இரண்டாம் பாடமே சிறந்ததாகும்.

54. பாசுரம் எண்:– 3 – 7 – 5:–

"என்னை அகன்ற இவள்", "என்னை யகன்றவன் பின்"

என இருபாடங்கள். மூலபாடமாக முதல் பாடம் வியாக்யானத்தில் உள்ளது. 'அகன்ற விவள்' என்றும் 'அகன்றவன் பின்' என்னும் பாட

பேதமுண்டு என்று அரும்பதத்தில் கூறப்பெற்றுள்ளது. வியாக்யானம் முந்தின பாடாநு குணமாக இடம் பெற்றுள்ளமையையும் அரும்பத உரைகாரர் சுட்டியுள்ளார். என்னை அகன்று அவன்பின் மூங்கில் போன்ற தோளை வீசிக்கொண்டு அன்னப் பெடை போல் நடந்தாள் என்பது பொருளாகும் (இரண்டாம் பாடம்) **இந்தப் பாடபேதம் அரும்பதம் மூலம் வந்த பாடம் எனலாம்.**

பெரிய திருமொழி – நான்காம் பத்து

55. பாசுரம் எண்:– 4 – 1 – 4:–

"எழிலமைந்த", "எழிலமர்ந்த"

என இருபாடங்கள். **எழிலமைந்த** என்னும் பாடம் வியாக்யானத்தில் உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் இந்த பாடத்தையே தம் நூலில் காட்டியுள்ளார். 'அமர்தல்' என்னும் பெயர்ச் சொல்லுக்கு, 'அடங்குதல்', '**அமைதல்**', 'நெருங்குதல்', 'பெருமை', 'விருப்பம்' முதலான பொருள்கள் உள. (பார்வை லிப்கோ–அகராதி) அமர்தல் = அமைதல். பொருள் வேறுபாடு இல்லை. பாடபேதம் ஏற்கத்தக்கது. பாடபேதம் அமைந்த காரணம் தெரியவில்லை.

56. பாசுரம் எண்:– 4 – 1 – 4:–

"எமக்கருளென நின்று", "எமக்கருளென்ன நின்று"

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடமாக உள்ளது. வியாக்யானப் பகுதியில் "எங்கள் பக்கலிலே ப்ரஸாதத்தைப் பண்ணியருள வேணும் **என்ன**" என்றுள்ளது. எமக்கருள் + என்ன என்னும் பாடத்தில் (இரண்டாம் பாடம்) உள்ள 'என்ன' வியாக்யானத்திலுள்ளது. **ஆகவே வியாக்யானத்தைப் பின்பற்றி அமைந்த பாடத்துக்கு எடுத்துக்காட்டாக இரண்டாம் பாடத்தைக் கொள்ளலாம்.** காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்றுள்ளார். பாடபேதம் உரை நூல்களில் இடம் பெறவில்லை. பொருள் மாறுபாடு இல்லை இரண்டும் ஏற்கத்தக்கனவே.

57. பாசுரம் எண்:– 4 – 1 – 7:–

"சேடேறுபொழில் தழுவு", "சேடேறுமலர்ப்பொழில் சூழ்"

என இருபாடங்கள். **சேடேறு பொழில் தழுவு,** என்னும் பாடம் வியாக்யானத்தில் முதலில் உள்ள பாடம் "இளமை மிக்க பொழில் தழுவியிருந்துள்ள" என்று உரை. "சேடேறு மலர்ப்பொழில் சூழ்", வியாக்யானத்தில் உள்ள இரண்டாம் பாடம். "மலரையுடைத்தான பொழிலாலே சூழப்பட்ட" என்று உரை. காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தை உரையில் தந்துள்ளார். பாடபேதம் காட்டவில்லை. வியாக்யானத்தில் இடம் பெறும் இரண்டு பாடங்களுக்கும் இணையான திருவாய்மொழிப் பகுதி "வளரிளம் பொழில் சூழ்", திருவாய்மொழி (2 – 10 – 1) (சேடு = இளமை).

58. பாசுரம் எண்:– [4 – 2 – 2]:–

"ஒல்லைவந்திறப் பாய்ந்து", "ஒல்லைவந்துறப் பாய்ந்து"

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் இரண்டு வியாக்யானங்களிலும் உள்ள பாடம். முதல் பாடம் இல்லை. இரண்டாம் பாடத்தில் உள்ள 'உற' என்ற சொல்லுக்குத் 'தப்பாதபடியாக' என்று பொருள் தரப்பெற்றுள்ளது. காளியன் இறக்கவில்லை. அபயம் தரப்பெற்றான். ஆகவே, 'இற' என்ற பாடத்தை உரையாசிரியர்கள் ஏற்கவில்லை என்று கருதலாம். 'உற' என்ற பாடமே சிறந்தது.

59. பாசுரம் எண்:– [4 – 2 – 4] :–

"கரும்பினூடுயர்", "கரும்பினோடுயர்"

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடம். 'கரும்பினுள்ளே அத்தோடொத்து இசலி (சண்டை போட்டு) வளரா நின்றுள்ள செந்நெலை உடைத்தான' என்று உரையில் உள்ளது. உரைகளில் பாடபேதம் இடம் பெறவில்லை.

ஊடு – உள்ளே ஊடுருவியிருத்தல். ஓடு – மூன்றாம் வேற்றுமையுருபு.

"மூன்றாவதனுரு பாலானோடொடு
கருவி கருத்தாவுடனிகழ்வதன் பொருளே" (நன்னூல் 297)

(உடனிகழ்வுப் பொருளில் வந்துள்ளது. இரண்டாம் பாடமும் பொருந்தும்.

60. பாசுரம் எண்:– 4 – 3 – 4:–

"மாவலி வேள்வி", "மாவலிவேள்வியில்"

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடம் ஆகும். 'மகாபலியுனுடைய யஜ்ஞ வாடத்திலே', யஜ்ஞவாடம் – யாகம் நடக்கும் இடம். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை உரையில் மூலபாடத்தில் கொண்டுள்ளார். பதப்பொருள் வரையும் பொழுது. "வேள்வியில்– யாக பூமியில்" என்றருளியுள்ளார். மாவலி வேள்வி மண்ணளவிட்டவன் – வேற்றுமைத் தொகை. மாவலி வேள்வியில் மண்ணளவிட்டவன் – வேற்றுமை விரி.

(பொருள் மாறுபாடு இல்லை. இரண்டு பாடங்களும் ஏற்கத்தக்கனவே)

"மாவலி வேள்வியில் மாணுருவாய்ச் சென்று மூவடிதா வென்று இரந்த இம்மண்ணினை" (பெரியாழ்வார் திருமொழி 2 – 10 – 7) என்னும் பாசுரம் ஒப்பு நோக்கத்தக்கது.

61. பாசுரம் எண்:– 4 – 4 – 9:–

"எங்கும் மூடி", "எங்கு மோடி"

என இருபாடங்கள். 'எங்கும் மூடி', என்பது வியாக்யான மூலபாடம் 'எங்குமேறி' என்று பொருள் தரப் பெற்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமி இந்த பாடத்தையே காட்டியுள்ளார். மூடி என்ற சொல்லுக்கு ஆக்ரமித்து என்று பொருள் தந்துள்ளார். "ஊழிக் காலத்தில் கீழ் வெள்ளம் மேற்கிளர்தல் மோழையெழுச்சி எனப்படும். மோழை – கீழாறு(அடிநீர்). அது மேலே கிளர்ந்து உலகத்தை மூடி என்பது முதற்பாடப் பொருளாகும். எங்கும் + ஓடி = எங்குமோடி ஆகும். நீர் எங்கும் ஓடும் தன்மையுடையது. ஊழிக்காலத்தில் அதன் வலிமை அதிகம் ஆகவே, இரண்டாம் பாடமும் ஏற்கத்தக்கது தற்போது சுநாமி என்ற நிகழ்வைப் போன்றது. ஊழிக்காலம் பெரும் சுநாமி ஆகும் எனலாம். பாடபேதம் எந்த உரையிலும் இல்லை, 'அண்டம் மோழைஎழ' என்னும் பாசுரப் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது. (திருவாய் மொழி 7 – 4 – 1).

62. பாசுரம் எண்:– 4 – 5 – 1:–

"தூம்புடைப்பனைக்கை வேழம்",

"தூம்புடைப்பணைக்கை வேழம்"

என இருபாடங்கள். முதல்பாடம் வியாக்யான மூலபாடம். துளையை உடைய .... பனை போலே இருந்துள்ளகையையுடைய ஆனை என்றருளியுள்ளார். உரையாசிரியர். "பணைக்கை என்று பாடமாகில் அகப்பட்டாரையிடையற வீசும் கையையுடையயானை" என்றருளியுள்ளார். **அரும்பதத்தில்** 'பணைக்கை' என்று 'தழைக்கை' அத்தால்பருமனைச் சொல்லுகிறது என்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மூலபாடமாகக் காட்டியுள்ளார். இரண்டாம் பாடத்தையும் காட்டியுள்ளார். பணைக்கை – பருத்தகை என்று பொருள் தந்துள்ளார்.

63. பாசுரம் எண்:– 4 – 5 – 1:–

"பொன்னி முற்றும் புகுந்து", "பொன்னி முற்றம் புகுந்து"

என இரு பாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடம். "ஒரு காலால் புகுருகையன்றிக்கே அடையப்பரந்து புகுந்து" என்று பொருள் தரப்பெற்றுள்ளது 'முற்றம்' என்று பாடமாய்த்தாகில் வெளியுள்ள இடமெல்லாம் புகுந்து என்று இரண்டாம் பாடமும் விளக்கப் பெற்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மூலத்தில் காட்டியுள்ளார்முற்றும் முற்றம் என பாடபேதங்கள் என்று பாடபேதங்களையும் தந்துள்ளார். **உரையாசிரியர் காட்டும் பாடபேதத்துக்கு எடுத்துக்காட்டு எனலாம்.**

64. பாசுரம் எண்:– 4 – 5 – 2:–

"வவ்வியஇடும்பைகூர", "வவ்வியவிடும்பை தீர"

என இருபாடங்கள். இருவர் வியாக்யானங்களிலும் (பெரியவாச்சான் பிள்ளை, காஞ்சீ ஸ்வாமி) **இடும்**பை தீர என்னும் இரண்டாம் பாடம் மூலபாடமாக இடம் பெற்றுள்ளது. பெரியவாச்சான் பிள்ளை உரை வரையும் பொழுது முதல் பாடத்தையும் காட்டியுள்ளார் இரண்டாம் பாடத்தில் உள்ள 'வவ்விய' என்னும் சொல்லை மன்னிய என்று பெரியவாச்சான் பிள்ளை காட்டியுள்ளார்.

"இலங்கைக்கு நித்யமாயிருப்பதொரு தாரித்ர்யமுண்டு. புற்று, பாம்பறாதாயிருக்குமா போலே **துர்வர்க்கமான** ராக்ஷஸ ஜாதி மாறாதேயிருக்கையாகிற தாரித்ர்யம் **தீர**" என்றருளியுள்ளார். பிறகு முதல் பாடமான இடும்பை **கூர** என்பதில்கூர என்று பாடமாய்த் தாகில் இடும்பை மிக, அத்தை அம்பாலே போக்கினவெந்தை" என்று பொருள் தந்துள்ளார். இரண்டு பாடங்களையும், பெரியவாச்சான் பிள்ளை காட்டியுள்ளார். **உரையாசிரியர் உரையால் வந்த பாடபேதமாகக் கொள்ளலாம்.**

65. பாசுரம் எண்:– 4 – 8 – 5:–

"நின்மலன்தானென்று", "நின்மலனென்றென்று"

என இருபாடங்கள். இரண்டாம் பாடமே இரண்டு நூல்களிலும் உள்ளது. 'என்றென்றோதி, என்றும் இப்படிப்பலகால் சொல்லி' என்று பதவுரையிலுள்ளது. நின்மலன்தானென்று என்னும் பாடம் வியாக்கியானங்களிலில்லை. அப்பகுதிக்குப் பொருள் கூறுமிடத்துத் தலைவி உறுதியாகப் பார்த்தன்பள்ளி எம்பெருமானே என்று கூறுவதாகக் கொள்ளலாம்.மீளமீளச் சொல்லுதல் உணர்வு வயப்பட்டுக்கூறுவதாகக் கொள்ளலாம்.உறுதியாகச் சொல்லுதல் தெளிவோடுகூறுவதாகக் கொள்ளலாம். உணர்வு பூர்வமானபாடலாகக் கொள்ளும் முன்னோர் பாடம் சிறந்தாகும். உரையாசிரியர். 'அவர் வடிவழகைக்கண்ணாலே பார்த்துக் கவிழ்ந்து நின்று கண்ணநீரை வழவிடுமவளிறே' என்று அருளியுள்ளமையால் உணர்வு பூர்வமானபாடலாகக் கொள்ளலாம்.

66. பாசுரம் எண்:– 4 – 9 – 6:–

"நும்மடியார்", "உம் அடியார்"

என இருபாடங்கள். முதல் பாடமே ஈருரைகளிலும் உள்ளது. பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானப்ரதீகத்தில் '(உம்மடியாரித்யாதி) உம்மைப் பிரிந்து பின்னையும் காணலாம் என்ற நசையாலே' என்றுள்ளது. வியாக்யானப் பகுதியில் உம்மடியாரித்யாதி என்றிருப்பதற்கேற்பஇந்தப் பாடபேதம் வந்திருக்க வேண்டும். காஞ்சீ ஸ்வாமியும் இதே போன்று உரையருளியுள்ளார். நும், உம், ஒரே பொருளில்வருவன.

67. பாசுரம் எண்:— 4 — 9 — 6:—

"நமக்கு இவ்வுலகத்தில்", "நமக்கு இவ்வுலகத்து"

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்கியான மூலபாடமாகும் உரையில், "(இவ்வுலகத் தெல்லாமறிவீர்) .... இந்த லோகத்தில் உம்முடைய ஜ்ஞானத்துக்கு அவிஷயமாயிருப்ப தொன்றில்லை" என்றுள்ளது. **லோகத்தில் = உலகத்தில்** என்பதால் உரையைப் பின்பற்றி முதல் பாடம் வந்திருக்க வேண்டும். காஞ்சீ ஸ்வாமி உரையில் முதல் பாடமே மூலபாடமாக உள்ளது. ஆயினும் பதவுரையில் இவ்வுலகத்து எல்லாம் அறிவீர். இவ்வுலக நடையெல்லாமும் தெரிந்து, கொண்டிருக்கிறீர் என்றுள்ளது.

68. பாசுரம் எண்:— 4 — 9 — 9:—

"தம்மானென்றென்று எமரேழேழளவும்",
"தம்மானென்றெமரேழளவும்"

என இரு பாடங்கள். இரண்டாம் பாடம் மூலபாடமாக வியாக்யானத்திலுள்ளது வியாக்யானத்தில் பாடமாக (அடிக்குறிப்பில்), 'எமரேழளவும்', 'எமரேழேழளவும்' என இருபாட பேதங்கள் காட்டப் பெற்றுள்ளன. 'என்னுடைய குலநாதனென்று ஏழுபடி கால் தேவர் திருவடிகளில் கைங்கர்யத்தையொழியச் செல்லாதே வந்து நிற்கிற' என்று உள்ளது. பெரியாழ்வார் எந்தை தந்தை பாசுரப்படி உரை உள்ளது. 'என்று எமரேழளவும்' என்பது உணர்ச்சியுடன் கூறும் பாடம். அதே போல எமர் ஏழேழளவும் உணர்ச்சியுடன் கூறும் பாடம் (ஏழேழ் – ஏழு ஏழு என இருமுறை) பாட பேதம் குறித்து எந்த விளக்கமுமில்லை. காஞ்சீ ஸ்வாமி எமரேழளவும் என்பதை மூலபாடமாகக் காட்டியுள்ளார்

இருபாடங்களும் ஏற்கப் பெற்றுள்ளன.

69. பாசுரம் எண்:— 4 — 10 — 6:—

"காற்றிடைப்பூளைகரந்தென",
"காற்றிடைப்பூளைகரந்தன"

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடமாகும். காஞ்சீ ஸ்வாமியும் இரண்டாம் பாடத்தை மூலப் பகுதியில் காட்டியுள்ளார். "பெருங்காற்றிலே பூளையானது (பூவின் பெயர்) பறந்து உருமாய்ந்து

போமாபோலே என்று வியாக்யானம் உள்ளது. காற்றில் பூபறந்து உருமாய்ந்து **போமா போல" என்று உவமையாகக்கூறப்பெற்றுள்ளது.** முதற் பாடத்தில் இடம் பெறும் கரந்தென என்பது கரந்தாலன்ன என்றும் பொருள் தரும். உரையில் உவமையாகக் கூறப்பெற்றுள்ளதால் முதல்பாடமும் பொருந்தும். உரைகளில் பாடபேதம் என்று இடம் பெறவில்லை.

70. பாசுரம் எண்:– 4 – 10 – 7:–

"செய்வனென்றுணர்ந்த", "செய்வனென்றுணர்ந்து"

என இருபாடங்கள். முதற்பாடம் வியாக்யான மூலபாடமாகும். "யாகமென்றொரு வ்யாஜத்தையிட்டு என்னுடைய ஸர்வதநத்தையும் பரார்த்தமாக்கக் கடவேன் என்றனுஸந்தித்த மகாபலியுடையவென்னுதல்" என்று உரையருளியுள்ளார். அவர் "இரண்டாம் பாடமான (உணர்ந்து) என்றாகில், என்னை இரந்த இந்திரனுக்காக நானென்னை இரப்பாளனாக்குவன் என்று மகாபலி யஜ்ஞவாடத்திலே போய்ப்புக்கு" என்று உரையருளியுள்ளார். **உரைப்படி அமைந்த பாடபேதம் இஃது எனலாம்.** காஞ்சீ ஸ்வாமி முதற் பாடத்தை வியாக்யான மூலபாடம் என்று கொண்டுள்ளார். இரண்டாம் பாடத்தையும் காட்டி முன் போலேவே உரையருளியுள்ளார்.

71. பாசுரம் எண்:– 4 – 10 – 8:–

"மார்வைமுன்கீண்ட", "மார்வம் முன் கீண்ட"

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்கியான மூலபாடமாகும். 'அவனுடைய பரந்த மார்வைக் கிழித்துப் பொகட்ட' என்று உரையருளியுள்ளார். அடிக்குறிப்பில் 'மார்வம்' பாடபேதமாகத் தரப் பெற்றுள்ளது. 'மார்வம் முன்கீண்ட', என்பது வேற்றுமைத் தொகையாகும். முதற்பாடம் வேற்றுமை விரியாகும். மார்பு, மார்வு, பகர வகர மாற்றம் எனப் பெறும். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மூலத்திலும் உரையிலும் தந்துள்ளார். அவர் பாட பேதம் சுட்டவில்லை.

பெரிய திருமொழி – ஐந்தாம் பத்து

72, பாசுரம் எண்:- 5 — 1 — 1:—

"குறியமாணுருவாய", "குறியமாணுருவாகிய"

எனஇருபாடங்கள் இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடமாக உள்ளது. காஞ்சீ ஸ்வாமி, 'குறியமாணுருவாய என்ற பாடமே (முதல் பாடம்) இவ்விடத்திற்குச் சேரும். பெரியோர் ஓதுவதுமிப் பாடமே' என்றருளியுள்ளார். அவர், 'திருவாய்மொழியில் (4 – 10 – 10) திருக்குருகூரதனுள் குறியமாணுருவாகிய என்றது இங்கும் வந்து நுழைந்தது' என்றருளிச் செய்துள்ளார். பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானப் பகுதியில் (குறியவித்யாதி) என்றுள்ளது. குறியமாணுருவாகிய என்ற ப்ரதீகம் வெளிப்படையாக இல்லை. பாடபேதமும் இடம் பெறவில்லை.

73, பாசுரம் எண்:- 5 — 1 — 10:—

"நில்லாதுயர்தாமே", "நில்லாதுயர்தானே"

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடத்திலும் உள்ளேயும் இடம் பெற்றுள்ளது "(சோரநில்லாதுயர் தானே) இவ்வாத்மவஸ்துவைச்சோரக் கொடுக்கும் வினை நில்லாது' இத்திருமொழியின் அனைத்துப் பாடல்களும் தானே (1 – 9) என்று முடிவதால் இறுதிப்பாடலிலும் தானே என்று முடித்திருக்கலாம். 'துயர்' ஒருமை என்பதால் 'தானே' என்று முடிவதுசரியே. நில்லாதுதுயர்தானே என்ற தொடரில் து கெடுதல் விகாரமாகக்கொண்டால்இந்தப் பாடம் சரியே. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தைத் தம் உரையில்காட்டியுள்ளார் சோரநில்லா துயர் தாமே என்பது நில்லா என்னும் பாடற்பகுதிக்குப் பொருந்தும். பாடபேதம் பற்றிய குறிப்பு இல்லை.

74, பாசுரம் எண்:- 5 — 4 — 7:—

"வாழிடமென்பரால்", "வாழுமிடமென்பரால்"

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்கியானமூலபாடம், உரையில், 'வர்த்திக்கிற தேச மென்பர்'. என்றுள்ளது. நிகழ்காலமாகச் செய்தி உள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மூலபாடமாகக் கொண்டுள்ளார்.

உரைப் பகுதியில், 'நித்யவாஸம் **பண்ணுமிடம்** என்று சொல்லுவார்கள்' என்றருளியுள்ளார். **வாழிடம்** என்பது வினைத்தொகை. வாழ்ந்த இடம், வாழும் இடம், வாழப் போகும் இடம் (காலம் காட்டாப்பெயரெச்சம்) உரையில் (நித்யவாஸம்) ஆகவே. காஞ்சீ ஸ்வாமி இப்பாடத்தை மூலத்தில் காட்டியிருக்கலாம். பாடபேதம் உரையில்சுட்டப் பெறவில்லை.

75. பாசுரம் எண்:— 5 — 4 — 6:—

"வாழிடமென்பரால்", "வாழுமிடமென்பரால்"

என இருபாடங்கள்வியாக்யானமூலத்தில் இரண்டாம் பாடம் உள்ளது. பொருள் தரும் இடத்தில் 'நித்யவாஸம்பண்ணுமிடம்' என்று நிகழ்காலச் செய்தியாக உள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தைத்தந்துள்ளார். பொருள் தரும் பொழுது 'வாழும் திவ்ய தேசம் என்று சொல்லுவர்' என்றருளியுள்ளார். பாடபேதம் சுட்டப் பெற வில்லை. இரண்டு பாடங்களும் பொருந்தும்.

76. பாசுரம் எண்:— 5 — 4 — 7:—

"மாமறையோர்", "மறையோர்"

என இருபாடங்கள் இரண்டாம் பாடம் வியாக்கியானமூலபாடம். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மேற்கொண்டுள்ளார். மாமறையோர் என்ற சொல்லுக்கு சிறந்தவைதிகப் பிராமணர்கள் என்று உரைதந்துள்ளார். மா – உரிச்சொல் மா என்னும் சொல்லுக்குப் பெருமை, திரு எனப் பொருள்கள் உள\. மாவேபெருமையும்.... உரைதிரு என ஆறையும் பொருந்தும் (திவாகர நிகண்டு 1929) திருமங்கையாழ்வார் திவ்யதேசங்களில் உள்ள அந்தணர்களைப் போற்றும் பண்பாளர் ஆவார்.

எடுத்துக்காட்டுகள்:—

1. பெரிய வண்மை மிகு மறையவர்கள்மலிவெய்துநாங்கூர் (3 – 9 – 6).
2. தெளிந்த நான்மறையோர் நாங்கைநன்னடுவுள் (4 – 3 – 9).
3. ஓங்கிய நான் மறையனைத்தும் தாங்கு நாவர் (4 – 4 – 9).
4. நந்தாத பெரும் புகழ் வேதியர்நாங்கூர் (4 – 7 – 2)
5. தென்திசைக்குத்திலகமன்னமறையோர் (4 – 8 – 8)

மாறன்மறைக்கு அங்கம் தந்தவர்திருமங்கை ஆழ்வார். நம்மாழ்வார் "அவனுறையும், பாடும் பெரும் புகழ் நான்மறை வேள்வியைந்து ஆறங்கம் பன்னினர் வாழ், நீடு பொழில்திருவாறன்விளை தொழ" திருவாய்மொழி (7 – 10 – 3) என்று வேதியர்பெருமையைக்காட்டித்தந்துள்ளார். அவரைப் பின்பற்றி திருமங்கையாழ்வாரும் இவ்வாறு அருளினார் ஆகவே, மாமறையோர் என்னும் பாடம் சிறந்தது ஆகும்.

77. பாசுரம் எண்:– 5 – 4 – 9:–

"மாயையாரும்", "மாயையையாரும்",

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடமாகும். "இந்த ஆச்சர்ய சக்தியை" என்று பதஉரையில் உள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை உரையில் காட்டியுள்ளார். இரண்டாம் பாடம் இரண்டாம் வேற்றுமை விரி ஆகும். முதல் பாடம் இரண்டாம் வேற்றுமைத் தொகையாகும். பொருள் வேறு படவில்லை. இரண்டும் ஏற்கத்தக்கனவே. உரைகளில் பாடபேதம் காட்டப் பெறவில்லை.

78. பாசுரம் எண்:– 5 – 5 – 9:–

"அந்தோவந்துஎன்மகளை",

"அந்தோ வென்பொன் மகளை"

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடமாகும். பெரியவாச்சான் பிள்ளை இரண்டாம் பாடத்தையும்காட்டியுள்ளார். "**என் பொன் மகள்** என்று பாடமானபோது ச்லாக்யையான பெண் பிள்ளையென்றபடி" என்றருளியுள்ளார். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மேற்கொண்டுள்ளார் பாடபேதம் சுட்டவில்லை.

79. பாசுரம் எண்:– 5 – 6 – 4:–

"தளர்ந்ததிர", "தளர்ந்துதிர"

என இருபாடங்கள் இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடம் "ஊர்ந்து வருகிற சகடம்சிந்நம்பிந்நமாய்ப்போம்படி திருவடிகளாலே உதைத்தவனை" என்று உரை. காஞ்சீபுரம் ஸ்வாமியும் வியாக்யானத்திலுள்ளபடி உரை

வரைந்துள்ளார். பொருத்தமான பாடமாக உள்ளது. முதல் பாடத்தில் அதிர என்றுள்ளது அதிரல் = அதிர்ப்பு: அதிர்ப்பு = 1. அச்சம். 2. நடுக்கம்.

அதிர்ப்பு, கம்பலை................அச்சம் ஆகும், (திவாகர நிகண்டு 1484)

விதிர்ப்பு, பணிப்பு,......................அதிர்ப்பு...**நடுக்கம்** ஆகும். (திவாகர நிகண்டு 1626)

சகடம் தூளாய்உதிர்ந்தது என்பது இரண்டாம் பாடம்.சகடாசுரன் அச்சம் கொண்டான் நடுங்கினான் என்று பொருள் கொள்ளும் பொழுது அதிர என்னும் முதல் பாடம் பொருந்தும் அசுரன் சகடமாக வந்தான் என்பது நோக்கத்தக்கது.

80. பாசுரம் எண்:– 5 – 6 – 7:–

"வந்து என்மனத்து", "வந்து எனது மனத்து"

என இருபாடங்கள் இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடம். "என் நெஞ்சிலே பிறப்பிக்கைக்காகத் தானே வந்து மநஸ்ஸிலே விடாதே பொருந்தியிருக்கிறவனை" என்று உரை. காஞ்சீ ஸ்வாமியும் இதே பாடத்தைக் காட்டியுள்ளார். முதல் பாடம் ஆறாம் வேற்றுமைத் தொகை (என்) இரண்டாம் பாடம் ஆறாம் வேற்றுமை விரி (எனது)

"ஆறனொருமைக்கதுவும் ஆதுவும் பன்மைக்கவ்வும் உருபாம்,...."

(நன்னூல் 300)

81. பாசுரம் எண்:– 5 – 6 – 10:–

"சாராதீவினை தானே", "சாரா தீவினை தாமே"

என இருபாடங்கள் முதற் பாடம் வியாக்யான மூலபாடம். உரையில், துஷ்கர்மங்கள் தானே இது நமக்கு நிலமல்ல என்று விட்டோடிப்போம் என்றருளியுள்ளார். (உரையில் பன்மையில்) கர்மங்கள் என்றுள்ளமையால் தாமே என்ற பாடம் வந்திருக்க வேண்டும். உரையைப் பின்பற்றி வந்தமைந்த பாடபேதம் எனலாம். காஞ்சீ ஸ்வாமியும் முதற்பாடத்தைக் காட்டியுள்ளார். பதவுரையில் தீவினை சாரா – பாவங்கள் அணுகமாட்டா என்று பன்மையில் பொருள் தந்துள்ளார். பாடபேதங்கள் சுட்டப் பெறவில்லை.

82. பாசுரம் எண்:— 5 — 8 — 8:—

"கடியதோர் தெய்வம்", "கடியதெய்வம்"

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடம், "(கடியதோர் தெய்வம்) இப்படியிருப்பதொரு தேவதையை, இதுக்கு முன் நான் கண்டறியேன்" என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் முதல் பாடத்தையே ஏற்றுள்ளார். "கொடுந்தன்மையுடையதான ஒரு தெய்வமானது" என்று உரையில் அருளியுள்ளார். தொல்காப்பியம் நூற்பா **455** வருமாறு :–

முதல் ஈர் எண்ணின் முன் உயிர் வருகாலைத்

தவலெனமொழிப உகரக்கிளவி

முதனிலைநீடல்ஆவயினான (தவல் = கேடு)

(ஒரு இரு என்ற சொற்களின் முன் **உயிர் எழுத்து வந்தால்** உகரம் கெட்டு முதலில் நின்ற எழுத்து நீளும். ஒரு – ஓர் ஆகும். இரு ஈர் ஆகும்.

ஒரு + அகல் = ஓரகல்; இரு + இலை = ஈரிலை;

ஆனால், ஒரு + தெய்வம் = ஒருதெய்வம் (தெ – உயிர் – மெய்யெழுத்து) செய்யுளில் இம்மரபு மாறி வருதலுண்டு என்பதற்கு இப்பாடம் எடுத்துக்காட்டு. திருவிருத்தம் 21, இரண்டாம் அடி ஒரு + மாயையினால் = ஓர் மாயையினால்.

83. பாசுரம் எண்:— 5 — 8 — 10:—

"நும்மிடைப்பாவம்நில்லாவே", "நும்முடைப் பாவம் நில்லாவே"

என இருபாடங்கள் முதல் பாடம் வியாக்யான மூலபாடம் ஆகும். "(பாட நும்மிடைப்பாவம் நில்லாவே) பால்குடிக்க நோய் தீருமாபோலே இவருடைய பாசுரத்தைச் சொல்ல ப்ராப்தி ப்ரதிபந்தகங்கள் தன்னடையே விட்டுப்போம்" என்று உரையருளியுள்ளார். காஞ்சீ ஸ்வாமியும் முதல் பாடத்தையே ஏற்றுள்ளார். உங்களிடத்திற் பாவங்கள் நிற்கமாட்டாஎன உரை வரைந்துள்ளார். பாவம் = பாவக்கூட்டங்கள் இடை என்ற சொல் இடம் என்று பொருள் தரும் இடைச்சொல்லாகவும் வரும் (கோனார் தமிழ்க் கையகராதி பக் 55) நும்மிடம் உள்ள பாவம் எனப் பொருள் தரும். இரண்டாம் பாடத்தில் நும் +

உடைய = நும்முடை என வந்துள்ளது. நும்முடைய பாவங்கள் நில்லா என்று பொருள் அமையும். பாடபேதங்கள் உரைகளில் சுட்டப் பெறவில்லை.

84. பாசுரம் எண்:— 5 — 9 — 1:—

"கையிலங்காழிசங்கன்", "கையிலங்காழி சங்கம்"

என இருபாடங்கள். முதல்பாடம் வியாக்யான முலபாடமாகும். உரையில் "கையிலங்காழி சங்கன் கருமுகில் திருநிறத்தன் என்னவுமாம்; **அன்றிக்கே (கையிலங்காழி சங்கம் கருமுகில் திரு நிறத்தன்)** என்றாகவுமாம்" என்று இரண்டாம் பாடத்தையும் காட்டியுள்ளார். "கையிலே விளங்கா நின்றுள்ள திருவாழியையும் ஸ்ரீ பாஞ்ச ஜந்யத்தையுமுடையவன்" என்று இரண்டாம் பாடத்துக்குப் பொருள் வரைந்துள்ளார். காஞ்சீ சுவாமி முதற் பாடத்தை ஏற்றுள்ளார். அவர் உரையில் பாடபேதம் சுட்டப் பெறவில்லை. **உரையாசிரியர் வியாக்யானப்படி அமைந்த பாடபேதத்திற்கு எடுத்துக்காட்டாக இதனைக் கொள்ளலாம்.**

85. பாசுரம் எண்:— 5 — 9 — 3:—

"கருவரைவண்ணன்தென்பேர்",

"கருவரைவண்ணன் தன் பேர்"

என இரு பாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடம். உரையில் "(தென் பேர் கருதி) அங்கே புக்கநுபவிக்க வேணும் என்று மநோரதித்த நானுஜ்ஜீவித்துப் போம்படியே!" என்றருளியுள்ளார். அதன் பின் இரண்டாம் பாடமாகிய "**(தன்பேர் கருதி)** அவ்வடி வழுக்குக்கு வாசகமான திருநாமத்தைச் சொல்லி ஒருவனுஜ்ஜீவிக்கும்படியே!" என்றருளியுள்ளார். முதல்பாடம் தென்பேர் என்னும் திவ்யதேசத்தைச் சுட்டுவது. இரண்டாம் பாடம் அவ்வூர் இறைவன் திருநாமத்தைச் சுட்டுவது. காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தைத் தம் உரையில் காட்டியுள்ளார். பாடலின் மூன்றாம் அடியில் பெருநகர் என்னும் சொல்லுக்குத் திருப்பேர் நகர் என ஊர் பெயரைச் சுட்டி உரை வரைத்துள்ளார். ஆகவே, அவர் பாடபேதம் சுட்டவில்லை எனலாம்.

86. பாசுரம் எண்:— 5 — 10 — 1:—

"தாய் செறஉளைந்து", "தாய் சிறவுளைந்து"

என இருபாடங்கள் ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனரின் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில்) (சிற = சீற என்பதன் குறுக்கம் என்றுள்ளது. **தாய் செறஉளைந்து** என்னும் முதற் பாடம் வியாக்யான மூலபாடமாகவுள்ளது. உரையில், "(தாயித்யாதி) தாயான யசோதைப் பிராட்டி சீறித்தாம்பெடுக்க அதுக்கு முன்னேபடுமது சொல்லுகிறது" என்றுள்ளது.

செறுதல் –: செற – பெயர்ச் சொல் செற்றம்.

கறுப்பு குரோதம் கலாமே உடன்றல்

சிவத்தல் வெயர்த்தல் விளிவே **செற்றம்**

முனைவே, காய்தல் பைத்தல்விடைத்தல்

சினமே வேகம் கதமே வெகுளி,

முனிவே **சீறல்**, உருத்தல், கோபம் (திவாகர நிகண்டு 1581)

கோபத்தின் பெயர்களாக 19 சொற்கள் இப்பகுதியில் உள்ளன. **செறுதல், சீறுதல்** ஆகிய இரண்டும் ஒரே பொருள் தருவனவாக உள்ளன. வியாக்யானத்தில் 'செற' என்னும் சொல்லுக்குச் சீறி என்னும் பொருள் தரப் பெற்றுள்ளமையால் இப்பாடம் வந்தமைந்தது எனலாம். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தினைத் தம் உரையில் ஏற்றுள்ளார். செற = செறுதலாவது கோபித்தல். இரண்டாம் பாடமும் காட்டியுள்ளார். சிற என்னும் பாடத்தில் சீற என்பதன் குறுக்கல் விகாரமென்ன வேண்டும் என்றருளியுள்ளார் இரண்டு பாடங்களையும் காட்டியுள்ளார். திவாகர நிகண்டு நூற்பா. உரையாசிரியர்கள் கருத்தை உறுதி செய்கிறது. **உரைக்கு ஏற்ப அமைந்த பாட பேதத்துக்கு எடுத்துக் காட்டாக இது திகழ்கிறது.**

87. பாசுரம் எண்:– 6 – 1 – 4:–

"உலகமும் உயிர்களும்", "உலகமும் உயிரும்"

என இருபாடபேதங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடம் "(நிலவொடு) ....லோகங்களும் அவற்றிலுண்டான பிராணிகளும். ஆகிய இவற்றை ஒருகால் வயிற்றிலே வைத்து" என்று உரை உள்ளது. வேறுபாடம் இடம் பெறவில்லை. காஞ்சீ ஸ்வாமியும் மேற்கூறிய பாடத்தை (முதல்) ஏற்று உரை வரைந்துள்ளார். இரண்டாம் பாடத்தில் உலகமும். உயிரும் என இரண்டு சொற்களும்ஒருமையில் உள்ளன. உலகமும் – உலகங்களும். உயிரும் – உயிர்களும் என்று பொருள் தரும் பகுதியில் உள்ளன. நெல் விளைந்தது என்னும் பொழுது ஒரு நெல் விளைந்தது என்று பொருள் கொள்வதில்லை நெற்கூட்டங்களுக்கு இணையாக நெல் என்ற சொல்லைக் கொள்கிறோம். அதுபோலப் பொருள் கொள்ள இரண்டாம் பாடமும் பொருந்துவதாகிறது.

88. பாசுரம் எண்:– 6 – 2 – 1:–

"ஆர்வச்செற்றமவை தம்மை", "ஆர்வச்செற்றமவை தன்னை"

என இருபாட பேதங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடம்; "(அவை தன்னை மனத்தகற்றி) இப்படி நெடுநாள் வாஸநை பண்ணிப் போந்த இவற்றைக் கழித்துக் கொள்ளப் பார்த்து" என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் வியாக்யான பாடத்தையே மேற்கொண்டுள்ளார். முதல் பாடத்தில் 'அவை' வந்துள்ளது (பலவின் பால் பன்மையில் உள்ளது)" தாம் என் கிளவி பன்மைக் குறித்தே" (தொல்காப்பியம் நூற்பா 669) "தான் என் கிளவி ஒருமைக்குரித்தே" (தொல்காப்பியம் 670) 'அவையுடன்' 'தம்மை' வருதல் முறை. 'அவையுடன்' தன்னை' வருதலை வழுவமைதியாகக் கொள்ளல் தகும்.

89. பாசுரம் எண்:– 6 – 2 – 3:–

"ஊனே யாக்கை தன்னை",

"ஊனேராக்கை தன்னை"

என இரு பாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடம். "ஊனே யாக்கை என்னவுமாம்" என்று பாடபேதமும் உரையில் உள்ளது. (முதல் பாடம்) காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தைத் தம் உரையில் மூலபாடமாகக் கொண்டுள்ளார். இரண்டாம் பாடத்தைப் பாட பேதமாகக் காட்டியுள்ளார். முதல் பாடப் பொருள். "ஊனே யாக்கை" "ஊன் ஏய்யாக்கை"

"மாம்ஸாதிகள் நிறைந்த தான சரீரத்தினுடைய"(காஞ்சீ ஸ்வாமி)

இரண்டாம் பாடப் பொருள் 'ஊனேராக்கை', 'ஊன் ஏர் யாக்கை'

"மாம்ஸமயமாய் புருஷார்த்த ஸாதகமாகையாகிற அழகையுடைய தான கேவல சரீரத்தையும்"(வியாக்யான உரை).

90. பாசுரம் எண்:– 6 – 2 – 4:–

"செறிந்தேன் நின்னடிக்கே",

"செறிந்தேன்நின்னடைந்தேன்"

என இரு பாடங்கள். முதல் பாடம் வியாக்கியான மூலபாடமாகும். "செறிந்தேன் – இடையறப் பொருந்தினேன். என்னும் பொருள்" பதப்பொருட் பகுதியில் தரப்பெற்றுள்ளது.காஞ்சீஸ்வாமியும் முதல் பாடத்தையேஏற்றுள்ளார் "நின்னடிக்கேசெறிந்தேன் உனது திருவடிகளுக்கேபொருந்தினேன்" என்று உரையருளியுள்ளார். இதனால் இரண்டாம் பாடத்திலுள்ள நின்னடைந்தேன் என்னும் பகுதிக்கு இணையாகச் செறிந்தேன் உள்ளது. அடுத்த பாடலிலும் (5) பாடல் 1, 3 ,6, 7, 8, 9 ஆகிய பாடல்களிலும் நின்னடைந்தேன் இடம் பெறுகிறது.அதையொட்டிஇப்பாடம் வந்திருக்க வேண்டும்.உரைகளில் பாடபேதம் சுட்டப் பெறவில்லை.

91. பாசுரம் எண்:– 6 – 2 – 8:–

"வெந்நரகத்து இடவுற்று விரைந்து வந்தார்", "வெந்நரகத்து இடருற்று விரைந்து வந்தார்"

என்பன இரண்டுபாடங்கள். இரண்டாம் பாடம் வ்யாக்யான மூலபாடமாக உள்ளது, பதவுரையில் இட உற்று என்றுள்ளது. பொருள் விளக்கப் பகுதியில், 'நரகத்திலே தள்ளுவதாக வந்தன' என்றுள்ளது. பாடபேதம் சுட்டப் பெறவில்லை. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்று உரை வரைந்துள்ளார். "மேவாவெம் நரகத்து இடவுற்று விரைந்து வந்தார் – பொருந்தாத கொடிய நரகத்திலே (என்னைத்) தள்ள முயன்று வெகு வேகமுடையன வாயிருக்கின்றன" என்று உரை தந்துள்ளார். அவர் மேலும், "இப்பாசுரத்தில் இரண்டாமடியில் நெடுநாளாகவே ஒரு பாடப்பிழை நேர்ந்துள்ளது. மேவாவெந் நரகத்து இடருற்று என்றே பலரும் ஓதுவர். பல புத்தகங்களில் பாடமும் இதுவேயாகக் காண்கிறது. இப்பாடம் பொருளற்றது. 'இடவுற்று' என்பது இடருற்று எனப் பிழைபட்டது. இதற்குமுன் பாட்டில் (6 – 2 – 7)" "ஆறாவெந் நரகத்து அடியேனை இடக்கருதி" என்றுள்ளதையும் சுட்டியுள்ளார். இதனால் முதல் பாடம் ஏற்கத்தக்கது. வியாக்யானப் பகுதியில் 'நரகத்தில் தள்ளுவதாக' என்றுள்ளமையும். இதனை உறுதி செய்கிறது. இரண்டாம் பாடம் பொருந்தாது என்னும் காஞ்சீ ஸ்வாமி கருத்தும் ஏற்புடையது.

92. பாசுரம் எண்:– 6 – 3 – 9:–

"மல்லா! குடமாடீ"!, "மல்லார் குடமாடீ"!

என இருபாடங்கள். **மல்லார் குடமாடி** என்னும் பாடம் வியாக்யான மூலபாடமாக உள்ளது. "(மல்லார்குடமாடி) மிடுக்கால் மிக்கு, மன்றிலே குடக்கூத்தாடி" என்றுள்ளது. வியாக்யான பாடம் குடமாடி (டி குறில்) காஞ்சீ ஸ்வாமி பாடம் டீ (நெடில்) "(மல்லாகுடமாடி) என்று பாடபேதமாகில் செருக்கனே! செருக்குக்குப் போக்கு விட்டுக் குடக்கூத்தாடினவனே என்றாகிறது" என்றருளியுள்ளார். காஞ்சீ ஸ்வாமி மல்லா! குடமாடீ என்னும் முதல் பாடத்தை மூலபாடமாகக் கொண்டுள்ளார். உரையில், "மூன்றாமடியில் 'மல்லார் குடமாடீ', 'மல்லாற்குடமாடீ' 'மல்லா! குடமாடீ!' என மூன்று பாடங்கள் உண்டு. மல்லா! குடமாடீ என விளியானபாடமே மிக வழங்குவது.

மல்லா! = மிடுக்குடையவனே!, குடம் ஆடீ!. குடக்கூத்தாடிவனே!" எனப் பொருள் தந்துள்ளார்.

93. பாசுரம் எண்:— 6 — 4 — 3:—

"செங்கோல் வலவன்", "செங்கோல் வளவன்"

என இருபாடங்கள் முதல் பாடம் வியாக்யான மூலபாடம், "(செங்கோலித்யாதி) துரபிமானியான க்ஷத்ரியனானவன் பக்நாபிமாநியாய்த் திருவடிகளிலே விழுந்து ஸ்தோத்ராதிகளைப் பண்ணி ஆச்ரயித்து த்ருஷ்டத்தில் தனக்கு வேண்டுமவற்றைப் பெற்று உஜ்வலனாகிற ஊர்," என உரை வரைந்துள்ளார். காஞ்சீபுரம் ஸ்வாமியும் முதல் பாடத்தை ஏற்று உரை வரைந்துள்ளார். செங்கோல் வலவன் – அரசாட்சி புரிந்த சோழராஜன். "இத்திருப்பதியில் செங்கணான் கோச்சோழன் அபிமானியாயிருப்பானென்ப" என்றும் அருளியுள்ளார். 'அம்பரமும் பெருநிலனும்' என்று தொடங்கும் பதிகத்தில் முதல் ஒன்பது பாசுரங்களில்(6 – 6). இந்த மன்னன் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. "சென்னி, வளவன், கிள்ளி, செம்பியன்.... என்பது சோழன் பெயரே"திவாகர நிகண்டு நூற்பா (181) சோழன் பெயர்கள் 13 இந்நூற்பாவில் இடம் பெற்றுள்ளன. அதையொட்டிஇந்தப் பாடம் (பாடம் 2) வந்தது எனலாம். (6 – 6 – 8) ஆம் பாடலில் **வளச்சோழன்** என்றுள்ளமையும் காணத்தக்கது.

94. பாசுரம் எண்:— 6 — 6 — 9:—

இவரிவரென்று, அவரிவரென்று

என இருபாடங்கள்.வியாக்யானமூலபாடமாக இரண்டாம் பாடம் உள்ளது. "(பாராளரித்யாதி)பூமிப்பரப்புக்கடையநிர்வாஹகராய், **இன்னார் இன்னார்** என்று ப்ரஸித்தராயிருக்கிறராஜாக்கள்" என்று உரை உள்ளது. மூலபாடத்திற்கு மாறுபட்டு உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் இரண்டாம் பாடத்தை ஏற்று உரை வரைந்துள்ளார். "அவர் இவர் என்று பாராளர் = இன்னாரின்னார் என்று ப்ரஸித்தராய்க் கொண்டு பூமியைஆள்பவராய்" என்றருளியுள்ளார். இருவருரையிலும் **இன்னார் இன்னார்** என்னும் தொடர் உள்ளது. இ அண்மைச்சுட்டு அ சேய்மைச்சுட்டு இருவர் உரைகளிலும் இரண்டு அண்மைச் சுட்டுகள் உள்ளமையால் இவரிவர் வந்தது எனலாம். **உரையையொட்டிய பாடபேதத்துக்கு இதனை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.**

95. பாசுரம்எண்:— 6 — 7 — 2 :—

நனிசேர் கமலம் முகம் காட்டும்,

நனி சேர் வயலுள்முத்தலைக்கும்

என இருபாடங்கள்வியாக்யானமூலபாடமாக முதல் பாடம் உள்ளது உரையில் "(நனி சேர் வயலுள்முத்தலைக்கும்) கடல் போலே பரந்த வயலிலே முத்தானது அலையா நின்றுள்ள)" என்று இரண்டாம் பாடத்திற்கு உரை உள்ளது. **"'அன்றிக்கேரீதிபேதம்'** (முறையில் மாறுபாடு) பிறவாமைக்காக (கமலம்) என்றதாகில் அவ்விரண்டுக்கும் ஆச்ரயமான முகத்தை, பெருத்த தாமரையானது காட்டும்" என்று முதல் பாடத்துக்குரிய விளக்கம் தந்துள்ளார். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மூலபாடத்தில்காட்டியுள்ளார். 'நனி சேர் வயலுள் முத்தலைக்கும்' என்னும் பாடமேமுதன்மையாகப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானத்தில் இடம் பெற்றுள்ளமையைக்காட்டியுள்ளார்.

பெரிய திருமொழி —ஏழாம் பத்து

96. பாசுரம் எண்:— 7 — 4 — 7:—

திருவடிவைச்சிந்தித்தேற்கு,

திருவடியைச்சிந்தித்தேற்கு

என இருபாடங்கள் இரண்டாம் பாடம் வ்யாக்யாந மூலபாடம்; உரையில் "(தண்சேறையெம்பெருமான்), ச்ரமஹரமான திருச்சேறையிலே நிற்கிற நாயனாருடைய ச்லாக்யமான வடிவழகை அநுஸந்தித்தேற்கு" என்று உரையருளியுள்ளார் இது முதல் பாடமான "திருவடிவைச்சிந்தித்தேற்கு" என்னும் பாடத்துக்குப்பொருந்துகிறது. ஆகவே, முதல் பாடத்தை உரையைப் பின்பற்றி அமைந்த பாடமாகக் கொள்ளலாம்.அடியவர்களுக்கு முக்கியமான தியான வஸ்து எம்பெருமான் திருவடிகளேயாகையால் இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடமாகியது எனலாம். காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தையேற்றுத் திருவடியை என்பதற்கு உரையிலும் விளக்கம் தந்துள்ளார்.

97. பாசுரம் எண்: 7 – 4 – 8:–

ஓவாதபாவங்கள் சேரா, ஓவாதுபாவங்கள் சேரா

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடம் "(ஓவாதபாவங்கள் சேரா) ஒரு க்ஷண காலமும் இடை விடாதே நெருங்கப்பண்ணின பாபங்கள் பலாநுபவத்துக்காகவந்துகிட்டா" என்று உரையருளியுள்ளார். காஞ்சீசுவாமியும் முதல் பாடத்தை ஏற்று இடைவிடாத பாவங்கள்கிட்டமாட்டா என்று உரைதந்துள்ளார். உரைகளில்பாடபேதங்கள் இடம் பெறவில்லை முதல் பாடம் **ஓவாத** பெயரெச்சம் இரண்டாம் பாடம் **ஓவாது** வினையெச்சம். ஓவாது தொடரும் பாவங்கள் சேரா என்று பொருள் கொள்ள அப்பாடம் பொருந்தும்.

98. பாசுரம் எண்:– 7 – 4 – 8:–

கண்ணாரக்கண்டுருகி, கண்ணாரக்கண்டிறைஞ்சி

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடம் ஆகும். உரையில், "கண்களினுடைய விடாய் தீரக்கண்டு அந்த ப்ரீதியினாலே இறைஞ்சி, உருகி என்றும் பாடமுமாம்" என்றுள்ளது. இரண்டு பாடங்களும் உரையில் இடம் பெற்றுள்ளன. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தைத் தம் உரையில் மேற்கொண்டுள்ளார். அடுத்த பாடலும் "என்னுள்ளமுருகுமாறே" என்று முடிவதுநோக்கத்தக்கது. காஞ்சீ ஸ்வாமி உரையில் பாடபேதம் சுட்டப் பெறவில்லை.

99. பாசுரம் எண்:– 7 -- 4 – 9:–

போதொருகால் கவலை யென்னும், போ தருகால் கவலை யென்னும்

என இரு பாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடம். "ஒருக்ஷணமுமிடைவிடாதே மறப்பாகிறஸாகரத்திலேஅழுந்திப்போந்தேன், துக்க ஸாகரமென்றும்சொல்லுவார்கள்," என்று உரை உள்ளது. கவலை என்னும் சொல்லுக்கு 'மறப்பு' 'துக்கம்' என இரு பொருள்கள் தந்துள்ளார். காஞ்சீ ஸ்வாமி **போதருகால் கவலை யென்னும்** இரண்டாம் பாடத்தை யேற்று உரை அருளிச்செய்துள்ளார். "ஒரு நொடிப்பொழுதும் இடை விடாதேதுக்கமாகிற பெருங்கடலில் அழுந்திக்கிடந்த எனக்கு" என்று உரை

அருளிச்செய்துள்ளார். **போதருகால் = நிகழுங்காலம் எல்லாம்** என்றபடி என்றும் உரைதந்துள்ளார். போதொருகால் என்ற பாடம் மறுக்கத்தக்கது என்றும் அருளியுள்ளார். (போது + ஒருகால்) மறுக்கத்தக்கது. ஒருகால் நிகழுங்காலமெல்லாம் என்னும் பொருள் தராது. ஆகையால் மறுக்கத்தக்கது என்றருளினார் எனலாம்.

100. பாசுரம் எண்:— 7 — 5 — 1:—

முந்திவானம் மழை பொழியும், முந்திவானம் மழை பொழிய

என இருபாடங்கள் முதல் பாடம் மூலபாடமாக உள்ளது. பெரியவாச்சான் பிள்ளை, "முந்திவானமித்யாதிவானமானது முந்தி மழையைப்பொழியுமாய்த்து" என்றருளியுள்ளார். காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தை ஏற்றுப் பொருள் வரைந்துள்ளார். அவர். மூன்றாமடியில் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் வானமானது முந்திமழை பொழியுமாய்த்து என்றிருக்கும் ஸ்ரீஸூக்தியைக் கண்டவர்கள் முந்திவானம் மழை பொழியும் என்று மூலபாடத்தைக் கற்பித்தனர், இது அந்வயிக்க அரிதாதலால், முந்திவானம் மழை பொழிய என்ற ப்ராசீநபாடமே கொள்ளத்தக்கது. இதில் வியாக்யான விரோதமுமில்லை வியாக்கியானம் தாத்பர்யரீதியிற் செல்லுதலால்" என்றருளியுள்ளமை நோக்கத்தக்கது.

101. பாசுரம் எண்:— 7 — 6 — 8:—

அலையார்கடல்போல்முழங்கும்தென்னழுந்தையில், அலையாரும்கடல்போல்முழங்கழுந்தையில்

என இருபாடங்கள். வியாக்யான மூலபாடத்தில் **அலையாரும் கடல் போல் முழங்கும் தென்னழுந்தையில்** என்றுள்ளது. இது இரண்டாம் பாடத்தின் முன் பகுதியையையும் முதல் பாடத்தின் பின் பகுதியையும் கொண்டு விளங்குகிறது. 'திரைக்கிளப்பத்தையுடைய கடல் போல் கோஷியா நின்றுள்ளதென்னழுந்தையில் மன்னி நின்ற' என்று பொருள் உரைக்கப் பெற்றுள்ளது. இதற்கிணையான பாடம் 'அலையாரும் கடல் போல் முழங்கும் தென்னழுந்தையில்' ஆகும். கோஷியாநின்றுள்ள = முழங்கும். வேறுபாட பேதமில்லை. காஞ்சீ ஸ்வாமி இந்தப்பாடத்தைத் தம் மூலபாடமாகக் கொண்டு

உரையருளியுள்ளார். 'அலைகள் நிரம்பிய கடல் போல பெருமுழக்கம்செய்யப் பெற்ற தென்னழுந்தையில் மன்னி நின்ற' என்று பொருள் தந்துள்ளார். வேறு பாடபேதம் இடம் பெறவில்லை. முதல் பாடத்தில் முழங்கும் நிகழ்காலத்திலமைந்தது. இரண்டாம் பாடத்தில் முழங்கழுந்தை – வினைத் தொகையாகி முக்காலமும் காட்டும்.காஞ்சீ ஸ்வாமி பாடபேதம் சுட்டவில்லை. **இரண்டு பாடபேதப்பகுதிகள் சேர்ந்து ஒருபாடம்** (மூன்றாவது பாடம்) **அமைவதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.**

102. பாசுரம் எண்:– 7 – 7 – 1:–

ஒருவற்காற்றியுய்யும்வகையின்றால், ஒருவற்காற்றியுய்யும்வகையென்றால்

என இருபாடங்கள். வியாக்யானமூலபாடத்தில் இரண்டாம் பாடம் இடம் பெற்றுள்ளது. உரையில், "(ஒருவற்கித்யாதி) ஏக விஷயத்தில் சேஷத்வம் குலைந்தது கிடாய்! ஒருவற்கு ஆடல் கொடுத்து உஜ்ஜீவிக்கும் படி**யாயிருக்கிறதில்லை,**" என்றருளப் பெற்றுள்ளது. உரை வியாக்யான மூலபாடமானஎன்றாலுடன்பொருந்தவில்லை. இன்றால் – இல்லையால் ஆகவே உரை முதல்பாடத்தையொட்டி உள்ளது. காஞ்சீ ஸ்வாமி மேற் கூறிய என்றால்என்னும் பாடம் பொருந்தாது என்றருளி வியாக்யானத்தை மேற்கோளாகக் காட்டியுள்ளார். இருக்கிறதில்லை என்னும் வியாக்யானப் பகுதிக்குப் பொருந்த, அன்றால் அன்று – ஆல் என்பதொரு பாடம் காட்டியுள்ளார். ஆகவே, அன்றால் அல்லது இன்றால் என்னும் பாடமேபொருத்தமுடையதாய் அமையும்.வியாக்யானமூலபாடம் பிழையாக உள்ளது என்று கொள்ள வேண்டும்.சொற்பொருள் (கோனார் தமிழ் அகராதி) அன்று – அந்நாள், முன்பு, **அல்ல,** ஓர் அசைசொல். இன்று – இந்நாள், இல்லை, ஓர் அசைச்சொல்.

இதனால் அன்று + ஆல் = அன்றால்; இன்று + ஆல் = இன்றால் என்னும் சொற்கள் 'அல்ல', 'இல்லை' என்னும் பொருள்களுடன் வந்து பொருந்தும். இதனால் முதல் பாடமும்காஞ்சீ ஸ்வாமி காட்டும் இன்றால், அன்றால் என்னும் பாடமும். பொருந்துவன. 'என்று' என்னும் சொல் = ஏற்றுக் கொள்ளல் என்னும் பொருள் தரும். உரையுடன் சேராது.

103. பாசுரம் எண்:– 7 – 8 – 4:–

செங்கண் குன்றம், செங்கற் குன்றம்

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடமாக உள்ளது. உரை "(சிலம்பு முதல் கலனணிந்து) சிலம்பு தொடக்கமான ஆபரணங்கள் பலவற்றையுமணிந்து ஒரு மேருவானது நின்று, விளங்குமாபோலே வராகவேஷத்தையுடையவனாய்" என்றுள்ளது. **அரும்பதத்தில்** 'செங்கட்குன்றம்' பாடபேதமாகக்காட்டப்பெற்றுள்ளது. (செங்கண் குன்றம் = செங்கட் குன்றம்) அதாவது முதல் பாடம் காட்டப்பெற்றுள்ளது. "குன்றுக்கே விசேஷணமாய் (பெயரடையாய்) அபூதோபமையாக வ்யாக்யாநாந்தரமுண்டு" வ்யாக்யாநந்தரம் – வேறு உரை. குன்று நீலாசல மென்று கருத்து. இந்தச் செய்தி மூலம் பெரியவாச்சான் பிள்ளை உரைமட்டுமின்றி மற்றோர் உரையும் அரும்பத உரைகாரர் காலத்தில் இருந்தது என்று தெரிகிறது. அபூதோபமையாவது அபூத உவமை அல்லது இல்பொருள் உவமையணியாகும். காஞ்சீ ஸ்வாமி மேற் கூறிய செய்தியை (இல்பொருள் உவமை அணி என்பதை) உரையில் கூறியுள்ளார்.

"சிலம்பு முதற்கலனணிந்ததோர் செங்கட்குன்றம், என்றது மஹாவராகத்துக்கு அபூதோபமையாம், (இல்பொருள் உவமை) சிவந்த கண்களை உடைய தொருமலை தண்டை முதலிய ஆபரணங்களைப் பூண்டு விளங்குவது போல மஹாவராகரூபியாய்" என்று அவர் பொருள் வரைந்துள்ளார். பெரியவாச்சான் பிள்ளைஉரைக்குப் பொருந்தும் பாடம் செங்கற்குன்றம் என்றும் சுட்டியுள்ளார். மலைக்குக்கண், ஆபரணங்கள் அணிந்து நிற்றல் முதலியன எப்பொழுதும் இல்லை. ஆகவே, இல்லாத பொருளை வராகப்பெருமானுக்கு உவமையாகக் கூறுவதால் இல்பொருள் உவமையணியாகும். இல்பொருள் உவமையணிக்கு மற்றோர் எடுத்துக் காட்டு வருமாறு:– கம்பராமாயணம் கும்பகர்ணன் வதைப்படலத்தில், இராவணன் கும்பகர்ணனைத்தழுவிய செய்தியாக "நின்றகுன்று ஒன்று, நீள் நெடுங்காலோடும் சென்றக் குன்றைத்தழீ இயன்னசெய்கையான்" என்றுள்ளது.

கம்பராமாயணம் – கும்பகருணன்வதைப்படலம் (பாடல் 67, அடிகள் 3, 4, மர்ரேஅண்டு கம்பெனி (முதல் பதிப்பு) சென்னை 1959). குன்றங்கள் நடவா. ஒன்றை ஒன்று சென்று தழுவா ஆகவே இல்பொருள்உவமையணி ஆயிற்று.

செங்கற்குன்றம் என்னும் பாடமும் பொருந்தும். சிவந்த ரத்னங்களை உடைய மேருமலை என்று பொருள்.

104. பாசுரம் எண்:– 7 – 8 – 5:–

கோவை யேய்வாய மரகதம் போல்,

கோவை ஏய்வாய் மரகதம் போல்

என இருபாடங்கள் இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடமாக உள்ளது. "கோவை போன்ற அதரத்தையுடைத்தாய்" என்று பொருள் தரப்பெற்றுள்ளது. முதல் பாடம் காஞ்சீ ஸ்வாமி உரையில்மூலபாடமாக உள்ளது. "கொவ்வைக் கனியையொத்தவாயையுடையதும்" என்று உரை உள்ளது.

கோவை +ஏய்வாய் = கோவை யேய்வாய். ஆகவே, முதல் பாடமும் இரண்டாம் பாடமும் ஒரே பொருள் தருதலால்ஏற்கப்பெறுவனவே.

ஏய்தல்:– பொருந்துதல், போல இருத்தல். ஒத்தல் என்னும் பொருளில் வரும். தொல்காப்பியம் உவம இயலில்நூற்பாவில்(1232)

உவம உருபுகள் கூறப் பெற்றுள்ளன. (மொத்தம் 36 உருபுகள்)

அவைதாம், அன்ன, **ஏய்ப்ப,** உறழ. ஒப்ப. ...என்று உள்ள பகுதியும் நோக்கத்தக்கது. நன்னூலில் 367 ஆம் நூற்பாவில்

போலப்புரையஒப்ப, உறழமானகடுப்ப இயைய **ஏய்ப்ப** என்றுள்ளது.

105. பாசுரம் எண்:– 7 – 8 – 7:–

திசைமுகனையனையவர்கள்,

திசைமுகனேயனையவர்கள்

என இருபாடங்கள் இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடம். "(திசைமுகனேயனையவர்கள்) தனித்தனியே சதுர்முகனைப்போலே" என்று உரையில் உள்ளது. 'அனைய' என்னும் சொல் அப்படிப்பட்ட என்று பொருள் தரும். (கோனார்தமிழ்க்கையகராதிபக் 38) உவமையாக அமையும். முதற் பாடம் காஞ்சீபுரம் ஸ்வாமி மேற் கொள்ளும் பாடம் (தனித்தனி) பிரமனையொத்தவர்கள் என்று பொருள் தந்துள்ளார். உரையில் சதுர்முகனை என்று இரண்டாம் வேற்றுமை விரி உள்ளமையால்முதற் பாடம் வந்தது

எனலாம். உரையைப் பின்பற்றி வந்தது முதற் பாடம். இரண்டாம் வேற்றுமை ஒப்புப்பொருளில் வந்தது எனலாம்.

பெரிய திருமொழி –எட்டாம் பத்து

106. பாசுரம் எண்:– 8 – 1 – 5:–

என்நெஞ்சத்துள்ளகலாதென்கின்றாளால், என் நெஞ்சத்துள்அகலாவென்கின்றாளால்

என்று இரண்டு பாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடம். 'திருவபிஷேகமும் அதிலேசாத்தக்கடவதிருவாபரணமும் என் நெஞ்சை விட்டுப் போகிறதில்லையென்னாநின்றாள்' என்று உரைஉள்ளது. 'போகிறதில்லை' என்று உள்ளது. (போகிறது + இல்லை) ஒருமையில் உள்ளது. காஞ்சீஸ்வாமியும் முதல் பாடத்தையே ஏற்று என்மனத்தை விட்டுப் பிரியாது என்று உரை வரைந்தார் (பிரியாது – ஒருமை) "முடித்தலமும் பொற்பூணும் என் நெஞ்சத்துள் அகலாவென்கின்றாளால்" என்பது இலக்கணப்படி சரியாக உள்ளது. பன்மை – முடித்தலமும்பொற்பூணும் **அகலாவென்**கின்றாளால் – **பன்மை.** ஆனால் ஆசாரியர்கள் அகலாது என்ற பாடத்தை ஆதரித்த காரணம் தலைவி கண்ணபுரத்தம்மானை ஸேவித்து அதனால் மையலேறி இவ்வாறு உரைக்கிறாள். அங்கு அவள் தன்னை மறந்த நிலையில் எம்பெருமான் மேல் ஈடுபட்டு இலக்கணப்பிழையுடன் பேசுவதாகக்கூறுவதே சிறப்பு என்று உரையாசிரியர்கள் முதல் பாடத்தையே ஏற்று உரையருளினார்கள் எனலாம். அதுவே ரஸமானபாடமுமாகும். குழந்தையின் மழலை இனிமையானது தலைவியின் மையல் பேச்சு இதுவாதலால் இலக்கணம் பார்க்கத் தேவையில்லை.

107. பாசுரம் எண்:– 8 – 1 – 6:–

காரார்வயலமரும், காரார்வயல்மருவும்

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடமாகும். "(காரார்வயலித்யாதி) எங்கு மொக்கப் பயிர் மாறாமையாலே கறுத்த நிறத்தையுடைத்தானவயலாலே சூழப்பட்ட" என்று உரையுள்ளது. காஞ்சீபுரம் ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்றுள்ளார். "காரார் வயல் அமரும் என்னும் பகுதிக்கு, கருமை மிக்க கழனிகள்அமர்ந்திருக்கப் பெற்ற கண்ணபுரத்து"

என்று உரையருளியுள்ளார். வயலாலே சூழப்பட்ட கண்ணபுரம், வயல் அமர்ந்திருக்கப் பெற்ற கண்ணபுரம்என்னும் இருசெய்திகளுள்ளும் ஒற்றுமை உள்ளதால் இரண்டு பாடங்களும் ஏற்கத்தக்கன. உரைகளில் பாடபேதங்கள் குறித்த செய்தி இல்லை.

108. பாசுரம் எண்:– 8 – 2 – 5:–

பெண்மையுந்தன்னுடை, பெண்மை யென்தன்னுடை

என இருபாடங்கள் முதல் பாடம் வியாக்யானமூலபாடமாகும் "(பெண்மையித்யாதி) வாசிகவ்யாபாரம் சொல்லுகிறாள்" "(பெண்மையும் தன்னுடையுண்மையுரைக்கின்றாள் பெண்மை – ஸ்த்ரீத்வம்..... தன்னுடைய உள்ளிலுண்டானவ்யாபாரம்; **அதவா** தன்னுடைய 'உண்மை' உண்டு – ஸத்பாவம் அத்தைச் சொல்லா நின்றாள்" என்று உரை உள்ளது.

அத்தைச் சொல்லா நின்றாள் என்று உரை உள்ளது. (அதவா = அல்லது) "தன்னுடைய உண்மை உரைக்கின்றாள் பெண்மை என் ?

(காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தை ஏற்று உரையருளியுள்ளார்.)

உரை:– தன்னுடைய (வியாமோஹத்தின் (அன்பின்) உண்மையை வாய் விட்டுச் சொல்லுகின்றாள். இஃது என்ன பெண்மைக்குணம்?" என்பது உரை. தோழியிடமும் சொல்லக் கூடாத உண்மைகளை வாய்விட்டுச் சொல்கிறாளே! இது பெண்ணுக்குத்தகுதியா? என்று உரை. முதற் பாடத்தில் தலைவி செய்கை இடம் பெற்றுள்ளது. இரண்டாம் பாடத்தில் என் என்னும் சொல் இது என்ன பெண்மைக்குணம் என்ற செய்தி உள்ளது. காஞ்சீ ஸ்வாமி உரையில் பாடபேதங்கள் சுட்டப் பெற்றுள்ளன. அவர் 'இரண்டாமடியில், பெண்மையும் தன்னுடைய என்று பாடம் வழங்கிவருகிறது. இப்பாடத்திற்குப் பொருளுமில்லை பெரியவாச்சான் பிள்ளை உரையோடு சேர்த்தியில்லை' என்றருளியுள்ளார்.

109. பாசுரம் எண்:– 8 – 3 – 7:–

எண்திசையும் எழு சுடரும், எண்திசையும் எழு கடலும்

என இருபாடங்கள். முதல் பாடம் வ்யாக்யானமூலபாடமாக உள்ளது. உரைவரையும்போது இரண்டாம் பாடத்துக்கு ஏற்ப உரை உள்ளது. முதற் பாடம்

பாடபேதமாகக் கூறப்பெற்று உரை வரையப்பெற்றுள்ளது. "(எண்டிசையு மித்யாதி) எட்டுத்திக்குக்களையும் எழுவகைப்பட்ட கடல்களையும். 'எழுசுடரும்' என்று பாடமானபோது எழாநிற்கிற ஆதித்யாதிகளையும் நினைத்ததாகிறது" இரண்டு பாடங்களும் விளக்கங்களுடன் உரையில் இடம் பெற்றுள்ளன. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மூலத்தில்தந்துள்ளார். பதவுரைப் பகுதியில் இரண்டாம் பாடத்தைத்தந்துள்ளார் எட்டுத் திசைகளையும், ஏழுகடல்களையும் என்று உரையருளியுள்ளார். இறுதியில், "மூன்றாமடியில் எழுசுடரும் என்ற பாடமேஎங்கும் வழங்கி வருகின்றது. இப்பாடம்பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் பாடாந்தரமாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஏழ்கடலும் என்ற பாடமேமுந்துறக் கொள்ளப்பட்டுள்ளது" என்று உரைத்துள்ளார். இருபாடங்களும் பெரியோரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றவையே !

110. பாசுரம் எண்:– 8 – 6 – 1:–

மடந்தை மான்நோக்கம்,மடந்தை மாநோக்கம்

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடமாகும். "(மாநோக்கம் கண்டான்) ஒண்டொடியாள் திருமகளும் நீயுமேநிலாநிற்பகண்ட சதிர் என்னுமாபோலே ப்ரஜைகளுடைய ரக்ஷணத்துக்கு இவர்களும் (பெரிய பிராட்டி, பூமிப்பிராட்டி) தாமுமானசேர்த்தியுண்டாக வேணுமென்று பார்த்து வைத்தானாயிற்று" என்று உரை உள்ளது. **அரும்பதத்தில்** 'மாநோக்கம்' என்னும் பகுதிக்கு மகத்தானநோக்கத்தை = ஸங்கல்பத்தை) என்று அரும்பதகாரர்அருளியுள்ளார். (மா – மிகச்சிறந்த, நோக்கம் – ஸங்கல்பம்) காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தை ஏற்று உரைவரைந்துள்ளார். ஆனால் உரைப்பகுதியில், "மாநோக்கம் கண்டான் – சிறந்த கடைக்கண் பார்வையை அனுபவிப்பவனான எம்பெருமான்" என்றருளிச் செய்துள்ளார். காஞ்சீ ஸ்வாமி, நோக்கம் – பார்வை (நோக்குதல்) என்ற பொருளில் உரை வரைந்தார். அரும்பத உரைகாரர் நோக்கம் = ஸங்கல்பம் (நினைவு) விருப்பம், எனக்கொண்டார். வியாக்யானத்தில் பார்த்து **வைத்தானாயிற்று,** என்றுள்ளமையால் காஞ்சி ஸ்வாமி பார்வை என்று பொருள் தந்தார். பார்த்துவைத்தான் – பார்த்து மனத்தில் வைத்தான் – ஸங்கல்பித்தான் என்று அரும்பதகாரர் அருளினார்.

முதற்பாடத்தில் உள்ள மான் நோக்கம்என்ற தொடரில் நோக்கம் என்று சொல்லுக்குப் பார்வை என்று பொருள் கொண்டு. மான் பார்வையைப் பெண்கள் பார்வைக்கு உவமையாகக் கொண்டு நோக்கினால் முதல்பாடமும் பொருந்தும் (இவ்விடத்தில்பிராட்டிமார் = பெண்கள்).

111. பாசுரம் எண்:— 8 — 6 — 5:—

ஓமமாகிஊழியாகி, ஓமமாகிஊழியாய்

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடமாக உள்ளது. பதவுரையில் "யாகரூபமாய், காலரூபமாய்" என்று பொருள் தரப்பெற்றுள்ளது. வியாக்யானத்தில், "ப்ராஹ்மணருடைய ஹவிஸ்ஸுக் கொள்வான் தானேயிறே; காலமேசேஷித்திருந்துள்ளகாலமாகி. ஒருவருமில்லாதவன்று தான் உளனாயிருக்குமிறே" என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் இதே பாடத்தை மேற்கொண்டுள்ளார் "அந்தணர்கள் நிகழ்த்தும் யாகங்களுக்கு ஆராத்யதேவதையாயிருப்பவனும் பிரளய காலத்திலும் உலகுண்டு நிலை நிற்பவனும்" என்று அருளியுள்ளார். விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில்

யஜ்ஞோ, யஜ்ஞபதிர்யஜ்வா, யஜ்ஞாங்கோயஜ்ஞவாஹந: || 104

யஜ்ஞப்ருத்யஜ்ஞக்ருத்யஜ்ஞீ, யஜ்ஞபுக்யஜ்ஞஸாதந:
யஜ்ஞாந்தக்ருத்யஜ்ஞகுஹ்யம் அந்நமந்நாதஏவச 105.

(ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்)

என உள்ள ச்லோகங்கள்காணத்தக்கன. "ஹோம என்னும் வட சொல் ஓம மெனத்திரிந்தது. லக்ஷணையால் யாகங்களில் விடும் ஹவிஸ்ஸுக்களைக் கொள்பவன் என்றவாறு" என்றும் காஞ்சீ ஸ்வாமி அருளியுள்ளார். ஒரு பொருளின் இலக்கணத்தை மற்றொன்றிற்கு ஏற்றிக் கூறுதல் இலக்கணையாகும் (அபிதான சிந்தாமணி பக் 208) ஹோமம் என்பது வேள்வியைக் குறிக்கும் (ஓமம்)அச்சொல்லை வேள்வி யென்று பொருள் கொள்ளாது வேள்வியில் இடப்படும் அவியுணவைக் கொள்ளும் இறைவனுக்கு ஏற்றிக் கூறுதல் இலக்கணையாகும். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ச்லோகங்களில் இச்செய்தி இடம் பெற்றுள்ளது. (யஜ்ஞபுக் என்னும் திருநாமம்).

112. பாசுரம் எண்:– 8 – 6 – 5:–

உலகு சூழ்ந்த நெடும் புணரி,
உவரிசூழ்ந்த நெடும் புணரி

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடமாகும். உலகு சூழ்ந்த என்னும் பாடமும் (முதல் பாடம்) காட்டப்பெற்றுள்ளது. "(உவரியித்யாதி) ஓங்கினதிரைகளையுடைத்தானஉவரியானகடலாலே சூழப்பட்டிருப்பதுமாய்" என்று உரை உள்ளது. காஞ்சீபுரம் ஸ்வாமியும் இரண்டாம் பாடத்தை ஏற்று உரைவரைந்துள்ளார். உவரி = கடல் என்று பொருள் தந்துள்ளார். காஞ்சீ ஸ்வாமி, "உலகு சூழ்ந்த நெடும் புணரி என்று பெரும் பாலும் வழங்கி வரும் பாடம் வியாக்யானத்தில்பாடாந்தரமாகக்கொள்ளப்பட்டுள்ளது. உவரிசூழ்ந்த நெடும் புணரி என்றோதுக. புணரி அலைக்கும் கடலுக்கும் பெயர். இங்கு அலையைச் சொல்லக்கடவது" என்றும் அருளியுள்ளார்.

113. பாசுரம் எண்:– 8 – 7 – 1:–

குயமிடைதடவரை, குயமுடைதடவரை

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடம் "(மடமகளித்யாதி – ஆத்ம குணோபேதையான நப்பின்னைப் பிராட்டியுடைய குயங்களுண்டு குசங்கள்; திருமுலைத்தடங்கள். அவை நெருக்குகிற மலை போன்ற திருமார்பை உடையவன்" என்று உரைவரைந்துள்ளார். மேலும், "**அன்றிக்கே** 'குயமுடை' என்று பாடமானபோது குயமுடைத் தடவரைஎன்கிறதை மெலித்து குயமுடைதடவரை என்று கிடக்கிறது" என்றும் அருளியுள்ளார். (மெலித்தலாவது இத்தொடரில் உள்ள வல்லெழுத்தை 'த்'ஐ நீக்குதல் ஆகும். காஞ்சீ ஸ்வாமியும் முதல் பாடத்தை ஏற்று உரை வரைந்துள்ளார். குயமிடை – திருமுலைகள் நெருங்கியணையப் பெற்ற என்று பொருள் தந்துள்ளார். 'குச:' என்னும் வடசொல் குயம் ஆயிற்று குயமுடைதடவரைஎன்றும் வியாக்யானத்தில் காட்டப்பட்ட பாடத்தைச் சுட்டியுள்ளார். 'த்' இல்லாதிருத்தல் செய்யுள் விகாரம் என்றும் ஓசையின்பம் பற்றியும் அவ்வாறு அமையும் என்றுரைத்துள்ளார்.

114. பாசுரம்எண்:— 8 — 7 — 1:—

நயமுடைநடையனம், நயமடநடையனம்

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடமாகும். "(நயமித்யாதி) கண்டார்க்குஆகர்ஷமானபடி (ஈர்க்கும்படி) தர்சநீயமான (அழகான) நடையையுடைத்தான அன்னங்களானவை" என்று உரை உள்ளது. வியாக்யானநூலின் அடிக்குறிப்பில், "அரும்பதாநுகுணமாக நயமட நடை என்றிருக்க வேணும் என்னும் செய்தியுள்ளது. அரும்பதத்தில், நயம் என்று ரஞ்ஜநீயதையும் மடம் என்று மடப்பத்தையுமுடைய நடை என்று லக்ஷணதயா இவ்வர்த்தம் விவக்ஷித்தருளுகிறார்" என்று உள்ளது. அரும்பதத்துக்கேற்ப பாடபேதம் அமைந்துள்ளமை காணத்தக்கது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை யேற்று உரை அருளியுள்ளார். இந்தப் பாடபேதம் பற்றி அவர் எதையும் குறிப்பிடவில்லை.

115. பாசுரம் எண்:— 8 — 7 — 8:—

படை செலஅடிமலர், படை செலவடிமலர்

என இருபாடங்கள். **படை செலவடி மலர்** என்னும் இரண்டாம் பாடமே மூலபாடமாக உள்ளது. வியாக்யானத்தில் '(அடிசெல)அடைவிலே காலாலே ஒருகால் குழப்புவார்கள்' என்றுள்ளது. பதப் பொருள் கூறுமிடத்தில்.

1. படை – கலப்பையை, 2. செல – நடத்தியதாலும், 3. அடி – காலாலே, 4. செல – குழப்புவதாலும், மலர் – தாமரைப்பூக்கள், கடி – பரிமளம், என உள்ளமையால் (அடி என்றுள்ளமையால் முதல்பாடம் வந்தமைந்தது எனலாம்.) காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தை ஏற்று உரை வரைந்துள்ளார்.

எல்லா மொழிக்கும் உயிர் வருவழியே
உடம் படு மெய்யின் உருபு கொளல்வரையார், (தொல்காப்பியம் 140)

(எல்லாச்சொற்களிலும் உயிர் ஈற்றுமுன் உயிர் வரும் போது உடம்படுமெய் தோன்றும். அதன் வடிவைநீக்கார், ஏற்றுக்கொள்வர்)

(எடுத்து காட்டு) மா + இலை = மாவிலை. மணி + அழகு = மணியழகு

இப்பகுதியில் செல + அடி = செலவடியாகும்.) நன்னூல்நூற்பா (162) இச்செய்தியைக் கூறுகிறது.

உயிர்முன்உயிர்புணர்தல்

இஈஐவழியவ்வும்ஏனை
உயிர் வழி வவ்வும்ஏமுன்இவ்விருமையும்
உயிர் வரினுடம் படு மெய் யென்றாகும்.

பெரிய திருமொழி – ஒன்பதாம் பத்து

116. பாசுரம் எண்:– 9 – 3 – 10 :–

கலியனொலிமாலை, கலியனொலிமாலைகள்

என இருபாடங்கள். **கலியனொலி மாலை** என்பது வியாக்யான பாடம்; "(கலியனொலிமாலை) முநிப்ரணீதம் என்னுமாபோலே ஆப்தவசநமாயிருக்கை." உரையில் 'ஆப்தவசநம்' என்று ஒருமையில் உள்ளது. காஞ்சீ ஸ்வாமி உரையிலும் இப்பாடமே உள்ளது. திருமங்கையாழ்வார் அருளிச் செய்த சொல்மாலையாகிய இந்த மொழியே என்றேயருளியுள்ளார். (ஒருமையில் உள்ளது) இந்தப்பாடபேதம் வந்தமைக்குரிய காரணம் தெரியவில்லை. கலியன் வாயொலிகள்(2 – 7 – 10) கலியன் வாயொலிகள் (5 – 7 – 10) முதலான இடங்களில் வாயொலிகள் என்றுள்ளமையால் பன்மையில் மாலைகள் என வந்திருக்கலாம்.

117. பாசுரம் எண்:– 9 – 4 – 10:–

வானாடுமுன்னுவரே,
வானாளும்முன்னுவரே, வானாளமுன்னுவரே

என மூன்று பாடங்கள். **வானாளுமுன்னுவரே** என்பது வியாக்யான மூலபாடம் 'அங்கும் குறைவற அநுபவிக்கப் பெறுவர்கள்' என்று உரை உள்ளது. அங்கும் என்பது வானாட்டிலும் என்னும் பொருள் தரும். (இரண்டாம் பாடம்) காஞ்சீ ஸ்வாமி **வானாடுமுன்னுவரே** என்னும் முதல் பாடத்தை ஏற்றுள்ளார்.

"வான் நாடும் – பரமபத நாட்டிற்கும்; உன்னுவர் – விரைந்தெழுவர்" எனப் பதவுரை தந்துள்ளார். மூன்றாம் பாடம் வானாளமுன்னுவரே: வான் நாட்டை ஆள முன்னுவரே. வான் நாட்டை ஆள விரைந்தெழுவர் எனப்

பொருள் கொள்ளப் பொருந்தும் பாடமாகும்.

118. பாசுரம் எண்:- 9 – 5 – 4:-

பேரருளாளன் பெருமை பேசி,
பேரருளாளன் பெருமை பேச

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடம்; 'பேரருளாளன் பெருமை பேசி அவனுடைய பெருமை பேசி' என்று உரை உள்ளது. பாடபேதம் சுட்டப்படவில்லை. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மூலபாடமாகக் கொண்டுள்ளார். 'பேரருளாளனுடைய பெருமைகளைப் பேசிக் கொண்டு' என்று உரை அருளியுள்ளார். அவர், "மூன்றாமடியின்முடிவில் பேசி என்றும் பேச என்றும் பாடபேதமுண்டு, பேரருளாளன் பெருமை பேசி ஓரிரவமுறங்கா திருப்பேன் என்று கீழோட அந்வயிக்கவுமாம். பேரருளாளன் பெருமை பேசிக் குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின் என்று மேலோடே அந்வயிக்கவுமாம். பேச என்னும் பாடத்திலும்இங்ஙனே இரண்டு வகையான அந்வயங்களும் கூடும்," என்றருளியுள்ளார். இரண்டு பாடங்களும் பொருந்தும் என்பது காஞ்சீ ஸ்வாமி திருவுள்ளம்.

119. பாசுரம் எண்:- 9 – 5 – 9:-

இன்று காறும், இன்று தாறும்

என இரண்டு பாடங்கள். **இன்றுதாறும்** வியாக்யானமூலபாடம், (தொன்னலமித்யாதி) .... இன்றளவும் என்று உரை. வேறுபாட பேதம் சுட்டப் பெறவில்லை. காஞ்சீ ஸ்வாமி **இன்று தாறும்** என்று மூலபாடத்தில் காட்டியுள்ளார். இன்று தாறும் – இன்று வரைக்கும் எனப் பொருள் தந்துள்ளார். காஞ்சீ ஸ்வாமி தம் உரையில் இன்று தாறும் = இன்று வரைக்கும் காறு என்பது போலத் தாறு என்பதும் எல்லைப்பொருளது. 'தனையும்காறும், தாறும் துணையும் வரையும், பிரமாணமும். மாத்திரையும் மட்டும், அளவின் பெயரென்றறைந்தனர் புலவர்' என்பது பிங்கல நிகண்டு என்றருளியுள்ளார் .திவாகர நிகண்டு 1414 ஆம் நூற்பாவில், '**தாறு**, கால், மாத்திரை, வரை, துணை, நேரம் **காறு**, பரிமாணம், அவதி, அளவு ஆகும் என அளவின்பெயரைக் கூறியுள்ளார். (ஒன்பது பெயர்கள்) இதனால் **தாறு** = **காறு**,

இரண்டு பாடங்களும் ஒரே பொருளில்வருவன, பொருத்தமுடையவை.

120. பாசுரம் எண்:— 9 — 6 — 4:—

உரவோனூர் போலும், ஒருவனூர் போலும்

என இருபாடங்கள் முதல் பாடம் வியாக்யான மூலபாடமாகும் "(சிரமித்யாதி) .... ஆண் பிள்ளை வர்த்திக்கிற ஊர் போலும்" என்று உரை உள்ளது. வேறு பாடபேதம் இல்லை. காஞ்சீஸ்வாமியும் முதல் பாடத்தையே யேற்று உரை வரைந்துள்ளார்.

'உரவோன் – பெருமிடுக்குடையபெருமானுடைய; ஊர் போலும் – திவ்யதேசமாகும்உரஸ் என்னும் வட சொல் உரம் எனத்திரிந்தது' என்று குறித்துள்ளார். இவரும் தம் உரையில் பாடபேதம் சுட்டவில்லை. 'தானே தனக்குவமன்' என்றும் 'ஒப்பார்மிக்கார் இல்லாத ஒருவன்' என்றும் இறைவன் போற்றப்பெறுபவன் என்ற பொருளில் இரண்டாம் பாடம் வந்திருக்க வேண்டும்.

121. பாசுரம் எண்:— 9 — 6 — 4:—

ஈன்தேன்முரல, ஈன்தேன்முரலும்

என இரண்டு பாடங்கள். முதல் பாடம் வியாக்கியானமூலபாடம். "(சிரமித்யாதி) .... மதுபாநத்தைப்ண்ணி ஆளத்திவைக்க (முரல)" என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் முதல் பாடத்தையே ஏற்று உரையருளியுள்ளார் "முரல = ரீங்காரம் செய்யப் பெற்றதும்" என்று உரையருளியுள்ளார். பாடபேதம் ஈருரைகளிலும் இடம் பெறவில்லை.பாடலின்பிற்பகுதியில் 'குரவின்பூவேதான் மணநாறும் குறுங்குடியே' என்றுள்ளது. 'நாறும்' என்றுள்ளது அதை யொட்டிமுரலும் என்னும் பாடம் வந்தமைந்தது எனலாம். இரவும் பகலும் **ஈன்தேன்முரலும்** மன்றெல்லாம் குரவின்பூவேதான் மணநாறும் குறுங்குடியே **என்**பது இரண்டாம் பாடம்.

122. பாசுரம் எண்:— 9 — 6 — 5:—

கலிமான்தேர், கலிமாந்தேர்

என இருபாடங்கள் இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடம். "கவ்வையித்யாதி......பெருமிடுக்கையுடைத்தாய்ப்பரந்திருந்துள்ள தேரை".

என்று பொருள் வரையப்பெற்றுள்ளது. பாடபேதம் இடம் பெறவில்லை. காஞ்சீ ஸ்வாமியும் இரண்டாம் பாடத்தையேற்றுள்ளார் "திண்ணிய பெரிய தேர்" என்று பொருள் தந்துள்ளார். பாடபேதம் சுட்டவில்லை. முதற்பாடம் – கலிமான்தேர். கலித்தல் என்ற சொல்லுக்கு எழுச்சி என்று பொருள் உண்டு. (திவாகர நிகண்டு 2055) மான் என்னும் சொல் விலங்கின் பொதுப் பெயர்.மாவும்மானும் விலங்கின் பொதுப் பெயர் (திவாகரநிகண்டு 510) இப்பாடலில்குதிரையைக் கொள்ளலாம். ஆக, எழுச்சியுடைய குதிரை பூட்டப் பெற்ற தேர் என்று பொருள் கொண்டால் முதலாம் பாடமும் பொருந்தும். பஞ்ச பாண்டவர்களுக்காகப் போரில் உதவிய கண்ணன் குதிரை பூட்டிய தேரை ஒட்டினான். பகவத் கீதை முதல் அத்யாயத்தில் 14 ஆம் சுலோகத்தில்

ததச்வேதைர் ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தநே ஸ்திதௌ
மாதவ: ....

பின்பு வெள்ளைக் குதிரைகளோடு பூட்டிய சிறந்த தேரில்வீற்றிருந்த கண்ணன் என்பது சுலோகப் பொருள். ஸ்ரீகீதையில் குதிரைகள் என்று பன்மையில் உள்ளது. பாசுரத்தில் ஒருமையில் உள்ளது. (கலிமான் என்றுள்ளது)

குதிரைகள்பூட்டியதேர் – கலிமான்தேர் என்னும் பாடம்.

மஹதிஸ்யந்தநே – சிறந்த தேரில்,மஹதி = மா = கலிமான்தேர்

இரண்டு பாடங்களும் பகவத்கீதைப்படி பொருந்தும் பாடங்கள்.

123. பாசுரம் எண்:– 9 – 6 – 5:–

அமரில்உய்த்தான், அமரில்உற்றான்

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்கியானமூலபாடம், 'கவ்வை இத்யாதி ..... யுத்தத்தில் நடத்தினவன்' என்று உரை உள்ளது பாடபேதம் சுட்டப் பெறவில்லை. காஞ்சீ ஸ்வாமியும் முதல் பாடத்தை யேற்றுள்ளார். "உய்த்தான் – நடத்தின பெருமானுடைய" என்று பொருள் தந்துள்ளார். பெரியாழ்வார் திருமொழி (1 – 6 – 6) ஆம் பாசுரத்தில்

பாரித்த மன்னர் படப்பஞ்சவர்க்கு அன்று
தேருய்த்த கைகளால் சப்பாணி ! தேவகிசிங்கமே சப்பாணி

'உய்த்த' என்ற சொல் உள்ளமைநோக்கத்தக்கது. 'உற்றான்' என்னும்

சொல் 'அடைந்தான்' என்னும் பொருள் உடையது. உய்த்தான் என்பது பொருத்தமானபாடம்.

124. பாசுரம் எண்:— 9 — 7 — 5:—

மைந்தனார்வல்லவாழ், மஞ்சனார்வல்லவாழ்

என இரு பாடங்கள். முதல் பாடம்வியாக்யானமூலபாடம் ஆகும். "(மைந்தனார்) விரோதி நிரஸநமே (அழித்தல்) யாத்ரையாக இருக்கிறவர் (யாத்ரை – போக்கு) இங்குப் பொழுது போக்கு. மைந்து – வலிமை". மைந்தனார் = வலியர். காஞ்சீ ஸ்வாமியும் முதல் பாடத்தை ஏற்றுள்ளார். இருவர் உரைகளிலும் பாடபேதம் இடம் பெறவில்லை. இரண்டாம் பாடத்தில் உள்ள மஞ்சனார் என்னும் சொல் எதுகை கருதி வந்திருக்க வேண்டும். மஞ்சு, துஞ்சு, நஞ்சு, மஞ்சு ஆக நான்கடிகளில் முதல்சீர்கள் அமையும். மஞ்சு + அனார் (அன்ன + ஆர்அன்ன உவம உருபு (தொல் காப்பியம் நூற்பா எண்கள் 1232, 1233, 1234) மஞ்சு போன்றவர் = மேகம் போன்ற நிறமுடையவர்.

மேகச்யாமம் (ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம தியானச் சுலோகம்). மஞ்சு = இளமை (கோனார் தமிழ் அகராதி பக் 417) மைந்தன் = மஞ்சன் எனவும் கொள்ளலாம். ஆகவே, இரண்டாம் பாடமும் பொருத்தமானதே.

125. பாசுரம் எண்:— 9 — 8 — 7:—

கல்லதர் நிறைந்து, கல்லதர் நுழைந்து, கல்லதர்நிரந்து

என மூன்று பாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடம், வானகமித்யாதி .... நீலப்பாறைகளிலுண்டான வழியே போய்ப்புக்கு என்று உரை உள்ளது.

அதர் = வழி. காஞ்சீஸ்வாமியும் முதல் பாடத்தை ஏற்றுள்ளார். அவர் உரையில் "நீலப்பாறைவழிகளில் (புகுந்து) நிறைய இருந்து" என்றுள்ளது. மூன்று பாடபேதச் சொற்கள் வருமாறு.

1. நிறைந்து – நிறைய இருந்து (காஞ்சீ ஸ்வாமி), 2. நுழைந்து – புகுந்து (வியாக்யானத்தில் போய்ப்புக்கு என்பதற்கேற்ப உள்ளது), 3. நிரந்து – நிரப்புதல் = நிறைத்தல் (தொட்டியில் நீர் நிரப்புதல்) (முதல் பாடப் பொருள்) நிரந்து என வந்தது. முதல் பாடமும் மூன்றாம் பாடமும் ஒரே பொருள்

உடையன. இரண்டாம் பாடம் வியாக்யானத்தில் உள்ள புக்கு என்பதற்கேற்ப அமைந்தது. மூன்று பாடங்களும் ஏற்கத்தக்கன. உரைகளில் பாடபேதங்கள் இடம் பெறவில்லை.

126. பாசுரம் எண்:– 9 – 9 –5:–

வானமும்மண்ணகமும், வானகமும்மண்ணகமும்

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடமாக உள்ளது. "தானவனித்யாதி .... பூமி அந்தரிக்ஷாதிகள் மூன்றடியாலே அடங்கும்படி அளந்தவன்" என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்றுள்ளார். உரைகளில்பாடபேதங்கள் இடம் பெறவில்லை. திருச்சந்தவிருத்தம் முப்பதாம் பாட்டில் "வானகமும் மண்ணகமும் வெற்புமேழ் கடல்களும்" என்றுள்ளது. அதையொட்டி இந்தப் பாடம் வந்திருக்கலாம். வான் +அகம், மண் + அகம் முறையே வானகம் மண்ணகம் ஆயின் அவற்றில் இறுதியில் உம் சேர்த்துச்சொல்லச் சந்த அழகு புலப்படுகிறது. (திருச்சந்தவிருத்த அடி இப்பாடத்திற்குக்காரணமாகியது எனலாம்.). முதல் பாடம் இப்பாடலமைப்புக்கேற்ப உள்ளது. நான்கடிகள் தொடக்கச்சீர்கள்:– தானவன் (கூவிளம்), வானமும் (கூவிளம்), தேனமர் (கூவிளம்), வானவர்(கூவிளம்) ஆகவே, முதற்பாடமே ஏற்கத்தக்கது.

127. பாசுரம் எண்:– 9 – 10 – 2:–

மல்லிகை மாலை யோடு மணந்து, மல்லிகை மாலை யோடுமணைந்த

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடம், "(மௌவலித்யாதி) மௌவல்மாலையோடும் மல்லிகை மாலையோடும் மதுபானம் பண்ணின வண்டுகள் ஆடா நின்றன. இவற்றோடே கூடி அணைந்த மாருதமுண்டு – காற்று". என்று உரை உள்ளது.காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தையே ஏற்று உரைவரைந்துள்ளார். 'மணந்து' என்பது சிலருடையபாடமாம் என்றருளியுள்ளார். 'அணைந்து' என்றால் தழுவிக் கொண்டு என்று பொருள் தரும், 'மணந்து' என்றால் வாசனை வீசுதல். இரண்டும் பொருத்தமான பாடங்கள் எனலாம்.

128. பாசுரம் எண்:— 9 — 10 — 4 :—

மலர் புல்கி, மலர்புல்லி

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடம்; வியாக்யானத்தில் **தழுவி** என்று பொருள் தரப்பெற்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்று உரையருளியுள்ளார். **புல்கி – தழுவி.** ஈருரைகளிலும் பாடபேதம் சுட்டப் பெறவில்லை. ஒரே பொருள் தரும் சொற்கள். புல்கி, புல்லி(புல்குதல் புல்லுதல்) எனவே இரண்டு பாடங்களும் ஏற்கத்தக்கனவே.

(புல்லுதல் = தழுவுதல். புல்குதல் = தழுவுதல்கோனார் தமிழகராதி பக்கம் **398**).

பெரிய திருமொழி —பத்தாம் பத்து

129. பாசுரம் எண்:— 10 — 1— 10 :—

பெற்ற மாளியை, பெற்ற மாளிகை

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடம்; வியாக்யானத்தில் "(பெற்றமித்யாதி) பெற்ற என்று பெருமையாய், மாளிகைக்கு விசேஷணமாகவுமாம், **பெற்றமாளியை** என்று பாடமாகில் பசுக்களை நோக்குமவனையென்றது" என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தையேற்று உரை அருளியுள்ளார். வியாக்யானத்தில் உள்ள பாடபேதங்களையும் காட்டியுள்ளார். வியாக்யானத்திற்கேற்ப அமைந்த பாடபேதங்கள். இரண்டு பாடங்களும் ஏற்கப்பெற்றவையே.

130. பாசுரம் எண்:— 10 — 2 — 9:—

வெங்கதிரோன்சிறுவா, வெங்கதிரோன்தன்சிறுவா

என இரண்டு பாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடம் ஆகும். இரண்டாம் பாடம் காஞ்சீ ஸ்வாமியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. "விளங்குகின்ற சூரியனுக்குப் புதல்வன்", என்று பொருள் தந்துள்ளார். **தன்சிறுவா**, என்று பாடம் காட்டிய ஸ்வாமி வாலி பிறப்பினையும் சுக்ரீவன் பிறப்பினையும் பற்றிய வரலாறு ஒன்றினை வால்மீகி ராமாயணம் உத்தர காண்டம் 43ஆம் ஸர்கம்வழி நின்று தந்துள்ளார். அந்தக்

கதையில் **ஒரே தாய்க்கு இந்திரன் மூலமாக வாலியும் சூரியன் மூலமாக சுக்ரீவனும் தோன்றியசெய்தியைக் கூறியுள்ளார்.** ஆகவே. வெங்கதிரோன் தன் சிறுவன்) என்று அழுத்திக் கூறும் பாடத்தைக் காஞ்சீ ஸ்வாமி காட்டியுள்ளார். அவர் கூறியுள்ள செய்திகள் அவருடைய பேரறிவையும் எதையும் நுட்பமாகக்காணும், சிறப்பையும் புலப்படுத்துகின்றன.

131. பாசுரம் எண்:– 10 – 5 – 2 :–

அடிகள் அரவிந்தவாயவனே,

அடிகள் அரவிந்தமாயவனே

என இரண்டு பாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடமாகும். "அடிகளரவிந்தவாயவனே) திருவடிகளும் திருவதரமும் செவ்வித்தாமரை போலேயிருக்கிறவனே!" என்பது உரை. உரையாசிரியர், மேலும், "அன்றிக்கே **அடிகளரவிந்தமாயவனே** என்று பாடமாகில், திருவடிகள் தாமரையாயிருக்கிறவனென்றாகிறது" என்றும் அருளி இரண்டாம் பாடத்தையும் உரையில் காட்டியுள்ளார். காஞ்சீ ஸ்வாமி முதலாம் பாடத்தை ஏற்று உரைவரைந்துள்ளார். இரண்டாம் பாடம் வியாக்யானத்திலுள்ளதையும் குறித்துள்ளார்.

132. பாசுரம் எண்:– 10 – 5 –2:–

மால் வண்ணனே, மாலவனே

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடமாகும் "(மால் வண்ணனே) அதுக்கு (திருவடிக்கு) ப்பரபாகமான (மேன்மையான அழகான) நிறத்தையுடையவனே" என்று உரையருளியுள்ளார்காஞ்சீஸ்வாமியும் முதல் பாடத்தையே ஏற்று உரையருளியுள்ளார். இறுதியில் "மால் வண்ணனே = மால் என்று கருமைக்கும், வியாமோஹத்திற்கும் பெயர்"என்றருளியுள்ளார். வ்யாமோஹம் = அன்பு, மயக்கம். இரண்டாம் பாடம் மாலவனே என்பதற்கு அன்பின்உருவானவனேஅன்புடையவனே ஆசையுடையவனே (அடியவர்களிட) அடியார்களை மயங்கச் செய்பவனே (அழகினால்) எனப்பொருள்கொள்ளப் பாடபேதம் பொருத்தம் உடையதாகும். மால் என்பது பெருமானுடையபெயரும் ஆகும்.

மால் = மயக்கம், விஷ்ணு, ஆசை, பெருமை. கருமை, மேகம், பழமை.

(கோனார் தமிழ்க்கையகராதி பக் 431)

133. பாசுரம் எண்:— 10 — 5 — 3:—

தாமோதரக்கையால், தாமோதிரக்கையால்

என இருபாடங்கள். **தாம்மோதரக்கையால்** என்னும் பாடம் வியாக்யான மூலபாடமாகும். "தாம்பாலே (மோதர) கையாலகட்ட என்னுதல் **அன்றியே** அலங்க்ருதமான கைகளாலே கட்ட. தாம் மோதரக் கையால் என்று பிரித்து மோதரத்தைமோதிரம் என்று வ்யவஹரிக்கிறவித்தனை" என்று உரையருளியுள்ளார். காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்று உரை அருளியுள்ளார். கையால் மோதர – கைகளால் அடிக்கவும் என்று பொருள் வரைந்துள்ளார். அவர் உரையில் வேறு பாடபேதம் சுட்டப் பெறவில்லை வியாக்யானத்தில் இரண்டு பாடங்களும் உள்ளன.

134. பாசுரம் எண்:— 10 — 5 — 6:—

நான் அவலப்பம்தருவன், நான் வலவப்பம்தருவன்

என இரண்டு பாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடமாகும். "(உன்னித்யாதி) உன் வயிற்றுக்குப்போரும்படி நான் அவல் அப்பம் தருவன்" என்று உரை உள்ளது. **அரும்பதத்தில்** இரண்டாம் பாடம் காட்டப்பெற்றுள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தையேஏற்றுள்ளார். இரண்டாமடியில் 'நான் வலவப்பம்' என்றுபாடபேதமுள்ளதாக அரும்பதவுரை கூறுகின்றது. சிலருடைய பாடமும் அப்படியிருந்தாலும் அதுவேண்டா என அருளி இரண்டாம் பாடத்தை மறுத்துள்ளார். வலம் = வெற்றி. வலப்பக்கம். வலிமை, ஆணை, உயர்ச்சி முதலான பொருள்கள் உள, உணவுப் பொருளுக்கேற்ற சரியான பொருத்தமான பெயரடையாக வலம் இல்லை யென்பதால் காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தை மறுத்துள்ளார் எனலாம்.

135. பாசுரம் எண்:— 10 — 7 — 6:

அல்லில் தான் வந்த பிள்ளை,

அல்லுத்தான் வந்த பிள்ளை

என இரண்டு பாடங்கள் முதல் பாடம் வியாக்யானமூலபாடமாகும். "(இலைக்குழலூதி) குழலையும்ஊதிக் கொண்டு ராத்ரியிலே வந்த பிள்ளை என்று உரை உள்ளது. (அல்லில் – இராத்ரியில்). வியாக்யானநூலின்

அடிக்குறிப்பில் **அல்லுற்றான்** என்னும் பாடம் காட்டப்பெற்றுள்ளது.காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தையே ஏற்று உரை அருளியுள்ளார். அல்லில் = இரவில் என்று பொருள் தந்துள்ளார்.அவர், "இரண்டாமடியில் **அல்லுற்றான் என்ற பாடம் பெரும் பாலும்வழங்குமாயினும் அது பொருந்தாது**. 'குழலையும்ஊதிக் கொண்டு ராத்ரியிலே வந்த பிள்ளை' என்பது வியாக்கியானவாக்யம். ஆகவே, அல்லிற்றான் என்ற பாடமே அல்லுற்றான் என விகாரப்பட்டதென்ன வேணும்.அன்றி அல்லுத்தான் (இரண்டாம் பாடம்) என்றிருந்தால் ஒருவாறு பொருந்தும். அல்லு, தான் என்று பிரிக்க, அல்உ கரச்சாரியைபெற்றதென்க. அல்லில் என்பதே பொருள்" என்றருளியுள்ளார் அல்லுற்றான் என்பதை கோஷ்டியில் ஸேவை பண்ணும்போது அல்லுத்தான் என்று ஸேவிக்கிறோம். ஆகவே, (அல்லுற்றான், அல்லுத்தான்) என இருபாடங்கள்வந்தமைந்தன எனலாம்.

136. பாசுரம் எண்:— 10 — 7 — 7:—

இந்திரனாருக்கென்று, இந்திரனாருக்கன்று

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடம், "(ஆயிரங்கண்ணித்யாதி) ...... துர்மாநியாயிருக்கிறவனுக்கு இடையர் உத்ஸவமாகப்போத்தி" என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்றுப் பொருள் தந்துள்ளார். இந்திரனாருக்கென்று = தேவேந்திரனுக்காக என்று பொருள் தந்துள்ளார்.

இந்திரனாருக்கு + அன்று = இந்திரனாருக்கன்று.

அன்று நிகழ்ந்த நிகழ்ச்சியைக் குறிக்கும் செய்தி. காலத்தைக் காட்டும் சொல்லாக 'அன்று' உள்ளது. இந்திரனாருக்கு - என்று = இந்திரனாருக் கென்று. (நான்காம் வேற்றுமை விரி – கு). இரண்டும் பொருந்தும் பாடங்களே.

137. பாசுரம் எண்:— 10 — 7 — 9:—

யமுனைநீராடப் போனேன், எமுனை நீராடப் போனேன்

என இருபாடங்கள். முதல்பாடம் வியாக்யான மூலபாடமாகும். '–முனையிலே நீராட' என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் –`–த்தை ஏற்றுள்ளார். உரைகளில் பாடபேதங்கள் சுட்டப் பெறவில்லை.

எமுனை = யமுனை (காஞ்சீ ஸ்வாமி உரை)

தொல்காப்பியம் நூற்பா 65 வருமாறு:-

"ஆவோடல்லதுயகரம்முதலாது." (எ.காட்டு: யானை, யாளி, யாது, யாவர்,.) யமம் – இயமம், யமன் – எமன், எனவரும். யமுனை = எமுனை ஆயிற்று. காஞ்சீ ஸ்வாமி தொல்காப்பியம் வழி நின்று உரையருளியுள்ளார். 'ய' மொழி முதலாகவாராது என்பதால் யமுனையை எமுனை என்றார்.

138. பாசுரம் எண்:– 10 – 7 – 10:–

பிள்ளைகளுண்கின்று, பிள்ளைகளுண்கின்ற

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடமாகும். "(பஞ்சியமித்யாதி) .... பிள்ளைகள் ஆயிரநாழிநெய்யை உண்கின்றவிடத்தில்" என்று உரை உள்ளது. பாடபேதம் சுட்டப் பெறவில்லை.காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை மூலபாடமாகஏற்றுப் பொருள் தந்துள்ளார். "ஆயிரம் நாழி நெய்யைஉண்கின்று = ஆயிரம் நாழி நிறைந்த நெய்யை உண்ணும் போது" என உரை வரைந்துள்ளார். பாடபேதம் இடம் பெறவில்லை.காஞ்சீ ஸ்வாமி உண்கின்று என்னும் பாடத்தை ஏற்றார். நன்னூல் நூற்பா 143 வருமாறு.

ஆநின்று கின்று கிறு மூவிடத்தின்
ஐம்பாலிகழ் பொழுதறை வினையிடை நிலை

இந்நூற்பாவில் இடம் பெறும் 'கின்று' என்னும் நிகழ்கால இடை நிலையைக் காஞ்சீ ஸ்வாமி பயன் கொண்டார்.

139. பாசுரம் எண்:– 10 – 7 – 11:–

அங்ஙனம் தீமைகள், அங்ஙனும்தீமைகள்

என இருபாடபேதங்கள். இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடம். "அங்ஙனுமித்யாதிசொல்லவொண்ணாதபடியான தீம்புகளை விளைக்கக் கடவதோ" என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் இரண்டாம் பாடத்தை ஏற்றுள்ளார்.

அங்ஙனும் = அப்படியும் என்று பொருள் தந்துள்ளார். முதல்பாடத்தில்

உள்ள அங்ஙனம் = அப்படி. இரண்டாம் பாடத்தில் உள்ள அங்ஙனும் = அப்படியும் (உம் சேருவதால் பொருள் சிறக்கிறது).

140. பாசுரம் எண்:— 10 – 8 – 3:—

உறக்கில்நிமிர்த்தீர், உறுக்கிநிமிர்த்தீர்

என் இருபாடபேதங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடமாகும் "(உருளச்சகடம்) அதிஸாஹஸங்களையன்றோ நீர்செய்வது. அசுராவேசத்தாலே நின்ற சகடம்முலை வரவு தாழ்த்தவாறே சீறிநிமிர்த்த திருவடிகளுக்கு இலக்காய்த் தூளாய்ப் போயிற்று" என்று உரை உள்ளது. உறுக்குதல் என்னும் சொல்லுக்குக்கோபித்தல் என்னும் பொருளுண்டு (TAMIL LEXICON VOL I page 483) கோபம் என்னும் சொல்லுக்குச் சீறல்என்னும் பொருளுண்டு (திவாகரம் 1581) **கறுப்பு, குரோதம், சீறல் கோபம்,** உரை இரண்டாம் பாடத்தை ஒட்டி உள்ளது. உறுக்கி = கோபித்து = சீறி. ஆகவே இரண்டாம் பாடம் ஏற்கத்தக்கதாகிறது. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்றுப் பொருள் தந்துள்ளார். உறக்கில் – தூங்கும் போது என்று பொருள் தந்துள்ளார். பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் பதப்பொருள் இடம் பெறும் பகுதியில் உறக்கில் – கள்ள நித்திரை கொள்கின்றகாலத்திலே என்றுள்ளது. வியாக்யானத்தில் **பதப்பொருள் தரும் பகுதிக்கும் வியாக்யானத்தில் ப்ரதீக விளக்கம் தரும் பகுதிக்கும் வேறுபாடு உள்ளமை காணத்தக்கது.**

141. பாசுரம்எண்:— 11 – 3 – 6:—

இன்பம் உற்றார் ஒளிவிசும்பில்ஓரடி வைத்து, இன்பம் உய்த்தார் ஒளி விசும்பில்ஓரடி வைத்து

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடமாக உள்ளது. ஆனால், உரைப்பகுதியில் "(இன்பமுற்றார்) வைத்தது ஸமஸ்த கல்யாண குணாத்மகனையாகையாலே 'ஏஷஹ்யேவாநந்தயாதி' என்கிறபடியே நிரதிசயாநந்தயுக்தரானார்கள்" என்று உரை உள்ளது. வியாக்யான மூலபாடத்தில் 'உய்த்தார்' என்றும் உரைப்பகுதியில் 'உற்றார்' என்றும் உள்ளமை காணத்தக்கன. அதனால் இரண்டு பாடங்கள் வந்தமைந்தனவோ என்று எண்ணவேண்டியுள்ளது உரையை முடிக்கும் பொழுது 'இன்பமுற்றார்' என்றுள்ளமை காணத்தக்கது காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தை யேற்றுள்ளார். "இன்பம் உய்த்தார் ஆநந்தத்தை அடையப் பெற்றார்கள்"

என்று உரையருளியுள்ளார். பாடபேதங்கள் ஈருரைகளிலும் சுட்டப் பெறவில்லை. உற்றார் = அடைந்தார், உய்த்தார். அடையப்பெற்றார்.

142. பாசுரம் எண்:– 11 – 3 – 6:–

இமையோர்தொழுதிறைஞ்சி, இமையோர்தொழுதேத்தி

என இருபாடங்கள். இாண்டாம் பாடம். வியாக்யான மூலபாடமாகும். "(ஒளிவிசும்பித்யாதி, ப்ரஹ்மாதிகள்எழுதிக் கொடுத்து கைத்தாமரை குவிக்கும் என்று உரை; எழுதிக்கொடுத்தல் – எழுத்து மூலமாகப் பத்திரம் செய்து தருதல் என்னும் பொருள் உலக வழக்கிலுள்ளது. தனக்கு உள்ள உரிமையை எழுத்து மூலம் பிறருக்கு வழங்கல். ஸம்ப்ரதாயத்தில் நான். எனக்குரியனல்லேன். உனக்கே ஆட்பட்டவன் என்ற எண்ணமுடையவனாய் இறைவனுக்கு அடிமையாதல்.இப்பாசுரத்தில் தொழுதல் இரண்டு பாடங்களிலும் உள்ள சொல். இறைஞ்சுதல் = வணங்குதல், தாழ்தல், துதி செய்தல், (இறைஞ்சப்படும்பரன் ஈசன் அரங்கன் (இராமாநுசநூற்றந்தாதி 47))

ஏத்துதல் = துதித்தல், வாழ்த்தல், "(ஏத்துமின் ஏத்துதலும் தொழுதாடுமே" (திருவாய் மொழி 4 – 6 – 10). காஞ்சீ ஸ்வாமி தொழுதிறைஞ்சி என்னும் முதல் பாடத்தை ஏற்றுள்ளார். 'பிரமன் முதலிய தேவர் வணங்கித்துதித்து' என்று பொருள் வரைந்துள்ளார். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனைப் பணியவேண்டும். மனம் = இறைவனை வணங்க வேண்டும் என நினைத்தல்; காயம் = தொழுதல் (உடலால் தொழுதல்); வாக்கு = இறைஞ்சுதல் (துதித்தல்)வாயினால் போற்றுதல் 'சிந்தையாலும், சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே தந்தை தாயென்றடைந்தவண் குருகூர்ச்சடகோபன்'. திருவாய் மொழி (6 – 5 – 11) ஈண்டு நோக்கத்தக்கது. இரண்டு பாடங்களும் பொருந்தும்.

143. பாசுரம் எண்:– 11 – 4 – 8:–

பின்னும் வானவர்க்கும், பின்னையும்வானவர்க்கும்

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யானமூலபாடமாகும். "(முன்னுலகங்களேழும்), ... திரியட்டும் அவர்களளவிலே (தேவர்களளவிலே) பிரஸாதத்தைப் பண்ணி" என்று உரை உள்ளது. பின்னையும் = திரியட்டும். மிளவும் அல்லது மீண்டும் என்னும் பொருளுடையது. பாடபேதம் சுட்டப் பெறவில்லை.காஞ்சீஸ்வாமியும் இரண்டாம் பாடத்தையே ஏற்றுப் பொருள் வரைந்துள்ளார்.

'பின்னையும் = மீண்டும்' என்று பொருள் தந்துள்ளார். பின்னையும் = மீண்டும் என்று பொருள் தரும். பின்னும் = பின்பும் என்று பொருள் தரும். இருபாடங்களில் இரண்டாம் பாடம் சிறப்புடையது எனலாம், 'பின்னையும் காரார்கடல் போலும் காமத்தராயினார்' (சிறிய திருமடல் கண்ணி **64**) நோக்கத்தக்கது.

144. பாசுரம் எண்:– 11 – 8 – 10:–

மன்றில் புகழ் மங்கை மன் கலிகன்றி,

மன்றில்மலி புகழ் மங்கைமன்கலிகன்றி

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடமாகும். "(மன்றிலித்யாதி) என்று தொடங்கி வ்யாக்யான பிரதீகத்தில் இப்பாடம் குறித்த செய்தி இல்லை. பாடபேதமும் இடம் பெறவில்லை. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தை ஏற்று உரை அருளியுள்ளார். அவர், **"இரண்டாமடியில், மன்றில் புகழ் என்ற பழைய பாடம் மறைந்து போய், மன்றில் மலிபுகழ் என்ற புதியபாடமே எங்கும் பரவி நின்றாலும் அது பெரியோர்க்கு உடன் பாடன்று.** இத்திருமொழியில் நேரசை முதலான பாசுரங்கள் தோறும் ஒவ்வோரடியும் ஒற்றொழித்துப் பன்னிரண்டெழுத்தும் நிரையசை முதலான பாசுரங்கள் தோறும் ஒவ்வோராடியும் ஒற்றொழித்துப் பதின்முன்றெழுத்தும் அமைந்துள்ளன வென்பதைக் கண்டறிந்தால் இப்பாட்டில் மலி என்பது அதிகப்படியான பாடம் என்று புலனாகும் என்று அருளியுள்ளார். மாமுனிகள் இராமாநுச நூற்றந்தாதிப் பாசுரங்களுக்கு வியாக்யானம் அருளியபோது, பாசுரங்கள் 'நேர்பதினாறே நிரைபதினேழ்' என்னும் இலக்கணப்படி அமைந்துள்ளனவாவென்று ஆய்ந்து ஐந்து இடங்களில் வந்துள்ள எழுத்தேற்றத்தைச் சுட்டியுள்ளார். பொருத்தமான காரணமும் கூறியுள்ளார். அம்முறையில் ஸ்வாமி இந்தப்பதிகத்தை யாப்பு முறையில் ஆய்ந்துத் தம் கருத்தைப் பதிவு செய்துள்ளார் எனலாம். இப்பாடல் கலிவிருத்தமாகும். கலி விருத்தத்துக்கு இலக்கணம் 'அளவடிநான்கின கலிவிருத்தம்மே', வண்ண மாடங்கள் சூழ், "வாரணமாயிரம்" எனத் தொடங்கும் பதிகங்கள் கலி விருத்தத்துக்கு எடுத்துக் காட்டுகளாகஅமைவனவாம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

11. திருக்குறுந்தாண்டகம் – பாடபேதம் அட்டவணை

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
1.	உள்ளமோ ஒன்றில் நில்லாது (9)	உள்ளமோ **ஒன்றில்** நில்லாது	உள்ளமோ **ஒன்றி** நில்லாது
2.	இளைப்பினை (18)	மெய்ம்**மையைக்**காண் கிற்பாரே	மெய்ம்**மையே**காண் கிற்பாரே
3.	பிண்டியார் (19)	**முண்டி**யான் சாபம் தீர்த்த	**உண்டி**யான் சாபம் தீர்த்த

திருக்குறுந்தாண்டகம் – பாடபேதங்கள் குறிப்புகள்

1. பாசுரம்எண்:– 9
உள்ளமோ ஒன்றில் நில்லாது,
உள்ளமோ ஒன்றி நில்லாது

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடம் ஆகும். "(உள்ளமோவொன்றில்நில்லாது)ஹ்ருதயமானது ஒரிடத்தே தரியாதே" என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் முதல் பாடத்தையே ஏற்று உரை வரைந்துள்ளார். இப்பாடம் நின்ற வா நில்லாநெஞ்சினையுடையேன் என்னும் பாசுரப்பகுதிக்கு பெரிய திருமொழி (1 – 1 – 3) இணையானது. இரண்டாம் பாடம் பற்றிய குறிப்பு உரைகளில் இல்லை. இரண்டாம் பாடத்தைச் செய்யுள் விகாரமாகக் கொள்ளலாம் (கெடுதல் விகாரம் – ல் என்னும் எழுத்துக் கெடுதல்.

2. பாசுரம் எண்:– 18

மெய்ம்மையைக்காண்கிற்பாரே, மெய்ம்மையேகாண்கிற்பாரே

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடம் "(மெய்ம்மையே காண்கிற்பாரே) என்றும் உளனாயிருக்கிற ஸர்வேச்வரனைக் காண வல்லரே? காணமாட்டாரென்றபடி. **அதவா** (அல்லது) "இப்படி யோகசாஸ்திரத்தில் சொல்லுகிறபடியே உபாஸித்துக் காண்பார்க்குக் காணலாம் என்றுமாம்" என உரை உள்ளது. காஞ்சீஸ்வாமியும் இரண்டாம் பாடத்தையேஏற்றுள்ளார். (மெய்மையே – உள்ளபடியே, காண்கிற்பாரே – காண வல்லவராவரோ? காணகில்லார் என்றபடி). பெரியவாச்சான் பிள்ளையின் இரண்டு நிர்வாகங்களையும்காட்டியுள்ளார். எம்பெருமான் தானே காட்டிக் கொடுக்கவே காணமுடியும். (அர்ஜுனனுக்குத் தன் விசுவரூபத்தைக் காண அருள் செய்தான் ஸ்வப்ரயத்தனத்தால் இயலாது என்பது முதல் நிர்வாகமாகும். மெய்ம்மையைக்காண்கிற்பாரே. என்னும் முதல் பாடம் – இரண்டாம் வேற்றுமை விரி. இரண்டாம் பாடம். (1) ஏகாரம்வினாப்பொருளில் (முதல் நிர்வாகம்), (2) தேற்றப் பொருள் இரண்டாம் நிர்வாகம்.

எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்ஏயிரு வழியும் வினாவாகும்மே (நன்னூல் 67)

இப்பாசுரத்தில் ஏ ஈற்றில் வந்து வினாப் பொருளைத் தந்தது. முதல் பாடம், இரண்டாம் "உரை நிர்வாகத்துக்குப்" பொருந்தும்.

3. பாசுரம்எண்:– 19

முண்டியான் சாபம் தீர்த்த, உண்டியான் சாபம் தீர்த்த

என இருபாடங்கள். முதல் பாடம் வியாக்யான மூலபாடமாகும். "(முண்டியான்) தாபஸவேஷத்தையுடையருத்ரன்" என்று உரை. காஞ்சீ ஸ்வாமி முதல் பாடத்தையேற்று உரை வரைந்துள்ளார். உண்ணு முண்டியான் உண்ணும் உண்டியான் என்பனபாடபேதங்கள் தாபஸவேஷத்தையுடைய ருத்ரன்என்று வியாக்யான வாக்யம் காண்கையாலே **முண்டியான்**என்ற பாடம் அதற்குப் பொருந்தும் என்றருளியுள்ளார். மேலும், அவர், மோனை

இன்பத்திற்குச் சேர உண்டியான் என்ற பாடம் பொருந்தும் உண்டி – உணவு என்றும் அருளியுள்ளார்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

12. திருநெடுந்தாண்டகம் – பாடபேதம் அட்டவணை

எண்	இடம்	பாடம்	பாடபேதம்
1.	நெஞ்சுருகி (12)	வம்பார்**பூம்**வயலாலி மைந்தா	வம்பார் **பூ** வயலாலி மைந்தர
2.	முற்றாரா (19)	தன் **நிறையழிந்தாள்**	தன் **நிறைவு அழிந்தாள்**
3.	உள்ளூரும் சிந்தை (23)	திருவரங்கம் நம்மூ**ரென்ன**	திருவரங்கம் நம்மூ**ரென்ற**

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

திருநெடுந்தாண்டகம் – பாடபேதங்கள் குறிப்புகள்

1. பாசுரம் எண்:– 12

வம்பார்பூம்வயலாலிமைந்தா,
வம்பார் பூ வயலாலிமைந்தா,

என இரண்டு பாடங்கள். முதல் பாடம் வியாக்யானமூலபாடமாகும். “(வம்பார் பூ மித்யாதி) .... பரிமளப்ரசுரமான பூவையுடைத்தானவயல்.... என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமி இரண்டாம் பாடத்தைமூலபாடமாக ஏற்று உரையருளியுள்ளார். வம்பார் பூ வயலாலி என்றும் பதவுரையில்தந்துள்ளார். (வியாக்யானத்தில் உள்ள பொருள்தரப்பெற்றுள்ளது) ஈருரைகளிலும் பாடபேதங்கள்சுட்டப் பெறவில்லை.

பூ + வயலாலி = பூ வயலாலி, பூ + பாவை = பூம்பாவையாகும், பூ + சோலை = பூஞ்சோலையாகும். இங்கு ‘ம்’ வந்த காரணம் புலப்படவில்லை. காஞ்சீ ஸ்வாமி பாடத்தில் ‘பூவயலாலி’ என்று சரியாக உள்ளது.

2. பாசுரம் எண்:— 19

தன்நிறையழிந்தாள், தன் நிறைவழிந்தாள்

என இருபாடங்கள். இரண்டாம் பாடம் வியாக்யான மூலபாடமாகும் "(தன் நிறைவழிந்தாள்) .... அஸாதாரணமான ஸ்த்ரீத்வமும் அழிந்த தென்கிறாள்.... என்று உரை உள்ளது. காஞ்சீ ஸ்வாமியும் இரண்டாம் பாடத்தை ஏற்று உரையருளியுள்ளார். "தன் பெண்மைக்குரியஅடக்கமும்அழியப்பெற்றாள்" என்று உரையருளியுள்ளார். ஈருரைகளிலும் பாட பேதங்கள் இடம் பெறவில்லை நிறைவு + அழிந்தாள் = நிறைவழிந்தாள். (நன்னூல் 164). நிறை + அழிந்தாள் = நிறையழிந்தாள் (நன்னூல் 162). நிறை = மன அடக்கம் (கோனார் தமிழ் அகராதி பக். 341) மன அடக்கம் இழந்தாள் என்று பொருள்கொள்ள முதற்பாடமும் பொருந்தும்.

3. பாசுரம் எண்:— 23

திருவரங்கம் நம்மூரென்ன, திருவரங்கம் நம்மூரென்ற

என இருபாடங்கள். முதல் பாடம்வியாக்யான மூலபாடம்.

"நம்மூரென்ன = நமக்கு தேச மென்ன" என்று உரையருளியுள்ளார். காஞ்சீஸ்வாமியும் முதல் பாடத்தை யேற்றுள்ளார். இரண்டாம் பாடத்தில் 'நம்மூரென்ற' என்னும் ப்ரதீகம் 'நம்மூரென்ன' என்று கோஷ்டியில் ஸேவிக்கப் பெறும்.

கன்று மேய்த்த – கன்னுமேய்த்த, அன்றாயர் – அன்னாயர். அந்த முறையில் என்ன என்று ஸேவிக்கும் முறைக்கு உரிய பாடமாக என்ற என்று கொண்டு அப்பாடம் வந்திருக்க வேண்டும். உரைகளில் பாடபேதங்கள் இடம் பெறவில்லை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

குறிப்பு:– இரண்டாம் ஆயிரத்தின் முதல் பாடபேதம் பெரும்பதம் திரிந்து என்றும் இரண்டாம் ஆயிரத்தின் இறுதிப் பாடபேதம் திருவரங்கம் நம்மூர் என்ற என்றும் வந்துள்ளது. 'எங்கும் திரிந்து அரங்கனைச்சேவி' என்று பழமொழி உண்டு. அதை நினைவூட்டுவதுபோலஇரண்டாமாயிரபாடபேத அட்டவணை

உள்ளது. ஐந்தாம் பத்து எட்டாம் திருமொழி. (திருவரங்கன் விஷயம்) அடியிணை அடைந்தேன் என எட்டு முறையும் (1 – 8 பாசுரம்) பொன்னடியடைந்துய்ந்தேன் (9ஆம் பாசுரம்) என்று ஒருமுறையும் உள்ள திருமொழியை (5 – 8) நினைவூட்டுவதாக இப்பாடபேத அட்டவணையும் உள்ளமை ரஸமாக உள்ளது.

அடியேன்,

(காட்டு) மன்னார்குடி ஸ்தானீகம்வேங்கடார்யதாஸன்.
Dr. M.S. VENKATACHARYAR.